# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 24 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


# 2024 இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவைத் தோற்கடித்தேயாக வேண்டும்.

## பாஜக தோற்கடிக்கப்பட்டால் மட்டும் போதாது. பாசிச பார்ப்பனியத்தின் அடையாளமாக இருக்கிற ஆர்எஸ்எஸ் உள்ளிட்ட ஆரியப் பார்ப்பனிய பரிவாரங்கள் முழுமையாகத் துடைத்தெறியப்பட வேண்டும்.

**பாஜகவைத் தேர்தலில் தோற்கடிக்க வைப்பதன் மூலமே அதையும் செய்ய முடியும்.**

**பாஜக தோற்கடிக்கப்பட்டு விட்டால் உடனே எல்லாம் சரியாகிவிடுமா என்றால் உடனடியாகக் குமுக ஏற்றத்தாழ்வோ பொருளியல் சுரண்டலோ என அனைத்தும் மாறிவிடாதுதான்.. ஆனால் மாற்றத்திற்கான முயற்சிகளுக்கு வழி கிடைக்கும்..**

**குமுகத்தின் அவலங்களை, பொருளியல் அவலங்களை ஒழித்துப் புதிய விடுதலைக் குமுகத்தைப் படைக்கிறபடியான திட்டங்கள் கொண்ட கட்சிகளோ இயக்கங்களோ பாஜகவை, ஆர் எஸ் எஸ் உள்ளிட்ட அதன் பரிவாரங்களைத் தோற்கடிக்கும் நிலையில் வலுவாக இயங்கவோ மக்கள் செல்வாக்கைப் பெற்றிருக்கவோ இல்லை..**

**பாசிச பாஜக, பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய நிறுவனங்களோடு குறிப்பாக அம்பானி, அதானிகளோடு கூட்டுச் சேர்ந்து வளங்களை, மக்களின் உழைப்பைச் சூறையாடி வருகின்றது.**

**எனவே பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலீட்டு நிறுவனங்களை வீழ்த்தாமல் பாசிச பாஜகவை மட்டும் விழித்தி விடுவதால் எல்லாம் மாறிவிடாது தான்..**

**ஆரியப் பார்ப்பனியம் வருண வழித் தனது அதிகாரத் தன்மையை நிலைப்படுத்திக் கொள்வதற்காக வரலாறு நெடுக எப்பொழுதுமே ஆண்டை அதிகார வகுப்புகளோடு இணைந்து கொண்டேதான் இருந்துவந்திருக்கிறது. அரசர்களோடு, நிலவுடைமையாளர்களோடு, முதலாளிகளோடு, இன்றைக்குள்ள பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய வகுப்புகளோடு அவை உறவோடு இருந்தபடிதான் தன் பாசிச பார்ப்பனிய அதிகாரத் தன்மையை நிலைப்படுத்தி வருகிறது..**

பாசிச பார்ப்பனிய அதிகார வருணத்திற்கும் நிலவுடைமை அல்லது முதலாளிய அல்லது பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய வகுப்புகளுக்கும் இடையில் முரண்பாடு இல்லையா என்றால் இருக்கிறதுதான்.. ஆனால் அவை தங்கள் அதிகாரங்களை நிலைப்படுத்திக் கொள்வதற்கான சிறு சிறு அளவிலான முரண்பாடுகளே..

முதலாளிய வகுப்பு பேசுகிற முதலாளியின் நலன்களுக்கான சனநாயகத்தைக்கூட பாசிச பார்ப்பனிய வருண அதிகாரத்தினர் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் ஆரியப் பார்ப்பனிய வருண வகுப்பினர் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக முதலாளிய சனநாயகத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாகப் பறைசாற்றிக் கொள்கின்றனர்.

இந்த நிலையில் பாசிச பார்ப்பனிய வருண அதிகார வகுப்பையும் பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய வகுப்புகளையும் எதிர்த்துப் போராடி வீழ்த்துவதினால்தான் புதிய குமுக அமைப்பை ஓர் ஒப்புரவிய (சோசியலிச)க் குமுக அமைப்பை உருவாக்க முடியும்.

ஆனால், அப்படியாகச் செய்வதற்குக் கூட இரண்டு கட்டங்களைக் கடந்தே செல்ல வேண்டி உள்ளது..

முதலில் ஆரியப் பார்ப்பனிய பாஜகவின் பாசிச வெறி ஆட்சியை வீழ்த்தாமல் எந்த நகர்வையும் எய்திட இயலாது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால், அதை வீழ்த்துகிற திறன் படைத்தவர்களாகப் புதிய ஒப்புரவிய (சோசியலிச)க் குமுகத்தைப் படைக்கும் நோக்கம் கொண்டவர்களாக எந்தத் தேர்தல் கட்சியினரும் இல்லை என்பதே அவலம்.

இந்த நிலையில் முதலாளிய சனநாயக உரிமைகளைப் பேசுகிற அதற்காக இயங்குகிற தேர்தல் கட்சிகள், பாசிச பார்ப்பனிய பாஜகவை எதிர்த்துச் செயல்படுகிற போது அவற்றை, நிபந்தனைக்குட்பட்ட வகையில் ஆதரிப்பதன் வழியாகவே பாசிச பார்ப்பனிய வருண அதிகாரத்தை, பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய வகுப்பு அதிகாரத்தை அம்பலப்படுத்தவும் அவற்றை வீழ்த்துவதன் கோட்பாட்டைப்

வலிமைப்படுத்துவதற்குமான பெருங்கடமைகளைப் புரட்சி வழிக் கட்சிகள் செய்தாக இயலும்.

பாசிச பார்ப்பனிய பாஜகவை முதன்மை நிலையில் எதிர்த்திடும் இந்த வாய்ப்பின் வழியே பன்னாட்டுக் கார்ப்பரேட் முதலாளிய வகுப்பு எதிர்ப்பைச் செய்கிற சூழலையும் புரட்சி வழி இயக்கங்கள் நழுவவிடாமல் பயன்படுத்தியாக வேண்டும்.

அவ்வகையில் செயல்படாது, பாசிச பார்ப்பனிய பாஜகவை எதிர்த்துப் போராடும் அதே நேரத்திலேயே முதலாளிய சனநாயக உரிமைகளுக்காகப் பேசுகிற, போராடுகிற முதலாளிய சனநாயகத்தின் மீது நம்பிக்கை உள்ள மாநிலக் கட்சிகளையும் எதிர்த்து போராடிட வேண்டும் என்று எண்ணுவது முரண்பாடுகளைச் சரிவரப் பகுத்தாய்கிற இயங்கியல் அறியா நிலையினதாகவே கருத வேண்டி உள்ளது.

அந்த வகையில் இன்றைக்குப் பாசிச பார்ப்பனிய வெறிபிடித்த வருண அதிகார வகுப்பை முழுமையாக எதிர்த்துப் போராடுவது என்பதே கார்ப்பரேட் முதலாளிய அதிகாரத்தை எதிர்த்துப் போராடியாக வேண்டுமான திசை வழிக்காக மக்களைத் திரட்டுகிற பெரும் வாய்ப்பைக் கொண்டது என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நிலை இவ்வாறு இருக்க..

பாசிச பார்ப்பனிய பாஜகவை ஏன் வீழ்ச்சியாக வேண்டும் என்பதையும் நடைமுறையோடு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டியுள்ளது..

வரலாற்றில் இதுவரை காணப்படாத பேரழிவைத் தமிழ்நிலம் சந்திக்கத் தொடங்கியிருக்கிறது.

எதிர்காலத்தில் தமிழ்நாடு என்ற ஓர் அடையாளத்தைக்கூட இல்லாதபடி ஆக்குவதற்கான சூழ்ச்சிகள் நிறைந்த திட்டத்தோடு ஆர் எஸ் எஸ் பாஜக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஏறத்தாழ 100 ஆண்டுக் காலத் திட்டம் அது..

1925 இல் ஆர்எஸ்எஸ் தொடங்கப்பட்ட போதே திட்டமிடப்பட்டது..

1952 இல் பாரதிய ஜன சங்கம் கட்சியின் தேர்தல் வழியாகவும், 1949 இல் பாரதிய வித்யார்த்தி பர்ஷத்து வழியாகவும், 1952 இல் வனவாசிகள் கல்யாண் ஆசிரம மூலமாகவும், 1955 இல் பாரதிய மஸ்தூர் சங்கம் மூலமாகவும் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட வேலைகள்.. பின்னர் நூற்றுக்கும் மேலான கிளை அமைப்புகள் வழியாக..1980 இல் தொடங்கி பாரதிய ஜனதா கட்சியின் மூலமாக அந் நோக்கத்தில் வேலைகளை நடத்தி வருகின்றனர்..

காசுமீரம் என்கிற ஒரு மாநிலத்தையே எப்படி இல்லாமல் செய்து விட்டார்களோ அப்படியே மொழி, இன வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்ட மாநிலங்களையெல்லாம் இல்லாமல் செய்து விட்டுப் **'பாரதம்' பாரத வர்ஜம்' ஆரியம், ஆர்யவர்த்தம்** என்றெல்லாம் புராணப் புளுகுகளைக் காட்டி, பார்ப்பனியத்திற்குரிய நாடாக அடையாளப்படுத்திட முழுமூச்சாக வேலை செய்து வருகிறார்கள்..

ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பல வேறுபாடுகளைக் கொண்ட இந்திய ஆட்சி அதிகாரத்திற்குட்பட்ட இன மக்கள் என்ன நிலையிலும் ஒன்று சேர்ந்து ஒரே காரணத்திற்காக இந்தியா முழுமையும் போராடிட இயலாது என்பதை இந்தியப் பொதுமையர்கள் விளங்கிக் கொண்டார்களோ இல்லையோ பாசிச பார்ப்பனியம் நன்கு விளங்கிக் கொண்டுள்ளது.

எனவேதான் இந்து மதம் எனும் பெயரில், இந்தியப் பண்பாடு எனும் பெயரில், புராணங்கள் வேதங்கள் எனும் பெயரில் என ஏதோ ஒரு நிலையில் இந்தியா, பாரதம் என்பதை முன்னிறுத்தித் தேசிய இன உரிமைகளை நசுக்கவும் அவற்றின் அடையாளங்களை மறைத்து விடவும் திட்டமிட்டிருக்கிறார்கள்..

தேசிய இன அடையாளங்கள் இருந்தால் அந்தந்தத் தேசிய இனங்களும் உரிமை கேட்கும் என்னும் நோக்கில்தான் மொழிமாநில அமைப்பையேகூட மாற்றத் திட்டமிடுகின்றனர். காசுமீரத்தைச் சிதைத்ததும் மணிப்பூரைக் கூறு பிரிக்கக் கலவரம் ஏற்படுத்தியதும் பார்ப்பனிய பாசிச ஏற்பாடுகளே.

எனவேதான்...

18 ஆவது நாடாளுமன்றத் தேர்தலை அவற்றுகுரிய வாய்ப்பாக ஆர்எஸ்எஸ்- உம் பாஜகவும் அமைத்துக் கொண்டுள்ளன..

ஒன்றியம் எனும் அடையாளத்துக்குரிய பல்வேறு அளவீடுகளில் ஆன இன,மொழி, குமுக, அரசியல், பொருளியல் கால வளர்ச்சிகளைக் கொண்ட அடையாளங்களையெல்லாம் அழித்துவிட்டு ஆரியப் பார்ப்பனிய அதிகாரத்திற்குட்பட்ட நடைமுறைகளை மட்டும் அமைத்து வருகிறது பாஜக.

இதற்கு முன்பு இருந்த காங்கிரஸ் கட்சியும் அந்தக் காலத்தில் அதே வகை நிலைப்பாடு உடையது என்றாலும். சனநாயகம் என்கிற முகத்திரையுடன் அதையெல்லாம் மெதுமெதுவாகச் செய்தது. அதைவிடப் பன்மடங்கு பாசிச பார்ப்பனிய வெறி கொண்டு ஆர் எஸ் எஸ் இன் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்குகிற பாஜக வின் செயற்பாடுகள் தீவிரப் பார்ப்பனிய வெறி கொண்டவை..

கடந்த மார்ச் 16 ஆம் நாள் பதினெட்டாம் நாடாளுமன்றத்திற்குரிய தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் என்ற போதிலும்..

அந்தத் தேர்தலை அறிவிப்பதற்கு இரண்டு நாள் முன்புதான் அதாவது மார்ச் 14ஆம் நாள் புதியதாக இரண்டு பேரைத் தேர்தல் ஆணையர்களாகப் பொறுப்பு அமர்த்தம் செய்தது பாஜக அரசு..

அந்த இருவரும் பாஜகவின் பார்ப்பனியக் கருத்தியலுக்கு இணக்கமானவர்கள் என்பது அறிய வேண்டியது..

புதிய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள ஞானேசு குமார், கேரளப் பிரிவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி. இந்திய உள் துறை அமைச்சகத்தில் அதிகாரியாகப் பணியாற்றியபோது, இவருடைய மேற்பார்வையில்தான் காசுமீரக்குச் சிறப்பு மதிப்பீடு அளித்துவந்த அரசமைப்புச் சட்டப் பிரிவு 370- ஐ நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.. என்பதும்,

சுக்பீர் சிங் சாந்து என்ற மற்றொரு அதிகாரி இந்திய அரசின் உயர்கல்வித்துறைக்கு அதிகாரியாக இருந்து நீட் உள்ளிட்ட செயல்பாடுகளுக்கு வழியமைத்து முழு ஒத்துழைப்புக் கொடுத்தவர் என்பதும் கவனிக்கத்தக்கது..

அதுமட்டுமின்றி, தேர்தல் ஆணையர்கள் புதிதாக அமர்த்தப்பட்ட அதே நாளில்தான், ஒரே நாடு ஒரே தேர்தல் என்கிற பாஜகவின் திட்டமிட்ட சூழ்ச்சித் திட்டத்திற்கான 18,656 பக்கங்கள் கொண்ட இராம்நாத் கோவிந்தின் தலைமையில் உருவாக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது அமித்ஷா உள்ளிட்டோரைக் கொண்ட (தந்திரக்) குழு..

கல்விப் பட்டியலை இந்திய அரசாட்சி அதிகாரத்திற்கு உரியதாகக் காங்கிரஸ் கட்சி நெருக்கடி காலத்தில் (1976- 77 இல்) கொண்டுசென்றது என்றால், அந்தக் கல்வித்துறையை முழுக்க முழுக்கப் பார்ப்பனியக் கட்டுப்பாட்டுக்குள் காவி மயமாக்குகிற அனைத்து வேலைகளையும் பாஜக செய்து வருகிறது..

எல்லாவற்றுக்கும் இந்திய அரசாட்சியின் வழியான நுழைவுத் தேர்வு வழி மாநில அதிகாரங்களைக் கல்வித்துறையில் முற்றும் முழுமையாக அழித்து வருகிறது..

பல்கலைக்கழக மாணியக் குழு என்கிற பெயரில் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களை அமர்த்துதல் தொடங்கி அனைத்துக் கட்டுப்பாடுகளையும் ஆளுநர் வழியே செய்கிறது இந்திய அரசு.. ஏபிவிபி என்கிற ஆர்எஸ்எஸ் இன் மாணவர் அமைப்பை வலுப்படுத்திக் கொண்டதும், அம்பேத்கர், பெரியார், மார்க்சு அடையாளங்களையே பல்கலைக் கழகங்களில் இல்லாமல் செய்ததும் அவர்களின் திட்டமிட்ட சூழ்ச்சிகள்.

பல்லாயிரம் ஆண்டுகள் பெருமையுடைய தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளக் கூடாது, எங்கும் பதிந்துகொள்ளக்கூடாது என்றும் மறுக்கிறார்கள்..

வந்தேறியர்களின் அரசாட்சியில்கூடத் தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ள முடிந்தது..

ஆனால், பாசிச பார்ப்பனிய ஆட்சியில் தமிழர்கள் தங்களைத் தமிழர்கள் என்று பதிந்து கொள்ளக் கூடாதாம்..

தமிழ்நாட்டுக் கனிம வளங்கள், கடல் வளங்கள், இயற்கை வளங்கள், உழைப்புச் செல்வங்கள் எவையும் கொள்ளையடித்துச் சூறையாடப்பட்டுத் தமிழ்நாட்டிலிருந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள்..

சாலை சுங்கச்சாவடி வழி வரி, வணிக வரி, ஜி எஸ் டி வரி.. என மக்களிடமிருந்து வரிகளின் பெயரால் இந்தியப் பார்ப்பனிய ஆட்சியர்கள் கொள்ளையடிக்கிறார்கள்..

தமிழ் மொழியின் பயன்பாடுகளை இந்திய அரசு நிறுவனங்களில்

குறிப்பாகத் தொடர்வண்டித் துறைகளில், வானூர்தி துறைகளில் இந்திய அரசுத் துறைச் செயலகங்களில், கல்வி நிறுவனங்களிலெல்லாம் முற்றிலும் இல்லாமல் செய்திருப்பது, தமிழ்நாட்டின் பழஞ்சிறப்புகளை எல்லாம் அழித்து வருவது, தமிழ்நாட்டின் தொல் மருத்துவமான சித்த மருத்துவத்தை வளர்த்தெடுக்கத் தடையாக இருப்பது, சித்த மருத்துவப் பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்த விடாமல் இருப்பது, பிற வட மாநிலத்தினர் திறம் இல்லாது தமிழர்கள் மட்டுமே பெரும்பான்மையுள்ள நீண்ட வரலாற்றுச் சிறப்பு கொண்ட தமிழ்நாட்டின் வானியல் அறிவை ஐஎஸ்ஆர்ஓ என்கிற பெயரில் விழுங்கியிருப்பது என எண்ணற்ற தமிழ் அழிப்பு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்..

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர்களை வைத்துக்கொண்டு அதிகார வெறி பிடித்து ஆட்டம் போடுகிறார்கள்..

மாநில உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறித்து வருகிறார்கள்.. ஏறத்தாழ மாநிலங்களின் எல்லா உரிமைகளும் பறிபோய் விட்டன..

நாடாளுமன்ற மக்களவை என்பதே ஒரு கண்துடைப்பு..

கடந்தாண்டு திசம்பர் மாதம் நூற்றுக்கணக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருக்கிறது இந்திய அதிகார அரசு..

543 உறுப்பினர்கள் உள்ள நாடாளுமன்றத்தில் 39 உறுப்பினர்கள் கொண்ட தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வலியுறுத்திப் போராடினால்கூட பெரும்பான்மை இல்லாத நிலையில் தமிழ்நாட்டு நலனுக்காக ஒரு சிறு மாற்றத்தைக்கூட நாடாளுமன்றத்தில் தீர்மானமாகக்கூட கொண்டுவர முடியாது என்று சொன்னால் நாடாளுமன்றம் எதற்கு? அதன் மக்களவை எதற்கு?..

நாடாளுமன்றத்தினால் தமிழ்நாட்டிற்கு எந்த வகைப் பயனும் இல்லை.. தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி எந்த மாநிலங்களுக்கும் பயனில்லை..

எனவே, நாடாளுமன்றத்தின் மக்களவை என்பது தேவையற்றது..

மாநிலங்களின் அவையே போதுமானது. அதன் வழியாகச் சம உரிமை உள்ள கலந்தாய்வு நடைமுறை உள்ள மாநிலங்கள் அவை மட்டுமே இருக்கிறபடியாவது முதலில் நாடாளுமன்றத்தை மாற்றி அமைக்க வேண்டும்..

இந்திய அரசின் அதிகாரக் குவியல்களையெல்லாம் தகர்த்தெறிந்தாக வேண்டும்..

தொடர்வண்டி துறை துறைமுகத்துறை வானூர்தித் துறை உள்ளிட்ட தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து துறைகளையும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும்.

அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டுக் கார்ப்பரேட் கொள்ளைகளையெல்லாம் எந்த இழப்பீடும் இல்லாமல் பறிமுதல் செய்து தமிழ்நாட்டு அரசே நடத்த வேண்டும்.

மதத்தை வைத்து அரசியல் பேசுகிற இழிவுகளைத் தடை செய்ய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ்த் தேசியப் பொருளியலைத் தற்சார்பு பொருளியலாக உறுதிப்படுத்திட வேண்டும்.

இந்த வகையில் இன்றைய முதற் பெரும் கடமையாக இந்தியப் பார்ப்பனிய பாசிச பாஜகவை வீழ்த்துவதன் வழியேதான் இவை அனைத்தையும் செய்ய இயலும் என்பதைப் பரப்பியாக வேண்டும்.

அத்தகைய நோக்கத்தில்..

பாஜகவைத் தோற்கடித்தேயாக வேண்டும் என்பதே இன்றைக்கு அனைவர் முன்பும் இருக்கிற முதற்பெரும் பணியாக மேற்கொள்ள வேண்டும்.

**பொழிலன்**

---

**கடந்த பிப்ரவரி 19, ஆம் நாளன்று திருச்சி செய்தியாளர் அரங்கில் தமிழக மக்கள் முன்னணி வெளியிட்ட செய்தி அறிக்கை..**

## 2024 நாடாளுமன்ற தேர்தலில் யாரைத் தேர்வு செய்யலாம்.. தமிழக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு என்ன?...

சனநாயகமற்ற இன்றைய தேர்தல் முறையில் தமிழக மக்கள் முன்னணிக்கு நம்பிக்கை இல்லாத போதும் இன்றைய காலச் சூழலில் மக்கள் விரோத, இன விரோத பாசிச பார்ப்பனிய பாஜகவை வீழ்த்த வேண்டிய தேவை இருக்கிறது . கீழ்க்காணும் - ஐந்து நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு பரப்பல் செய்கிற நடைமுறைபடுத்தப் போராடுகிறவர்களை மக்கள் ஆதரிக்கலாம் என இம்முடிவைத் தமிழக மக்கள் முன்னணி எடுத்திருக்கிறது..

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சாதிவெறி, மதவெறி, சுரண்டல் வெறி, மாநில அடையாளங்களையெல்லாம் அழிக்கும் பார்ப்பனிய வெறி கொண்ட**

## பாசிச பார்ப்பனிய பாஜக வையும், அதனோடான கூட்டணிக் கட்சிகளையும், அதற்கு ஆதரவாகச் செயற்படும் அரசியல் செயற்பாடுகளையும் வீழ்த்துவோம்!

## பாசிச பார்ப்பனிய பாஜகவை எதிர்க்கிற தேர்தல் அரசியல் கட்சிகளை அரசியல் நிபந்தனைகளுடன் மக்கள் ஆதரிக்கலாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்..

**அரசியல் நிபந்தனைகளாகக் கீழ்க்காணும் ஐந்து நிபந்தனைகளைத் தமிழக மக்கள் முன்னணி அறிவிக்கிறது..**

**அ. கல்வி, கனிம வளம், கடல் வளம், வரிகள் பெறுவது, தொழில், உழவு உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் மாநிலங்களுக்கே உரியவை என்று அறிவிப்பதுடன், தமிழ் வழியிலேயே கல்வி, அரசு அலுவல்கள், வழிபாடு, வழக்கு மன்ற நடவடிக்கைகளை முழுமையாக அமைப்பது போராடுவது.. இந்தி, சமஸ்கிருதத் திணிப்புகளை எந்த வடிவத்திலும் ஏற்க மறுப்பது..**

**ஆ. ஆளுநர் உள்ளிட்ட எந்த இந்திய அரசதிகார அமைப்பும் தமிழ்நாட்டில் (பிற மாநிலங்களிலும்) இருக்கக் கூடாது.. மேலும் ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் உள்ளிட்ட அதிகாரிகளையும் தமிழ்நாட்டு அரசே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என அறிவிப்பது.. அனைத்து அதிகாரிகளும் மக்களின் கேள்விகளுக்குவிடை சொல்பவர்களாக இருக்க வேண்டும்..**

**இ. அம்பானி அதானி உள்ளிட்ட பன்னாட்டு மூலதனங்கள் எவையும் மாநிலங்களுக்குள் கொள்ளையடிக்க அனுமதிக்க முடியாது. அவற்றின் முதலீடுகளை அந்தந்த மாநில அரசுகளின் முதலீடுகளாக மாற்றுவதுடன் தமிழ்நாட்டின் தேசியத் தொழில்துறையை வலிமைப்படுத்தி, தமிழ்நாட்டின் தேசியத் தொழில் நிலைக்கு ஏற்ற வரிக்கொள்கையைத் தமிழ்நாடு அரசே தீர்மானிக்கிற வகையை உருவாக்குவது.**

**ஈ. நடுத்தர, சிறு உழவு நிலைகள் புதிய வகையில் மேம்படுத்தப்படுவதுடன், உழவு விளை பொருட்களை குறைந்த விலைக்குக் கொள்ளை அடிக்கும் முற்றாதிக்கக் 'கார்ப்பரேட்' முதலாளிகளின் பிடியிலிருந்து வேளாண்மையை மீட்பதுடன், புதிய கூட்டுறவுப் பண்ணைகளாக்கித் துணைத் தொழில்களை உருவாக்கி வேளாண்மையைப் பன்மடங்கு உயர்த்துவது.**

**உ. சாதியக் குடியிருப்புகளை அகற்றி, சாதிய குலங்களாக வாழும் அடிமை நிலைகளை மாற்றி பரந்த அறிவியல் வழிபட்ட பொதுமை வாழ்க்கை முறைக்கான சூழ்நிலையை உருவாக்குவது.**

# தோழர் அருள்மொழி புகழ் ஓங்குக!

வீரஞ்செறிந்த சமுதாய மாற்றத்திற்கான போர்க்களத்தில் சுடர் நெருப்புக் காற்றாய் உலாவி வரும் தோழர் அருள்மொழி 5.7.1946- இல் பிறந்தார். தந்தை வே. ரெ. தனஞ்செயன், தாயார் செங்கம்மாள் ஆவர். பிறந்த ஓராண்டில் இலங்கைக்குக் குடும்பத்தோடு சென்று, இளம் அகவையிலேயே எலிசபத் ராணி நுவரெலியா வரும்பொழுது கண்டித்து ஊர்வலம் சென்றார். திரும்பத் தமிழக தாயகம் திரும்பி வீரமங்களம், புதுக்கோட்டையில் கல்வி பயின்றார். மாணவப் பருவத்தில் தோழர் ஜீவா அவர்களைக் கண்டு உரையாடினார். மார்க்சிய இலெனினிய சித்தாந்தத்தில் பற்றுக்கொண்டு தீவிரமாகச் செயல்பட்டார்.

இளமைப்பருவத்தில் தோழர் இலெனின் (எ) ரெங்கசாமி, தோழர் தியாகு, தோழர் குருமூர்த்தி, தோழர் கணேசன் ஆகியோருடன் தோழமை பூண்டிருந்தார். பத்துவக்கோட்டை தோழர்கள் செல்வராக, ரெங்கசாமி ஆகியோருடன் காவல் துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

மாநிலத் தலைவர்களாய் உள்ள தோழர் அரங்க. குணசேகரன், தோழர் குணா, தோழர் சின்னதுரை ஆகியோர்களைப் புரட்சிகர இயக்கத்தில் பங்குபெற வளர்த்தெடுத்தார், புரட்சிகர இயக்கத்தோடு தோழர் த.அருள்மொழி முனைப்புடன் செயல்பட்டார். இ.க.க (மா.லெ) தோழர்களோடு தமிழகத்தின் பல பகுதிகளில் பணியாற்றினார். தோழர் சாரு மறைவிற்குப் பின்னர் தோழர் சாகர் காலத்தின் இடைவெளியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை(மார்க்சிஸ்ட்) இந்தப் பகுதியில் இயக்கமாக்கி ஆலங்குடி வட்டத்தில் முதல் வட்டச் செயலாளர் ஆனார். கறம்பக்குடி தோழர் உடையப்பன், கும்மங்குளம் தோழர் செபஸ்தியான், கீரமங்கலம் தோழர் இராசரத்தினம், மாங்காடு அண்ணாமலை, தோழர் கண்மணி ஆகிய தலைமைக் குழுத் தோழர்களை உருவாக்கினார். குளமங்கலம் தோழர் ராசகோபால் போன்ற தோழர்களைக் கட்சியில் ஒருங்கிணைத்தார். முதலிப்பட்டியில் இருந்து தெற்கு குணமங்களம் வரை இரகுநாதபுரம், மங்காளிகொல்லைபட்டி உட்பட 33 கட்சிக் கிளை உருவாக்கினார். இந்தப் பகுதியில் மார்க்சிஸ்ட் கட்சி உருவாக ஆணிவேராகக் கிளைகள் பரப்பிய கொள்கைக் கோட்டையாக உருவாக்கப் பாடுபட்டார். பின்னர் புரட்சிகர அரசியல் கட்சி செயல்படத் தொடங்கியவுடன் மீண்டும் தமிழக மக்கள் முன்னணியின் மாவட்டத் தலைவராகப் பணிதொடர்ந்தார். தமிழக மக்கள் முன்னணியின் முதல் பேரணி சென்னையில் நடைபெற்றபோது எழும்பூர் தொடர்வண்டி நிலையத்தில் பெரிய சச்சரவு ஏற்பட்டது. மறுநாள் நாளிதழ்களில் முதல் பக்கச் செய்தியாக வந்தது. ஈழத்தமிழர்களுக்காக இ.க.க (மா.லெ) விடுதலையில் தமிழக ஆளுநர் மாளிகையை முற்றுகைப் போராட்டம் நடத்தினர். முதன் முதலில் ஈழத்தமிழர்களுக்காக நடத்தப்பட்ட போராட்டமாகும்.

பல்வேறு போராட்டங்களில் திருச்சி, சென்னை, மதுரை, புதுக்கோட்டை, வேலூர் போன்ற சிறைகளில் மக்களுக்காகப் போராடி பலமுறை சிறை சென்றுள்ளார். ஈழத்தமிழர்களுக்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டார். புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையத்தில் பெருஞ்சான்றாளர் முனைவர் அம்பேத்கருக்குச் சிலை நிறுவத் தோழர்களோடு பங்கேற்றார்.



மேலாத்தூருக்கு நகரப்பேருந்து செல்ல போராட்டம் நடத்தினார். மேலாத்தூருக்குப் பேருந்து செல்கின்றது. வறட்சி நிவாரணக்குழுவில் இடம்பெற்று ஒன்றுபட்ட வட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களுக்கும் குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, சாலைவசதியை வாதாடி அமைத்துத் தந்தார்.

உஞ்சனை, தேவகோட்டை, மாடக்கோட்டையில் தொடர்போராட்ட பங்களிப்பு, வல்லம் தோழர் வெங்கடாசலம் தொடர்பாக அரசியல் படைப்பிரிவு பணி, கீழ்வெண்மணி தொடர்பாக மங்கலூரில் இருந்து புறப்பட்ட அரசியல் பணி மங்கலூரில் நிறைவடைந்த வரலாற்றுப் பங்களிப்பு. கணக்கு நேர் செய்த வரலாறு.

சுதந்திர தின 25- ஆம் ஆண்டு வெள்ளிவிழாவில் வானொலியில் கவியரங்கில் பங்கேற்பு, முதன் முதலில் தொடங்கிய திருக்குறள் கழகம் மாநாட்டில் தொடக்க விழாவில் குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பங்கேற்பு எழுத்துலகம் நடத்திய கவித்தொகுப்பில், போட்டியில் 'நெருப்புப் பூக்கள்' முதல் பரிசு 1968- இல் தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்ட 100 கவிஞர்களில் இவரும் ஒருவர் ஆவார். தமிழிசையின் மீது பேரார்வம். தமிழகப் பண்பாட்டு மையத்தில் நிர்வாகியானார். தமிழக - கேரள எல்லையில் உள்ள மங்களமேடு கண்ணகித் திருகோயிலில் ஆண்டுதோறும் விழா எடுத்துச் சிறப்பித்தல். திருத்தணியை மீட்ட திரையிசை கவிஞர் கவி. காமு செரிப் ஆண்டுவிழாவும், அறிவியல் சித்தர் சிவவாக்கியருக்கு ஆண்டுதோறும் விழாவும், பண்பாட்டு மையத்தின் சார்பில் கலை இரவு பங்கேற்று நடத்துகின்றார்.

எதிர்நீச்சல் அரசியல் வாழக்கையில் சமூக கொடுமைகளைக்கண்டு ஆர்த்தெழுந்து போராடுகின்ற, சமூக மாற்றத்திற்காக, ஈகத்தோடு பணியாற்றுகின்ற புரட்சிகரமான சிந்தனையில், புரட்சிகரமான கிளர்ச்சிக்காரர் தோழர் த.அருள்மொழி.
தோழர் அருள்மொழி புகழ் ஓங்கட்டும்.. புரட்சி வாழ்த்துகள்...

**அ, சி. சின்னப்பத் தமிழர்**




## பாவலரேறு பெருஞ்சித்திரனார் எழுத்தடைவுகள்

============

**பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் எழுத்தாக்கங்கள் அனைத்தும் ஒருசேர 16 மடலங்களாக வெளிவர இருக்கின்றன..**

============

**எதிர்வரும் சூன் மாதம் பாவலரேறு நினைவேந்தல் நாளையொட்டி வெளியிடப் பெற இருக்கிற தொகுப்பு நூல்களுக்கான முன் வெளியீட்டுத் திட்ட அறிவிப்பு செய்யப்பெற்றுள்ளது.**

============

அதற்கான அறிவிப்புத் துண்டறிக்கையில் முழு விளக்கங்களும் உள்ளன..

அறிக்கைகள் வேண்டுவோர் கீழ்க்காணும் அலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டு அறிக்கைகளையும் விளக்கங்களையும் பெறலாம் :

9841668320, 9092948002 , 9841444953

# சனாதனதர்மத்தைப் பாதுகாக்க அணி வகுக்கும் நீதிமன்றத் தீர்ப்புகள்!

**பேராசிரியர் த செயராமன்**

நெறியாளர் தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் சமீபத்தியத் தீர்ப்புகள் ஒருண்மையைப் புலப்படுத்துகின்றன. இந்துத்துவ இலக்கான இந்து ராஷ்டிரத்தைப் படைப்பதற்கு அரசியல்வாதிகள், ஆட்சியாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள், ஆய்வாளர்கள், பல்துறை செயற்பாட்டாளர்கள் மட்டுமின்றி, நீதித்துறையும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து வருகிறது. இந்துப் பெரும் பான்மைக்கு இணக்கமானத் தீர்ப்புகள் இவை. இந்திய அரசியலமைப்பின் உணர்வுக் கெதிரான, அதன் அடிப்படை உணர்வையே திரித்துப் புரட்டிப் போடுகிற கருத்துகளோடு தீர்ப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தின் தனித் தகுதியை உத்தரவாதப்படுத்தியிருந்த அரசியல் சட்டக்கூறு 370- ஐ மோடி அரசு நீக்கியதை உச்சநீதி மன்ற அமர்வு (டிசம்பர் 2023) நியாயப்படுத்திய விதமும், பாபர் மசூதியை இந்துமதவாதிகள் இடித்த வழக்கில் குற்றவாளிகளை விடுவித்த விதமும் (2020), பாபர் மசூதியை இடித்தவர்களுக்கே அந்த இடத்தை உரிமையாக்கி ஒப்படைத்த விதமும் (2019), சனநாயக உணர்வு உள்ளவர்களுக்கு அதிர்ச்சியை அளித்தன. இவை எதிர்கால இந்துராஷ்டிரத்திற்கு அவசியமானத் தீர்ப்புகள். இந்துத்துவ வெறியர்களின் அடாவடி நடவடிக்கைகளுக்கு இத் தீர்ப்புகள் சட்ட அங்கீகாரம் அளித்தன.

## ஜம்மு - காஷ்மீர் தீர்ப்பு காட்டுவது என்ன?

2019 - இல் மோடி அரசு இந்துராஷ்டிரத் திட்டத்துடன் பதவியேற்றது. 2019- இல், அரசியல் சட்டக் கூறு - 370- ஐ குடியரசுத் தலைவர் நடவடிக்கை மூலம் நீக்கியது. இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான செயல். மீண்டும் ஜம்மு- காஷ்மீருக்கு மாநிலத் தகுதி வழங்கப்படும் என்ற சொல்லளவிலான உறுதிமொழியை தான் ஏற்றுக் கொண்டதாகக் கூறிக்கொண்டு, அரசியல் சட்டக் கூறு 370 - ஐ ஒழித்துக் கட்டியதை உச்ச நீதிமன்றம் ஏற்றது. அரசியல் சட்டக் கூறு 370 ஒழிப்பு என்பது அரசியல் சட்டத்திற்கு ஏற்புடையதா இல்லையா என்பதைப் பற்றி உச்சநீதிமன்றம் வாய் திறக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ். அமைப்பு நீண்ட காலமாக அரசியல் சட்டக் கூறு 370 என்பது தற்காலிகமானதுதான் என்று கூறி வந்தது. அதாவது ஜம்மு-காஷ்மீரில் மக்கள் கருத்து வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுத்தவுடன் அரசியல் சட்டக் கூறு 370-ம் முடிவுக்கு வந்துவிடும் என்ற வகையில் அது தற்காலிகமானது. ஆனால் கருத்து வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறிக் கொண்ட ஆர். எஸ். எஸ். அரசியல் சட்டக்கூறு - 370 ஐ ஒழித்துக் கட்டுவதில் குறியாக இருந்தது. மோடி அரசு அதைத்தான் செய்தது. இதை அப்படியே உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது.

ஜம்மு-காஷ்மீரை பொறுத்தவரை அரசியல் சட்டக் கூறு - 370- ஐ நீக்க வேண்டுமானால் காஷ்மீர் அரசியலமைப்பு அவை குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்தாலொழிய அவ்வாறு நீக்க முடியாது. ஜம்மு-காஷ்மீர் ஒரு மாநிலமாக இந்தியாவுடன் இணைந்து இருப்பதற்கு அதற்கு அளிக்கப்பட்ட உத்தரவாதங்களும், உறுதிமொழிகளும், அரசியல் சட்டத்திலேயே பதிவு செய்யப்பட்ட ஏற்பாடுகளும் சிறிது சிறிதாக ஒழித்துக் கட்டப்பட்டன. இதுகுறித்து உச்ச நீதிமன்றம் வாய் திறக்கவே இல்லை. 'இந்தியாவுடன் இணைந்த பிறகு எந்த இறையாண்மையையும் ஜம்மு - காஷ்மீர் கொண்டிருக்கவில்லை' என்று தலைமை நீதிபதி சந்திர சூட் கூறியது இந்துத்துவவாதிகளின் குரலாகவே ஒலித்தது.

பொதுவாக, மாநிலங்களுக்கு இறையாண்மை உண்டு என்பதுதான் இந்திய அரசியல் சட்டம் எழுதும்போது அங்கிருந்த உறுப்பினர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், அளிக்கப்பட்ட உறுதிமொழியும் ஆகும். அண்ணல் அம்பேத்கர், மத்தியில் ஒன்றிய அரசும், விளிம்பில் மாநில அரசுகளும் அரசியலமைப்புச் சட்டம் அளித்துள்ள அந்தந்தத் துறைகளில் இறையாண்மையைக் கொண்டிருக்கும் என்று கூறினார். ஆனால் அது நடைமுறையில் இல்லாமலே போனது.

## பாபர் மசூதி குறித்த தீர்ப்பு:

இதுபோன்றே, முரண்பாடுகளுடைய அயோத்தியா தீர்ப்பையும் உச்சநீதிமன்றம் வழங்கியது. 2019- ஆம் ஆண்டு தீர்ப்பில் மசூதிக்குக் கீழே கோயில் இருந்ததற்கு சான்றுகள் இல்லை என்று உச்சநீதிமன்றம் கூறியது. ஆனால் மசூதி கட்டப்பட்ட இடத்திற்குக் கீழே இஸ்லாமியருக்குத் தொடர்பற்ற கட்டுமானம் இருந்தது என்றது. மசூதி உடைப்பு என்பது ஒரு 'பெரும் குற்றம் ' என்றும் திருவாய் மலர்ந்தருளியது. ஆனால், அங்கே கோயில் இருந்தது என்பது இந்துப்பெரும்பான்மையினரின் நம்பிக்கை என்றும், உண்மைகளை விடவும் சான்றுகளை விடவும் நம்பிக்கையை உயர்வாகக் கருதுவதாகக் காட்டிக் கொண்டது. மக்களின் நம்பிக்கையை நீதிமன்றம் கேள்வி கேட்க முடியாது என்றது. பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவதற்காகப் புதிதாக ஒரு அறக்கட்டளையை உருவாக்க வேண்டும் என்று உத்தரவிட்டு, 2.77 ஏக்கர் நிலத்தை அதனிடம் ஒப்படைத்தது. அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது. இன்று அநீதியின் சின்னமாக இராமர் கோயில் எழுந்துள்ளது. பாபர் மசூதி தகர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் எஞ்சியிருந்த 32 பேரையும், சி. பி. ஐ. சிறப்பு நீதிமன்றம் விடுவித்தது.

## வழிபாட்டிடங்கள் சட்டத்தை செயலற்றதாக்குவது ஏன்?

1991 - இல், வழிபாட்டிடங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் கொண்டுவரப்பட்டது. மதச்சார்பின்மைக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும் என்பதாலும், பாபர் மசூதியைப் போல தொடர்ந்து வழிபாட்டிடங்கள் தகர்க்கப்பட்டுவிடக் கூடாது என்பதாலும், அமைதியைப் பாதுகாக்கும் வகையிலும் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அடுத்தடுத்து மசூதிகளை இடிக்கும் நோக்கத்தோடு இந்து மதவெறி அமைப்புகள் குரல் எழுப்பின. மசூதிகள் மீது இந்துத்துவவாதிகள் உரிமை கோரும் மனுக்களை நீதிபதி சந்திரசூட் அனுமதித்தார். ஞான வாப்பி மசூதி, மதுரா மசூதி வழக்குகளில் நீதிமன்றம் ஒரு தளர்வான போக்கை வெளிப்படுத்தியது. 1991 - ஆம் ஆண்டில் வழிபாட்டிடங்கள் சட்டம் எந்த காரணத்திற்காக இயற்றப்பட்டதோ அந்த காரணத்தில் அது உறுதியாக இல்லை. உச்ச நீதிமன்றத்தின் இத்தகைய இந்து அமைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் போக்கு ஆர்.எஸ்.எஸ்- இன் எதிர்கால இந்துராஷ்டிர திட்டத்திற்கு இணக்கமான ஒன்றாகும். இத்தகைய போக்கு இப்போது அதிகரித்து வருகிறது.

ஞானவாப்பி மசூதியையும், பிற மசூதிகளையும் இந்து கோயில்கள் என்று கூறி ஆய்வு நடத்த நீதித்துறை அனுமதிப்பதற்கு என்ன காரணம்?

## நீதிமன்றங்களும் சனாதன ஆதரவை வெளிப்படுத்துகின்றன!

இதுவரை இந்துத்துவ மதவெறியர்களும், மதவாத அரசியல்வாதிகளும், பாஜக ஆட்சியாளர்களும், ஆர்எஸ்எஸ்- சங்பரிவார் அமைப்புகளும், வருங்காலத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே ஒழித்துவிட்டு பதிலாக மனுஸ்மிருதியை சட்டத் தொகுப்பு நூலாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்குடையவர்களும், இந்து வாழ்வியல் முறை எனப்படும் சனாதன தர்மத்தை உயர்த்திப் பிடித்து வந்தார்கள். சனாதன தர்மத்தை புறந்தள்ளிவிட்டுத்தான் அனைத்து மக்களுக்குமான உரிமைகளை இந்திய அரசியல் சட்டம் உத்தரவாதப்படுத்தியது. ஆனால் சமீப காலமாக சனாதனதர்மத்தை உயர்த்திப் பிடிக்கும் போக்கு உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்றத் தீர்ப்புகளில் காணப்படுகின்றன.

## சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்ற முழக்கம்!

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் சார்பில் 2022 செப்டம்பர் 2 - ஆம் நாள் சென்னையில் சனாதன ஒழிப்பு மாநாடு நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்:

'சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும்; எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது; ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனமும். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட ஒழிப்பதே நாம் செய்ய வேண்டிய முதல் காரியமாகும், ' என்று பேசினார்.

செப்டம்பர் 2 அன்று மாலை இந்த வீடியோவை வெளியிட்ட பாரதிய ஜனதா கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பொறுப்பாளர் அமித் மால்வியா இந்தியாவில் சனாதன தர்மத்தை மற்றும் 80 சதவீத மக்களை ஒழிப்பதற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு விடுத்ததாக செய்தி பரப்பினார். பாஜக மாநிலப் பிரிவுகள், உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்தனர். இந்திய அளவில் மக்கள் ஆதரவு என்னவாகுமோ என்று திமுக பங்கேற்கும் இந்தியா (INDIA) தேர்தல் கூட்டணிக்குள் நெருக்கடி உணரப்பட்டது, உத்தரப் பிரதேச சாமியார் ஒருவர் உதயநிதி ஸ்டாலினின் தலைக்கு 10 கோடி விலை அறிவித்தார். தலையை வெட்ட வேண்டும் என்றும், கண்களை நோண்ட வேண்டும் என்றும் பலர் பொங்கினார்கள்.

இந்து மதத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும் என்ற பொருளிலேயே தான் பேசியதாக உதயநிதி ஸ்டாலின் விளக்கம் அளித்தார். தான் பேசியவை டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேசியவைதான் என்றும், திராவிடர் இயக்கங்கள் மற்றும் திராவிடக் கட்சிகள் வழக்கமாகப் பேசியவைதாம் என்றும் தெரிவித்தார்.

உதயநிதி ஸ்டாலின் பேசிய பேச்சு சட்டவிரோதமானது என்றும், அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் வினித் ஜின்டால் டெல்லி போலீசில் புகார் அளித்தார்.

சென்னை எழும்பூரில் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 'இனப் படுகொலை செய்யும்படி நான் சொன்னதாகச் சிலர் பேசுகின்றனர். சனாதனம் என்ற கோட்பாட்டை ஒழிக்க வேண்டும் என்றுதான் பேசினேன். இனிமேலும் அப்படித்தான் பேசுவேன். எத்தனை வழக்குகள் போட்டாலும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்' என்று (21.11.2023) தெரிவித்தார். இந்தியாவில் 6 மாநிலங்களில் அவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

சென்னை உயர்நீதிமன்றத்தில் அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா ஆகியோருக்கு எதிராக

'கோ வாரண்டோ ' அளிக்கும்படியாகக் கோரிய வழக்கு விசாரிக்கப்பட்டது. அவர்களை பதவி நீக்கம் செய்ய அவசியம் இல்லை என்று அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. ஆனால் அந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் அளித்த கருத்துரை (observation) மிகவும் சனாதன தர்மத்துக்கு ஆதரவானது. அவருடைய தீர்ப்பு சனநாயகத்தையும், சமத்துவத்தையும் பேசுகிற இந்திய அரசியல் சட்டத்தை விடவும் நால்வருண அடிப்படையிலான சனாதன தர்மத்தின் மீது கூடுதல் பக்தியை வெளிப்படுத்துகிறது.

சனாதன தர்மம் என்பது வருணாசிரமத் தர்மத்தை உள்ளடக்கியது. வர்ணாசிரமத் தர்மம் என்பது சமூகத்தைச் செங்குத்தாக நான்குப் பெரும் பிரிவுகளாக - பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர - வர்ணங்களாகப் பிரித்து, அவ்வர்ணங்களுக்கான கடமைகளையும்,உரிமைகளையும், உரிமை மறுப்புகளையும் வரையறுக்கிறது. ஆரியர்களுடைய சமூகக் கட்டமைப்பான வருண - ஆசிரம தர்ம முறைதான் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அரசு அதிகாரத்தின் மூலம் வலுவந்தமாக அனைத்து மக்கள் மீதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்த சமூகக் கட்டமைப்புக்கு வர்ணாசிரமம் என்று பெயர். அதன் அடிப்படையிலான வாழ்வியல் முறையே 'தர்மம்' (வகுத்தளிக்கப்பட்ட கடமை) ஆகும். அது நிரந்தரமானது, மாற்ற முடியாதது என்ற பொருளைக் குறிப்பதே 'சனாதனம்' என்ற சொல். இந்த சனாதன தர்மம் என்ற வாழ்வியலுக்கான சட்டநெறிமுறைகளை தொகுத்தளிக்கும் நூல்களே மனுஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி. யஜ்னவால்க்ய ஸ்மிருதி போன்றவையாகும். பாரபட்சமான, பிறப்பின் அடிப்படையில் ஒடுக்குமுறைகளை நடைமுறைப்படுத்திய சனாதன தர்மத்தை திராவிட இயக்கமும், பொதுவுடைமை இயக்கமும் நீண்ட காலமாக எதிர்த்து வந்திருக்கின்றன. அதன் அடியொட்டியே உதயநிதி ஸ்டாலின், சேகர் பாபு, ஆ. ராசா ஆகியோரும் த.மு.எ.க.ச ஒழுங்கமைத்த சனாதன ஒழிப்பு மாநாட்டில், சனாதன எதிர்ப்பு உரையாற்றினர்.

'சனாதனத்தை ஒழிக்க வேண்டும் ' என்று கூறிய அவர்கள் பதவியில் நீடிக்க அடிப்படை இருக்கிறதா என்ற கேள்வியை எழுப்பி சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்து முன்னணி வழக்குத் தொடர்ந்தது.

எந்தத் தகுதியின் அடிப்படையில் இவர்கள் பதவிக்கு வகிக்கிறார்கள் என விளக்கம் அளிக்க உத்தரவிடக் கோரி இந்து முன்னணி நிர்வாகிகள் தரப்பில் கோ வாரண்டோ (Quo Warranto) வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நீதிபதி அனிதா சுமந்த் இவற்றை விசாரித்து விட்டு, 2023 நவம்பர் 23 அன்று தீர்ப்பை வெளியிடாமல் தள்ளி வைத்தார், பின்னர் 11.3.2024 அன்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. அத்தீர்ப்பில் வழக்குகள் விசாரணைக்கு உகந்தவை என்றும், ஆனால் மனுதாரர் கோரிய எந்த நிவாரணமும் வழங்க முடியாது என்றும் கூறி வழக்கை முடித்து வைத்தார்.

குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் மீது வழக்குகள் பல நீதிமன்றங்களில் இருந்தாலும் அவற்றில் இன்னமும் தண்டிக்கப்படாத காரணத்தால் அவர்களை பதவி நீக்குவது குறித்து எந்த உத்தரவும் அளிக்க முடியாது என்று கூறி வழக்கை முடித்து வைத்தார். வழக்குக்கு இலக்கானவர்கள் மூவரும் குற்ற வழக்குகளில் தண்டிக்கப்படாமல் இருப்பதால் அவர்களைப் பதவி நீக்கம் செய்வது இயலாது என்று கூறியதுடன் முடித்துக் கொள்ளாமல், கருத்துரை (observation) என்ற பெயரில் சனாதனத்தை மிக உயர்த்தியும், ஆதரித்தும், சனாதனத்தை எதிர்த்த மூவரையும் கண்டனம் செய்தும் நீதிபதி கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

மூன்று மனுக்களையும் அவர் தள்ளுபடி செய்தார். ஆனால் 107 பக்கத் தீர்ப்பில் விரிவாகப் பேசியிருக்கிறார். அதில் தான் ஒரு முழுமையான சனாதன ஆதரவாளர் என்பதையும், சனாதனத்தை எவராவது குறை கூறினால் அதை பொறுத்துக் கொள்ள இயலாதவர் என்பதையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

கருத்துரையில் அவர் கூறியிருப்பவை சனநாயகத்திற்கும், இந்திய அரசியல் சட்டத்திற்கும் எதிரானவை.

"சனாதனம் என்றால் நிலையானது, காலவரம்பற்றது, தொடர்ந்து இருப்பது, நிலையான தர்மம்; அது ஒரு நடத்தை விதி" என்று குறிப்பிடுகிறார்.

சாதியத் கொடுமைகளுக்கு வருணாசிரமத்தை குறைகூற முடியாது; சனாதனம் நிலையான ஓர் ஒழுக்க நெறி. 'சாதி அமைப்பு என்பதே கடந்த நூற்றாண்டில்தான் உருவாக்கப்பட்டது ' , 'வருணாசிரமம் பிறப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட வில்லை; அது தொழிலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அது சமூகம் சுமூகமாகச் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்டது' என்கிறார்.

சமூகத்தில் மோசமான காட்டுமிராண்டித்தனமான செயல்பாடுகளுக்குக் காரணம் பல்வேறு சமூகங்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் ஒரு காரணம் ஆக அமைகிறது' என்றும், 'மக்கள் செய்யும் தொழிலைக் கொண்டு சாதிப் பிரிவுகள் உருவாக்கப்பட்டன; அவை பிறப்பின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை' என்றும் கூறினார். இன்று தலைவிரித்தாடு,ம் சாதிய ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். 'அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம்; அது முழுமையானப் புரிதலுடன் இருக்க வேண்டும். பொது இடங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகள் உண்மை விவரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். எந்த கொள்கையைப் பின்பற்றுவதாக இருந்தாலும் அரசியல் சட்டத்தின் அடிப்படையிலேயே கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும். எய்ட்ஸ், கொரோனா, மலேரியா ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பேசியதைப் பொருத்தவரை இந்துத்துவத்தைப் பற்றிய புரிதல் இல்லாததையே காட்டுகிறது. "மூன்று சட்டமன்ற உறுப்பினர்களும் அளித்துள்ள பதில், சனாதன தர்மத்தைப் பற்றி அதிகாரப்பூர்வமான இலக்கியங்களைப் பார்க்க முயற்சி எடுக்கவில்லை என்று காட்டுகிறது' என்று குறிப்பிட்டார். சாதிப் பிரச்சனைகளுக்கு சனாதனம் காரணம் கிடையாது. மாறாக சாதியை வைத்து அரசு கொடுக்கும் சில சலுகைகள்தான் இதற்குக் காரணம் என்று நீதிபதி குறிப்பிட்டார்.

வழக்குகள் பல மாநிலங்களில் உள்ளன; அவற்றில் தண்டிக்கப்பட்டால் மட்டுமே மக்கள் பிரதிநிதிகளை தகுதி இழப்புச் செய்ய முடியும். ஆகவே எந்தத் தகுதியில் பதவியில் நீடிக்கிறார்கள் என்ற விளக்கம் அளிக்கும்படி உத்தரவிட முடியாது என்று அந்தத் தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

முதலில் இணையதளத்தில் மார்ச்சு 7- ஆம் நாள் பதிவேற்றப்பட்ட தீர்ப்பில் மார்ச்சு 9- ஆம் நாள் ஒரு மாற்றமும் செய்யப்பட்டது. முதலில் வெளியிடப்பட்ட தீர்ப்பில் வடிவத்தில் 'சாதிய முறையின் தொடக்கம் என்பது ஒரு நூற்றாண்டுக்கு உள்ளானது; தமிழ்நாட்டில் 370 பதிவு செய்யப்பட்ட சாதிகள் இருக்கின்றன என்று கூறியிருந்தார். மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்தில் 'இன்று நாம் காணும் சாதிகளின் வகைப்பாடுகள் நவீன கால நிகழ்வு போக்கும் சமீபத்தியதும்தான் ' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் 184 சாதிகள் பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிடுகிறது. முதலில் வெளியான தீர்ப்பின் வடிவம், 'அசலான வேத நூல்களை சென்னை குப்புசாமி சாஸ்திரி ஆய்வு நிறுவனங்களின் நிபுணர்கள் ஆய்வு செய்து இருப்பதாகவும், அதில் சனாதன தர்மம் என்பது உயர்ந்த நன்னெறி விழுமியங்கள், நெறி சார்ந்த வாழ்க்கை ஆகியவற்றையே சனாதன தர்மம் குறிப்பிடுவதை அந்த ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன' என்று தெரிவித்தது. எந்த வகையிலும் சமுதாயத்தில் நீதியற்ற பிளவுகளை வளர்க்க, மற்றும் வர்ணாசிரமத் தர்மத்தோடு சனாதனம் என்பதைப் பயன்படுத்துவதற்கு, எந்த சான்றுகளும் கிடையாது என்றும் அத்தீர்ப்பு குறிப்பிடுகிறது. 'சாதிகள் தங்களுடைய சாதிப்பற்றின் காரணமாக மூர்க்கத்தனமான செயல்களில் ஈடுபடுவதற்குக் காரணம், அவர்களுக்கு அரசு சில சலுகைகளை அளிப்பதே. அவ்வாறு இருக்கையில், பழங்கால வருண முறையின் மீது ஒருவர் பழி போட முடியுமா?' என்றும் கேட்டு இருக்கிறார்.

நீதிபதி அனிதா சுமந்த் யாருடைய குரலாக ஒழிக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். சனாதனத்தை ஒழிக்க வேண்டும் என்று கூறுவதில் அவருக்கு ஏன் வருத்தம் வருகிறது? சனாதனப் படிநிலைச் சமூகம் அரசதிகாரத்துணையோடு நடைமுறைபடுத்தப்பட்டபோது பல சமூகப் பிரிவுகளின் நிலை என்னவாக இருந்தது? பெண்களின் நிலை என்னவாக இருந்தது ? இராமாயணத்தில் சீதை இராமனிடம் பட்டபாடு என்ன என்பதையெல்லாம் நீதிபதி அறிய மாட்டாரா?

வழக்கை ஆய்வு செய்த பின், சம்பந்தப்பட்டவர்கள் எந்த கிரிமினல் குற்றத்திலும் தண்டிக்கப்படாத காரணத்தினால் பதவி நீக்குவதற்கு உத்தரவிட முடியாது என்ற அளவோடு நீதிபதி நிறுத்தி இருக்க வேண்டும். அதை விட்டு கருத்துரை (அப்சர்வேசன்) என்ற பெயரில் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் காலாகாலமாக பாதுகாத்து வந்திருக்கும் சனாதன தர்ம முறையையும் அதற்கான ஆதரவையும் அவர் வெளிப்படுத்த வேண்டிய தேவை என்ன? நீதிபதி அனிதா சுமந்த் அவர்கள் 2019ல் கேரளா கொச்சியில் நடைபெற்ற தமிழ் பிராமணர்களின் உலகளாவிய மாநாட்டில் (Tamil Brahmins Global Meet) பங்கேற்றார். அதில் மனு ஸ்மிருதியை ஆதரித்துப் பேசினார். இன்று, இந்திய அரசியல் சட்டம் அளித்திருக்கும் இட ஒதுக்கீட்டை எதிர்த்துப் பேசுகிறார். சாதிப் பற்றாளர்களின் மூர்க்கத்தனமான செயல்பாடுகளுக்கு அரசு அளிக்கும் இட ஒதுக்கீடு காரணம் என்கிறார். இதை அவர் எந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் கூறுகிறார்? ஒரு நீதிபதி சாதி மாநாட்டில் பங்கேற்பதும், அதில் மனுநீதியை ஆதரித்து உரையாற்றுவதும் ஏற்கக் கூடியதுதானா? ஒரு குலத்துக் கொரு நீதி வகுத்த மனுநீதி முறையையும், அது கடந்த காலத்தில் நிலை நிறுத்திய சனாதனத்திற்கும் மாற்றாகத்தான் இந்திய அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டது இந்நிலையில் சனாதனத்தை ஆதரித்து, இந்திய அரசியல் சட்டம் வழங்கி இருக்கக்கூடிய சமூக நீதிக்கான இட ஒதுக்கீடு முறையைக் குறை பேசுவது ஒரு நீதிபதிக்கு உகந்த செயல்தானா? இன்றைய இந்தியாவுக்கு அடிப்படை இந்திய அரசியல் சட்டமா ? அல்லது சனாதன தர்மமா? என்ற கேள்வி எழுகிறது. மேல்சாதி உணர்வில் தோய்ந்து நிற்கும் நீதிபதிகள் இன்றளவும் வெளிப்படையாக சனாதன தர்மத்தை ஆதரிக்கிறார்கள். நடக்கும் சாதி கொடுமைகளுக்கு வர்ணாசிரமத்தைக் குறை கூற முடியாது என்று வர்ணாசிரம முறையையும் ஆதரிக்கிறார். சாதிக் கொடுமைகளுக்கு மனுதர்மமோ, வர்ணாசிரமதர்மமோ காரணம் இல்லை என்றும், சில சமூகங்களுக்கு அரசு காட்டும் சலுகைகள் தான் காரணம் என்றும் நீதிபதி அனிதா சுமந்த் கூறுவது ஏற்கத்தக்கதா? ஒரு தீர்ப்பு நியாயத்தின் பாற்பட்டதாகவும், மறுக்கவியலாததாகவும், உண்மைகளின் அடிப்படையிலானதாகவும் இருக்க வேண்டும். நீதிபதி அனிதா சுமந்த் அளித்துள்ள தீர்ப்பு உண்மைக்கும், நியாயத்திற்கும், இந்திய அரசியல் சட்டத்துக்கும் எதிரானது. தான் கூறுவதெல்லாம் தீர்ப்பு என்று ஒருவர் கருதலாமா? இந்திய அரசியலமைப்புக்குப் பதிலாக சனாதனதர்மப்படி இந்திய அரசு நடைபெற வேண்டும் என்று அவர் விரும்புகிறாரா?

வர்ணதர்ம முறை சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில் பிரிவுகளை வகுக்கவில்லை என்றும், அவை தொழிலின் அடிப்படையிலேயே அமைந்தன என்றும் நீதிபதி கூறுகிறார். அதுவும் சமூகம் சுமூகமாக செயல்பட வேண்டும் என்பதற்காக பல நூற்றாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டது என்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சனாதன தர்ம முறை இப்போது எதற்குத் தேவை? அப்படி இருக்கையில் அது ஏன் தொடர வேண்டும் என்று நீதிபதி விரும்புகிறார்? பிறப்பின் அடிப்படையில் வர்ணமுறை அமைக்கப்படவில்லை என்று அவர் கூறுவது உண்மையானால், பிராமணர்களுக்கான வேலைகளாகக் கருதப்படும் கற்றல், கற்பித்தல் போன்றவற்றைச் செய்யும் ஆசிரியப் பெருமக்கள் அத்தனை பேரும் பிராமணர்களாக இன்று அறிவிக்கப்பட வேண்டும் அல்லவா? பிற தொழில்களில் ஈடுபடக்கூடிய பிராமணர்கள் சூத்திரர்களாக அறிவிக்கப்பட வேண்டும் அல்லவா? வர்ணமுறை என்பது இப்போது சாத்தியமில்லை; ஒவ்வொரு வருணத்தாரும் பிற வருணத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட வேலைகளை இப்போது மேற்கொண்டு விட்டதால் இனி வருண முறை சாத்தியமில்லை; அது சட்டபூர்வமாக ஒழிக்கப்பட வேண்டும் என்று நீதிபதி பரிந்துரை செய்ய வேண்டும் அல்லவா? அவ்வாறின்றி சனாதனத்தைக் குறை சொல்லாதே; வருண முறையால் இங்கு சமூகப் பிளவுகள் ஏதும் வந்துவிடவில்லை என்றெல்லாம் வருணாசிரம முறைக்கு ஆதரவு தேடுவதன் நோக்கம் என்ன? வருணங்கள் மற்றும் சாதிகளிடையே சமத்துவமின்மை உள்ளது. சட்டப்படி வருணப் பகுப்பு முறை இப்போதும் தொடர்கிறது, சமத்துவத்தையும்

சமூகநீதியையும் நிலை நிறுத்த பழைய சமூகக் கட்டமைப்பு நீக்கப்பட வேண்டும் என்றுதானே நீதிபதி பேச வேண்டும்? ஆனால் அவரோ வர்ணாசிரம தர்மத்தின் புனிதம் போற்றுகிறார்; அதை தன் தீர்ப்பில் வழிபாடு செய்கிறார்.

நாம் அறிந்து கொள்ளும் சாதிகள் வகைப்பாடு என்பது சமீபகாலத்தில் ஏற்பட்டதுதான் என்கிறார். சாதிகள் பற்றியும், சாதிகளின் வரலாறு பற்றியும் நீதிபதி படித்துக் கொள்ள வேண்டியது அவசியம். பல்லவர்கள் காலத்தில் இருந்தே இங்கு சாதிமுறை வேரூன்றியதை சான்றுகள் நிரூபிக்கின்றன. வட இந்தியாவில் சுங்கர்கள் ஆட்சி காலத்திலிருந்து சாதிக் கொடுமைகள் மிக உயர்நிலைக்கு வந்ததும் வரலாற்றின் பக்கங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொற்காலம் என்று போற்றப்படுகிற குப்தர்களின் காலத்தில் உயர் சாதியினர் வரும்போது அவர்கள் மீது தங்கள் நிழல் பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஒடுக்கப்பட்ட சமூகங்கள் தரையோடு தரையாகப் படுத்துக்கொள்ள வேண்டி இருந்தது என்பதையும் வரலாற்றின் பக்கங்கள் பதிவு செய்திருக்கின்றன. இந்நிலையில் சாதிமுறை என்பதே சமீபத்தில் தோன்றியதுதான் என்று நீதிபதி பேசுவது பார்ப்பனிய முறையைப் பாதுகாத்து விட வேண்டும் என்ற அவருடைய அளவு கடந்த ஆர்வத்தையே காட்டுகிறது.

அரசியலமைப்பு சட்டம் குடிமக்களுக்கு சமமான சுதந்திரத்தை வழங்க வலியுறுத்தும் நிலையில், கடந்த காலத்தில் பிறப்பின் அடிப்படையில் வெறுப்பையும், ஒடுக்குமுறையையும் நிலை நிறுத்தி வந்த சனாதன முறையை நீதிபதி ஆதரிப்பது அதிர்ச்சி அளிக்கக் கூடிய ஒன்று. ஆனால் அவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா ஆகியோரின் கருத்துகள் குறிப்பிட்ட சமுதாயத்திற்கு எதிரான உணர்வை ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்று குறிப்பிடுகிறார். அதாவது இவர்களுடைய கருத்துகள் இந்துக்களுக்கு எதிரானது என்று நீதிபதி குறிப்பிடுகிறார். இந்துக்களுக்குள் வருண வேறுபாடுகள் இனி இருக்கக் கூடாது என்பதுதான் உதயநிதி ஸ்டாலின், ஆ. ராசா ஆகியோருடைய உரைகளின் சாரம். அவர்கள் குரலே பெரும்பான்மை இந்துக்களின் குரல் தானே!

குறிப்பிட்ட நம்பிக்கையை ஒழித்து விடுவதாக இவர்கள் பேசியது மதச் சார்பற்ற தன்மையின் மதிப்புகளின்கீழ் இவர்கள் எடுத்த உறுதிமொழியை மீறும் செயல், என்கிறார். அவர்கள் எந்த நம்பிக்கைக்கும் எதிராகப் பேசிவிடவில்லை. ஆண்டாண்டுக் காலமாக சமூகத்தை பாதித்து வந்த கொடுமையான நிறுவனங்கள் இப்போதாவது நீக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுப்பது மக்கள் பிரதிநிதிகளின் கடமை தானே. குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள் அரசியல் சட்டத்துக்குதான் உறுதிமொழி எடுத்தார்கள்; சனாதன மனுஸ்மிருதிக்கு அல்ல. சனாதன தர்ம முறைக்கு மாற்றாகத்தான் இந்திய அரசியல் சட்டம் செயல்பாட்டில் இருக்கிறது.

'சனாதன தர்மம் சாதி அமைப்பை வளர்த்தது என்று எதன் அடிப்படையில் கூறுகிறீர்கள்? என்று நீதிபதி கேட்டிருக்கிறார். அப்படி முடிவுக்கு வர என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டது' என்றும் கேட்டிருக்கிறார். அமைச்சர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் 'பெரியார், இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்த பி.ஆர். அம்பேத்கர் போன்றோரின் எழுத்துகளின் அடிப்படையில் உதயநிதி ஸ்டாலின் அவ்வாறு புரிந்து கொண்டார்' என்று பதில் அளித்தார். அண்ணல் அம்பேத்கர் விரிவான ஆய்வுகளைச் செய்தவர். நீதிபதிக்கு தேவைப்படுமானால் அம்பேத்கரைப் படிக்கலாம்.

மேலும், 'வழக்கை தொடுத்தவர்கள் (இந்து முன்னணிக்காரர் டி. மனோகர்) 1902 ஆம் ஆண்டு பனாரஸ் மத்திய இந்துக் கல்லூரியின் நிர்வாகக் குழு வெளியிட்ட 'சனாதன தர்மம் ' என்ற விரிவான பாடப்புத்தகத்தின் அடிப்படையிலேயே பேசி இருக்கிறார். அதே நூலின் அடிப்படையில் இந்த தகவல்களை குற்றம் சாட்டப்பட்டவர்களும் பேசியிருக்கிறார்கள்' என்று வழக்கறிஞர் வில்சன் குறிப்பிட்டார். 1902- இல் வெளியான சனாதன தர்மம் என்ற நூல் மனுஸ்மிருதி உட்பட நான்கு ஸ்மிருதிகள் குறிப்பிடும் பிறப்பின் அடிப்படையிலான வர்ணங்கள் பற்றிப் பேசுகிறது என்று வழக்கறிஞர் வில்சன் குறிப்பிட்டார். 'இந்நூலை உதயநிதி பேசுவதற்கு முன்னமே பார்த்து விட்டாரா?' என்ற நீதிபதியின் கேள்விக்கு 'ஆம்' என்று வழக்கறிஞர் வில்சன் பதிலளித்தார். இந்த நூல் 1902 இல் பப்ளிக் டொமைனில் (பொதுவெளியில்) இருக்கிறது என்றும் கூறி, மனுஸ்மிருதியின் மொழிபெயர்ப்பையும் அளித்தார். சாதி அடிப்படையில் மக்களைப் பிரித்த மனுஸ்மிருதியை அம்பேத்கர் எரித்தார் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். 'சனாதன தர்மத்தை எப்படி மனுஸ்மிருதியுடன் சம்பந்தப்படுத்துகிறீர்கள்?' என்று நீதிபதி கேட்டார். 'இதற்கு பதில் வழக்குதாரர் சான்றாகக் கருதும் 1902 ஆம் ஆண்டு வெளியீட்டிலேயே இருக்கிறது' என்று வழக்கறிஞர் பதில் கூறினார். சனாதன தர்மத்திற்கும் மனுஸ்மிருதிக்கும் உள்ள தொடர்பு அறியாத ஒரு நீதிபதி இருக்க முடியுமா? வழக்கைத் தொடுப்பவர் 1902 ஆம் ஆண்டு பனாரஸ் இந்து கல்லூரி வெளியிட்ட சனாதனம் என்ற நூலின் அடிப்படையில் வழக்குத் தொடுக்கலாம் என்றால், அதே நூலின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் விளக்கங்கள் அளிக்கக் கூடாதா? அந்த நூலில் என்ன இருக்கிறது என்பதையாவது நீதிபதி பார்க்க வேண்டாமா?

மக்களை வர்ணங்களாகப் பிரிப்பது குறித்து பகவத் கீதை பேசுகிறது. வர்ணமுறை கர்மம் மற்றும் குணம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிப்பதாகக் கூறுகிறது. ஒருவன் பிறக்கும்போதே அவன் பிராமணனாக அல்லது சூத்திரனாகவே பிறக்கிறான். காரணம் கேட்டால், முன்பிறவியில் அவன் செய்த கர்மமும் அவனுக்கு இயல்பாக அமைந்த குணமும் என்று. வருணப்பிரிவுக்குக் காரணமாக பிறப்பையே அடிப்படையாக அனைத்து நூல்களும் குறிப்பிடுகின்றன. ரிக் வேதமும் பிறப்பின் அடிப்படையில்தான் வர்ணத்தைப் பேசுகிறது. தர்மசாஸ்திரங்கள், வர்ணங்களின் அடிப்படையில் ஒருவன் நடந்து கொள்ள வேண்டிய முறைகளை வரையறுத்துக் கூறுகிறது. நான்கு வருணங்களுக்குள்தான் சாதிகள் உட்பிரிவுகளாக அமைந்துள்ளன. அந்தந்த வர்ணத்திற்கு ஏற்ற ஒழுக்கமும், சாதிகளுக்கு ஏற்ற உரிமையும் ஒழுக்கமும் அமைய வேண்டும். இதிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டதே இல்லை. வர்ணமுறையை தர்மசாஸ்திரங்கள் விரிவாக எடுத்துக் கூறியிருக்கின்றன. இதுகுறித்து இங்குள்ள ஆய்வாளர்கள் மட்டுமின்றி, சமஸ்கிருத மொழியை நன்கு கற்று சமஸ்கிருத இலக்கியங்களை விரிவாக ஆய்வு செய்த வெளிநாட்டு அறிஞர்களும் பல நூல்களை வழங்கி இருக்கிறார்கள். பிறப்பின் அடிப்படையிலேயே வர்ணமும் அதன் உட்பிரிவாக சாதியும் தீர்மானிக்கப்படுகிறது. நீதிபதியும்கூட பிறப்பின் அடிப்படையிலேயே பிராமணராக இருக்கிறார். ஒருவனுடைய தொழிலால்தான் ஒருவனுடைய வர்ணம் அமைகிறது என்றால், நீதிபதி ஏன் சக நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் பிராமணர்களாக இல்லை என்பதற்கு பதில் தேட வேண்டும் அல்லவா? பகவத் கீதை (4:13 ) பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் மற்றும் சூத்திரர்களின் கடமைகள் 'அவரவர் இயல்பில் பிறந்த குணத்தின்படி' பிரிக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடுகிறது.

பல சாதிகள் தோன்றிய வரலாற்றையும் மனுதர்மம் குறிப்பிடுகிறது. பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களிடையே கலப்பால் பல சாதிகள் தோன்றின. அவை 'சங்கர ஜாதிகள்' என்று அடையாளப்படுத்தப்படுகின்றன. உயர் வருணத்தானுக்கும் தாழ்ந்த வருணப் பெண்ணுக்கும் பிறந்த குழந்தைகள் அனுலோமா சாதிகள் என்றும், தாழ்ந்த வருணத்தானுக்கும் உயர் வருணப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் பிரத்திலோமா சாதிகள் என்றும் வரையறுக்கப்பட்டன. சாத்திரங்கள் பேசுகிறபடி அடிப்படை சாதிகள் நான்கு; அவற்றின் கலப்பால் பிற சாதிகள் உருவாயின என்பதுதான் சமஸ்கிருத மத இலக்கியங்கள் தெளிவுபடுத்தும் உண்மை. பிராமணனுக்கும் வைசியப் பெண்ணுக்கும் அல்லது சூத்திரப் பெண்ணுக்கும் பிறந்தால் அது நிஜாதா சாதி என்றும், சூத்திர ஆணுக்கும் பார்ப்பனப் பெண்ணுக்கும் பிறந்தால் அக்குழந்தை சண்டாளன் என்றும் வகைப்படுத்தப்பட்டனர். வர்ணம் என்பது நீதிபதி குறிப்பிடுவதுபோல தொழில் அடிப்படையில்தான் என்று நம்பினால், அவர் மட்டும் பிராமணராக இருந்தால் போதுமா? அவரைப்போலவே வழக்கறிஞர் தொழில் செய்பவர்கள், சக நீதிபதிகளாக இருப்பவர்களை தொழில் அடிப்படையில் பிராமணர்களாக அறிவிக்க வேண்டாமா? தான் பிராமணராக இருப்பது தொழில் அடிப்படையிலா அல்லது பிறப்பின் அடிப்படையிலா என்பதை நீதிபதி அனிதா சுமந்த் எப்போதாவது யோசித்துப் பார்த்திருக்கிறாரா? ரிக் வேத காலத்தில் மட்டுமே ஆரியச் சமூகத்தில் தொழில் ஒருவனுடைய வருணத்தை நிர்ணயித்தது. அதன் பின்னர், பிறப்பே ஒருவனுடைய தொழிலை நிர்ணயித்தது; அதுவே அவனுடைய வர்ணத்தையும் நிர்ணயித்தது. நான்கு வேதங்கள், ஆறு வேதாகங்கள், 4 உபாகங்கள், 18 முதன்மை தர்ம சாஸ்திரங்கள், மனு, பராசர , யஜ்னவால்க்கிய, கௌதம , ஹரிதா, யமா , விஷ்ணு, பிரகஸ்பதி, தக்ச, அங்கிராஸ், அப்பஸ்தம்பா, சத்தபத்தா ஆகிய எல்லா ஸ்மிருதிக்காரர்களும் வர்ணம் என்பது பிறப்பின் அடிப்படையிலேயே என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு இருக்கையில், இவ்வளவு இலக்கியங்கள் தெளிவுபடுத்தியும், வர்ணம் என்பது தொழிலின் அடிப்படையில்தான், பிறப்பின் அடிப்படையில் அல்ல என்று நீதிபதி பேசுவதன் நோக்கம்தான் என்ன? ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலத்தில் புருஜசூக்தம் (ரிக் வேதம்,10:90, 11- 12) வருணங்களின் பிறப்பைப் பேசுகிறது. சந்தோக்யா உபநிடதம் கடந்த கால செயல்பாடுகளால் நல்ல பிறப்பில் பிறக்கிறார்கள் என்று கூறி, பிறப்பின் அடிப்படையில் வர்ணத்தை நிர்ணயம் செய்கிறது. பிரம்ம புராணம் பிறப்பின் அடிப்படையில் வர்ணங்களை நிர்ணயிக்கிறது. இந்த வர்ணங்களுக்குள் கலப்பு நிகழ்ந்தால் நரகத்திற்குள் அது கொண்டு செலுத்தும் என்று எச்சரிக்கிறது.

பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டதும், ஒவ்வொரு வருணத்துக்குள்ளும் பல்வேறு சாதிகளாகப் பிரிக்கப்பட்டு, உரிமைகள் வரையறுக்கப்பட்டு, ஒடுக்கு முறைகள் வகுக்கப்பட்டு, அடிமைத்தனம் சுமத்தப்பட்டு, நீண்ட காலமாக துன்புற்று வந்த நிலையில், இந்த வர்ணாசிரம சமூகக் கட்டமைப்பையும், அதன் அடிப்படையிலான சனாதனம் என்ற வாழ்வியல் முறையையும், கடந்த காலத்தில் எதிர்த்துப் போராடித்தான் பல உரிமைகளை இந்திய அரசியல் சட்டத்தில் உத்தரவாதப்படுத்தி இருக்கிறார்கள். சனாதனத்துக்குப் பதிலாக சனநாயகம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பார்ப்பன சக்திகள் மீண்டும் சனாதன சமூகத்தை நிறுவிவிட ஏங்குகிறார்கள்.

'என்ன ஆய்வு செய்திருக்கிறீர்கள்? என்று நீதிபதி கேள்வி எழுப்பியிருக்கிறார். சமஸ்கிருத மூல நூல்களை முழுமையாக ஆய்வு செய்த அம்பேத்கரின் எழுத்துக்கள் போதாதா? சமஸ்கிருத மொழியை முறையாகக் கற்று சமஸ்கிருத பிராமணிய இலக்கியங்களை ஆய்வு செய்து பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்கள் எழுதி இருக்கக்கூடிய நூல்களை சான்றுகளாகக் கொண்டால் போதாதா? நீதிபதி அவர்கள் சென்னை குப்புசாமி சாஸ்திரி ஆய்வகத்தை நம்புகிறார். அண்ணல் அம்பேத்கரை நம்ப மாட்டாரா? குப்புசாமி சாஸ்திரியாரை விட பெரிய ஆய்வறிஞர்கள் அளித்திருக்கும் சான்றுகளை கண் திறந்து பார்க்கக்கூடாதா?

விரிவான ஆய்வுப் பரப்பில் பயணம் செய்த அம்பேத்கர் இப்படிப் பதிவு செய்கிறார்: 'இந்து மதக் கோட்பாடுகளை வெடிவைத்துத் தகர்க்க வேண்டும் ' என்று அண்ணல் அம்பேத்கர் (தொகுப்பு 9 ) கூறுகிறார். 1935 - ஆம் ஆண்டு ஜாத் பட் தோடக் மண்டல் மாநாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட உரையில் சாதி கூடாது, இந்திய சமூகத்தின் அடிப்படை சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவமாக அமைய வேண்டும் என்ற தம் எண்ணத்தை வெளிப்படுத்துகிறார். 'சதுர் வர்ண முறையைவிட மனிதனை இழிவுபடுத்தும் சமூக அமைப்பு வேறு இல்லை', 'சாதிக்கோட்டையில் உடைப்பு ஏற்படுத்த வேண்டும் என்றால் நீங்கள் வேதங்களையும் சாஸ்திரங்களையும் வெடிவைத்துத் தகர்க்க வேண்டும் ' என்று கூறுகிறார்.

சனாதன தர்மத்தின் கொடுமைகளை நன்கு உணர்ந்த அண்ணல் அம்பேத்கர் கேரள தீயர் இளைஞர் அமைப்புக்கு அனுப்பிய செய்தியில் மதமாற்றத்தை வலியுறுத்தினார். அதில், 'இந்து மதம் ஒரு மதம் அல்ல; அது ஒரு நோய்' என்று குறிப்பிடுகிறார். 'இந்து மதம் ஒரு விஷம்; விஷத்தை யாராவது அமுதம் ஆக்க முடியுமா?' என்று கேள்வி எழுப்பினார். 'இந்து மதம் ஒரு கருத்த குஷ்டரோகமாகும்' என்கிறார். 'இந்து

மதம் ஒரு நரகம்' என்கிறார் டாக்டர் அம்பேத்கர் (நூல் தொகுப்பு 38). இந்து மதம் பற்றி "Hinduism is a contagious disease " என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

நீதிபதி அனிதா சுமந்த் போன்றவர்கள் அண்ணல் அம்பேத்கரின் விரிவான வாசிப்பைக் குறை காண்கிறார்களா? அவருடைய அறிவாற்றலைத் தவறு என்கிறார்களா? மனுஸ்மிருதியை எரித்த, 'Riddles of Hinduism' எழுதிய அம்பேத்கர் சமஸ்கிருத மூல நூல்களில் உள்ளவற்றை அறிய மாட்டார் என்கிறார்களா? சென்னையில் இருக்கும் குப்புசாமி சாஸ்திரி ஆய்வகத்தை நம்புகிற நீதிபதி அனிதா சுமந்த் அண்ணல் அம்பேத்கரையும், காசி இந்து கல்லூரி வைதீகக் கல்வி மாணவர்களுக்காக உருவாக்கிய சனாதனம் குறித்த அடிப்படை நூலையும் நம்பக் கூடாதா?

ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, கல்வி மறுக்கப்பட்டு, மனித உரிமைகள் பறிக்கப்பட்டு கிடந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு உள்ளிட்ட உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கி சமூக நீதியை உத்தரவாதப்படுத்தும் அரசியல் சட்டத்தின் கூறுகளை நீதிபதியின் தீர்ப்பு இழிவுபடுத்துகிறது. சாதிகளின் மூர்க்கமான செயல்பாடுகளுக்கு அரசு வழங்கும் சலுகைகளே காரணம் என்கிறார். அரசு வழங்கும் சலுகைகள் அரசியல் சட்டத்துக்கு உட்பட்டவை. அவை சமூக நீதி சார்ந்தவை. அவற்றை விமர்சிக்கும் எந்தத் தீர்ப்பும் இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானது.

## உச்ச நீதிமன்றம் 'ஒரு குலத்துக்கொரு நீதி' பார்க்கிறதா?

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது ஆறு மாநிலங்களில் வழக்குகள் பதிவான நிலையில் அவற்றையெல்லாம் ஒரே நீதிமன்றத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து உச்சநீதிமன்றத்தில் மனு செய்யப்பட்டது. அதில் இரண்டு நீதிபதிகளின் அமர்வு தேவையற்ற விமர்சனங்களை முன் வைத்தது. பல மாநிலங்களில் இருக்கும் வழக்குகளை ஒரே இடத்திற்கு கொண்டு வர முடியுமா, முடியாதா? என்பது பற்றித்தான் நீதிமன்றம் பேசி இருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக, மனுதாரரின் சனாதனம் குறித்த பார்வையைக் கண்டனம் செய்தது.

'கருத்துச் சுதந்திரம் என்னும் பெயரில் அரசியல் சட்டக் கூறு 19 மற்றும் 20 - ஐ துஷ்பிரயோகம் செய்து இருக்கிறீர்கள்! அமைச்சர் என்றால் என்ன வேண்டுமானாலும் பேசுவீர்களா?" என்று உச்சநீதிமன்றம் பேசிய விதம், 'சனாதன தர்மத்தை எவராவது குறை கூறினால் சும்மா விட மாட்டோம்' என்று கூறுகிற தொனியில் அமைந்திருந்தது.

சனாதனத்தை ஏன் பேசக்கூடாது? இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து 74 ஆண்டுகள் ஆன பின்பும் ஒருவன் ஏன் பிராமணனாக, மற்றொருவன் சூத்திரனாக, பஞ்சமனாக இருக்க வேண்டும்? அது சனாதனத்தில் வராது என்று ஸ்மிருதிகளின் அடிப்படையில், சான்றுகளின் அடிப்படையில் எவராவது கூற முடியுமா?

உச்ச நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட மனு என்ன? மனுதாரர் மீது பல மாநிலங்களில் வழக்குப் பதியப்பட்டுள்ளது. மனுதாரர் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வாய்தாவுக்குப் போக முடியாது. குற்றம் நிகழ்ந்த இடம் நீதித்துறையின் செயல்பாட்டுப் பகுதி (Jurisdictional Area) எதுவோ அங்கு அந்த வழக்குகளை ஒருங்கிணைத்து நடத்தும்படி நீதிபதிகள் கூற வேண்டும் என்பதுதான் வேண்டுகோள். அப்படிச் செய்ய முடியுமா, முடியாதா? என்பதைத்தான் நீதிமன்றம் கூற வேண்டும். சனாதனத்தை எதிர்த்துப் பேசினாரா? பேசவில்லையா? என்பது விசாரணையில் பேச வேண்டிய செய்தி. அளிக்கப்பட்ட மனுவின் வேண்டுகோளே வேறு. சனாதனம் குறித்து பேசத் தேவையில்லை; ஏனெனில் அது பிரச்சனை இல்லை. ஆனால், வழக்கறிஞர்களிடம் நீதிபதிகள் வசை பாடினார்கள்,

இந்திய அரசமைப்புச் சட்டக் கூறு 14 பேசுகின்ற சமத்துவம் என்பது சனாதனத்தில் உண்டா? அரசியல் சட்டக் கூறு 15 கூறுகின்ற பாரபட்சங்களுக்கு எதிரான நிலை என்பது சனாதனத்தில் உண்டா? அரசியல் சட்டக் கூறு 17 கூறுகின்ற அனைத்து வடிவத் தீண்டாமைகளுக்கும் தடை என்பது சனாதன தர்மத்தில் உண்டா? என்ற கேள்விகளுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகளிடம் பதில் உண்டா?

அரசியல் சட்டம் அளித்திருக்கிற இந்த உரிமைகள் மறுப்பால், ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படுகிறவர்கள்தான் சனாதனத்தை நீக்க வேண்டும் என்று பேசுகிறார்கள். மனுதாரரின் சார்பில் அளிக்கப்பட்ட மனு மீதான விசாரணையில்,

"நான் பேசியதன் விளைவை நன்கு அறிவேன். ஆறு மாநிலங்களில் வெவ்வேறு உயர் நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ளன. எல்லா மாநிலங்களுக்கும் என்னால் செல்ல முடியாது. பொதுவான ஒரு இடத்தில் விசாரிக்க வேண்டும். விசாரணையை எதிர்கொள்ள நான் தயார்" என்று அமைச்சர் உதயநிதி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. உதயநிதி ஸ்டாலின் மீது கடும் அதிருப்தியை உச்சநீதிமன்றம் வெளிப்படுத்தியது. நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா மற்றும் தீபந்தர் தத்தா ஆகியோர், "அரசியலமைப்பு சட்டத்தின் 19 (1) (a)பிரிவின் கீழ் உங்கள் உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் சட்டப்பிரிவு 25- இன் கீழ் உங்களின் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்து உள்ளீர்கள், கருத்துச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி விட்டு தற்போது பாதுகாப்புக் கோரி நீதிமன்றம் வந்துள்ளீர்கள். சனாதனம் தொடர்பாக நீங்கள் சொன்ன கருத்துகளின் விளைவுகள் உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் ஒன்றும் சாமானியரல்லர், அமைச்சர். ஓர் அமைச்சராகத் தனது சொற்களில் கவனமாக இருக்க வேண்டும். சொல்லும் கருத்துகளின் விளைவுகளை அறிந்திருக்க வேண்டும் ", என்று (4.3.2024) நீதிபதிகள் கூறினர்.

வழக்கை விசாரிப்பதற்கு முன்பே மனுதாரர் குற்றவாளி என்று நீதிபதிகள் அறிவிக்கிறார்கள். இதில் இரண்டு செய்திகளை நீதிபதிகள் பதிவு செய்கிறார்கள்: ஒன்று, அரசியல் சட்டம் அளித்திருக்கும் உரிமைகளை மனுதாரர் துஷ்பிரயோகம் செய்துவிட்டார் என்பது. இரண்டாவதாக, ஓர் அமைச்சர் என்ற முறையில் தன் வரம்பை மீறி நடந்துவிட்டார். இந்த இரண்டும் வழக்கு விசாரிக்கப்பட்டு இறுதித் தீர்ப்பில் கூறப்பட வேண்டியவை. இவற்றை முன்னமே நீதிபதிகள் கூறுவதன் மூலம், இந்த வழக்கு குறித்து ஒரு பொதுக் கருத்தை உருவாக்குகிறார்கள். வழக்கின் முடிவு எப்படி இருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளும் வாய்ப்பை அளிக்கிறார்கள். அது மட்டுமின்றி, ஒருவர் அமைச்சராக வந்து விட்டால் எந்த பிரச்சனைகள் பற்றியும் பேசக்கூடாது; நிர்வாக இயந்திரத்தின் ஒரு பல்சக்கரமாக இருந்து வாழ்ந்துவிட்டுப் போக வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். எந்த நீதிமன்றத்தில் இவ்வழக்கை விசாரித்தாலும் மனுதாரர் ஒரு குற்றவாளி என்று நீதிபதிகள் உணரும்படியாக உச்ச நீதிமன்றம் தொடக்கத்திலேயே முத்திரை குத்துகிறது.

உதயநிதி சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிசேக் மனு சிங்வி உச்ச நீதிமன்றத்தில் நின்றார். இதற்கு முன்பு பத்திரிக்கையாளர்கள் அர்ணாப் கோஸ்வாமி, முகமது ஸுபைர், பா.ஜ.க செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா ஆகியோர் தொடர்பான வழக்குகளைச் சுட்டிக்காட்டினார். இவர்களுடைய வழக்குகளின்போது பல்வேறு இடங்களில் இருந்த வழக்குகளை ஒருங்கிணைத்து, குற்றம் நிகழ்ந்த இடத்தில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப்பட்டது. உதயநிதி தரப்பில், "சனாதனம் தொடர்பான வழக்கை எதிர்கொள்ள மாட்டேன் என்று நான் சொல்லவில்லை. மாறாக, அனைத்து வழக்குகளையும் ஒரே இடத்தில் விசாரிக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன். அனைத்து முதல் தகவல் அறிக்கைகளும் ஒரே இடத்திற்கு மாற்றப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் " என்று வேண்டுகோள் வைக்கப்பட்டது.

நீதிபதிகள் "முதலில் வழக்கு விசாரணை தொடர்பாக அந்தந்த மாநிலங்களின் உயர் நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள். வழக்குகளை ஒன்றாகக் சேர்த்து விசாரிப்பது குறித்து அடுத்த விசாரணையில் பார்க்கலாம்" என்று கூறினார்கள். மூத்த வழக்கறிஞர் அபிசேக் சிங்வி, 'ஆறு மாநிலங்களில் வழக்குகள் இருக்கும் நிலையில் "this is persecution before the prosecution " (வழக்கு நடத்துவதற்கு முன், கொடுமைபடுத்துவது) என்று கூறினார்.

பல மாநிலங்களில் வழக்குகள் பதிவானால் இதுவரை மற்றவர்களுக்கு எவ்வாறு செய்யப்பட்டு இருக்கிறதோ அது போலவே உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு. சான்றாக, நுபுர் சர்மா பிரச்சனையைப் பார்க்கலாம். ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் நபிகள் நாயகம் மீது சர்ச்சை கருத்து தெரிவித்த பாஜக செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா மீது போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் டெல்லி போலீசுக்கு மாற்றி உயர் நீதிமன்ற விசாரணையை நாட உச்சநீதிமன்றம் 2022 ஆகஸ்ட் மாதம் அனுமதித்தது. நுபுர் சர்மா தொலைக்காட்சி விவாதத்தில் நபிகள் நாயகம் மீது அவதூறாகப் பேசியதால் பிரச்சனை வெடித்தது. அவர் மீது டெல்லி, கொல்கத்தா உட்பட ஒன்பது இடங்களில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் அவர் கைது செய்யப்படவில்லை. அவர் 'தலைமறைவு' என்று காவல்துறை தெரிவித்தது. அவருடைய அவதூறு அரபு நாடுகளில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது, 15- க்கும் மேற்பட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்தன; இஸ்லாமிய ஒத்துழைப்புக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்தது. "இந்தியாவைப் புறக்கணி" என்று அரபு மக்கள் ஒரு முழக்கத்தைப் பரவலாக்கினர். நுபுர் சர்மாவுக்கு உரிய பாதுகாப்புத் தரப்பட்டது, இத்தனை நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும், அப்பட்டமாக தொலைக்காட்சியில் அவதூறை அவர் பேசியிருந்தாலும், அவரைக் கைது செய்ய உச்சநீதிமன்றம் தடை விதித்தது. 2022 ஆகஸ்ட் 10 அன்று, அவரைக் கைது செய்ய விதிக்கப்பட்ட தடை முடிவடைகிற அதே நாளில், அனைத்து வழக்குகளையும் டெல்லி போலீசுக்கு மாற்றியது. இந்த வழக்குகளை ரத்து செய்திடக் கோரி நுபுர் சர்மா டெல்லி உயர்நீதி மன்றத்தை நாடுவதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்தது. நுபுர் சர்மாவின் தலையை துண்டிக்கப் போவதாக அச்சுறுத்தல் வந்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்து, அவருக்கு உரிய பாதுகாப்பும், ஒரே நீதிமன்றத்தில் வழக்கை நடத்த அனுமதியும் பெற்றனர். சனாதனம் குறித்த வழக்கில் உதயநிதியின் தலையை வெட்டுவதற்கு அவருடைய தலைக்கு 10 கோடி ரூபாய் என்று விலை நிர்ணயிக்கப்பட்ட நிலையில், தலையை வெட்டவும் கண்களைத் தோண்டவும் பல அச்சுறுத்தல் அறிவிப்புகள் வெளியாகி உள்ள நிலையில், உச்சநீதிமன்றம் உதயநிதியைச் சாடுகிறதே ஒழிய அவருக்கு உரிய பாதுகாப்புக் கொடுக்கவோ, ஆறு மாநிலங்களுக்கு இத்தகைய அச்சுறுத்தல்களுக்கிடையே எப்படிச் செல்ல முடியும் என்றோ உச்ச நீதிமன்றம் கருதவில்லை.

பாரதிய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா வெளிப்படையாக நபிகள் நாயகத்தை அவதூறு பேசி உலக அளவில் கொந்தளிப்பு ஏற்பட்டவுடன் பாஜக அவரை பொறுப்பில் இருந்து மட்டும் விலக்கி வைத்தது. வேறு எந்த விதமான நடவடிக்கையும் அவர் மீது எடுக்கப்படவில்லை. இந்நிலையில் அந்த குறைந்தபட்ச நடவடிக்கைக் கூட கூடாது என்று பார்ப்பனர்கள் இந்தியா முழுவதும் கொதித்துப் போனார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் சூரியகாந்த் மற்றும் ஜே. பி. பருத்திவாலா ஆகியோர் நுபுர் சர்மாவின் செயல் எவ்வளவு பதற்றத்தையும் பாதகங்களையும் உருவாக்கி இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினர். ஆனால் 2022 சூலை மாதம், 15 ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள், 77 ஓய்வு பெற்ற உயர் அரசு அதிகாரிகள், 25 ஓய்வு பெற்ற ஆயுதப்படை அதிகாரிகள் கூட்டாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் நுபுர் சர்மாவைக் கண்டித்ததைக் கண்டனம் செய்து அறிக்கை வெளியிட்டனர். உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவரும் நுபுர் சர்மாவை கண்டித்ததை பார்ப்பனர்கள் கடுமையாக கண்டனம் செய்தனர். நுபுர் சர்மாவைக் கண்டித்தது போன்று நீதிமன்ற வரலாற்றிலேயே இதுவரை நடந்ததில்லை என்றும், நீதிபதிகளின் கருத்துரை (observation) தொடர்பற்றது என்றும், மிகப்பெரிய ஜனநாயகத்தின் (இந்தியா) நீதிமுறைமை மீதான அழியாத வடுவை ஏற்படுத்தி விட்டதாகவும், crucifigation of the essence and spirit of the Indian constitution pronouncing her guilty without trial (விசாரணையின்றி அவரைக் குற்றவாளி என்று கூறியது இந்திய அரசியல் சட்டத்தின் சாரத்தையும் உயிரையும் சிலுவையில் அறைவது ஆகும்) என்றெல்லாம் கண்டனம் செய்தும், பரிதவித்தும் அறிக்கை வெளியிட்டார்கள். நீதிபதிகளின் இந்தக் கருத்துரை இந்திய அரசியலமைப்பின் சாரம் மற்றும் உயிரை சிலுவையில் அறைவதாகும் என்றும், விசாரணையே இல்லாமல் குற்றவாளியாக அறிவிப்பது என்றும் சனநாயக சமுதாயத்தில் ஒரு கூறாக இது இருக்க முடியாது என்றும் அரற்றினர்.

அனைத்து குற்றச்சாட்டுகளும் ஒரே ஒரு குற்றம் பற்றியது ஆகவே பல மாநிலங்களில் முதல் தகவல் அறிக்கை (FIR) இருந்தாலும் அரசியலமைப்புச் சட்டக் கூறு 20 (2 ) - இன்படி ஒரு குற்றத்திற்கு பல விசாரணைகள் மற்றும் தண்டனைகள் இருக்க முடியாது என்பதால், அரசமைப்புச் சட்டக்கூறு 20 (3) - வது பகுதியில் சொல்லப்பட்டுள்ளது போல ஒரே இடத்தில் விசாரணை என்பது உறுதி செய்யப்பட்ட அடிப்படை உரிமையாகும். இது அர்ணாப் கோஸ்வாமி Vs. இந்திய ஒன்றியம் (2020), டி.டி.அந்தோணி Vs. கேரள அரசு ஆகிய வழக்குகள் தொடர்பாக முன்னமே வரையறுக்கப்பட்டு விட்டது. ஆகவே, ஒரே பிரச்சனைக்கு மற்றொரு முதல் தகவல் அறிக்கை (FIR) மூலம் புதிய விசாரணை இருக்க முடியாது. அப்படி செய்வது இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறு 20 (2)க்கு எதிரானதாகும் . 2

இதைத்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியிலும் வழக்கறிஞர்கள் கூறினர். உலகம் தழுவிய அளவில் இந்தியாவுக்கு அவப்பெயரையும் மக்களிடையே பதட்டத்தையும் உருவாக்கிய நிபுர் சர்மாவிடம் காட்டிய அன்பையும் ஆதரவையும், சனாதனத்தை எதிர்த்துப் பேசிய குற்றத்தை செய்த உதயநிதி ஸ்டாலினிடம் காட்ட நீதிமன்றமோ அல்லது அறிவாளர்களோ தயார் இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்தால், நிபுர் சர்மா பார்ப்பனர் என்பதும், உதயநிதி ஸ்டாலின் சூத்திரர் என்பதும்தான் அடிப்படைக் காரணம் என்பது புரியும். மேலும், நிபுர் சர்மா பேசியது வருங்கால இந்துராஷ்டிரப் படைப்புக்கு ஏற்ற செயல் ; உதயநிதி ஸ்டாலின் பேசியது இந்திராஷ்டிரத்தின் அடிப்படையான சனாதனதர்மத்தை உடைக்கும் செயல்.

'சனாதன தர்மத்தை ஆதரித்துப் பேச உரிமை இருக்கிறது என்றால், மற்றவர்களுக்கு விமர்சித்துப் பேசவும் உரிமை உண்டு' என்று மேனாள் நீதியரசர் டி அரிபரந்தாமன் கூறுகிறார். சனாதனத்தை ஆதரித்துப் பேசினால் அதை நீதிமன்றமும் அறிவாளிகளும் ஏற்பார்கள்; ஆனால் அதைக் கேள்விக்குள்ளாக்கினால் கண்டனம் செய்வார்கள்.

### அரசுப் பள்ளியில் சனாதனம் பற்றிய சுற்றறிக்கை பிரச்சனை


2023 செப்டம்பர் 15 அன்று திருவாரூர் அரசு பள்ளி தொடர்பாக ஒரு பிரச்சனை கவனத்தை ஈர்த்தது, திருவாரூர் அரசு கல்லூரியில் சனாதனத்துக்கு எதிரான கருத்துக்களை பகிரக்கூடிய ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இந்து முன்னணி செய்தி தொடர்பாளர் இளங்கோவன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். நீதிபதி என். சேஷசாயி சனாதனம் என்பது நிரந்தரக் கடமைகள் என்றும், இந்து வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்களுக்கான கடமைகளை அது கூறுவதாகவும், தேசத்திற்கான கடமை, அரசருக்கு நம் கடமை, அரசருக்கு மக்கள் குறித்த கடமை, மக்களுக்கான கடமை, ஒருவனுடைய பெற்றோருக்கான கடமை, ஆசிரியர் குறித்த கடமை, ஏழைகள் மீது அன்பு காட்டக்கூடிய கடமை ஆகிய நித்திய கடமைகளில் தொகுப்பு என்றும், இந்த கடமைகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டுமா? என்றும் கேள்வி எழுப்பினார். அரசு கல்லூரியின் சுற்றறிக்கை திரும்பப் பெறப்பட்டதாக அரசின் தலைப்பில் தெரிவிக்கப்பட்டது. இதைப் பதிவு செய்து கொண்டு வழக்கு முடித்து வைக்கப்பட்டது. சனாதனம் சாதியவாதத்தையும் தீண்டாமையையும் ஊக்குவிப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது என்றும், மோசமான நடைமுறை களையப்பட வேண்டுமே ஒழிய, பயிரை ஏன் வேரறுக்க வேண்டும்? என்று நீதிபதி கேட்டார்.

சனாதனத்தில் இருப்பதாக இவர்கள் கருதும் நன்னெறிகள். நற்கருத்துகள் அனைத்தும் எல்லா நாடுகளிலும், எல்லா மத நூல்களிலும் இருக்கின்றன. சனாதனத்தில் நல்லவை என்று ஏதாவது இருந்தால் அவை முன்னமே திருக்குறளிலும், வள்ளலாரிடமும், தமிழ் இலக்கியங்களிலும் இருக்கின்றன. ஆனால் சனாதனத்தில் இருக்கும் நல்லவற்றை விட தீயவை அதிகமுள்ளன. இந்தியாவில் இருக்கும் அனைத்து சமூகங்களும் தொடர்ந்து சமூக ஒடுக்குமுறைக்குள்ளானதற்குக் காரணம் சனாதனம் என்ற ஏற்றத்தாழ்வை நிலைப்படுத்திய வாழ்வியல் முறைதான். அது மேல் சாதிக்காரர்களுக்கு மட்டுமே இனிக்கும்; ஏனைய மக்களுக்குக் கசக்கும். ஆகவே சனாதனம் முற்றிலுமாக நிராகரிக்கப்பட வேண்டும். ஒருவர் இந்துவாக இருப்பது வேறு, சனாதனியாக இருப்பது வேறு. காந்தி என்ற நல்ல இந்துவை சனாதனிகள்தான் கொலை செய்தார்கள் என்பதை மறக்கக் கூடாது.

சனாதனம் குறித்த உயர்ந்த கருத்தையும், தங்கள் ஆதரவையும் நீதிபதிகள் தொடர்ந்து பதிவு செய்து கொண்டு வருகிறார்கள். சனாதனம் என்பது வர்ணாசிரம கட்டமைப்பையும், வருணப் பிரிவுகளுக்கான வரையறுக்கப்பட்ட கடமைகளையும், உரிமைகளையும், உரிமை மறுப்புகளையும் உள்ளடக்கியதுதான் என்பதை இந்த நீதிபதிகள் அறிய மாட்டார்களா? சுருங்கச் சொன்னால், வர்ணாசிரமம் என்பது சமூகக் கட்டமைப்பு; அந்த சமூக கட்டமைப்புடன் கூடிய வாழ்வியல் முறைக்கு சனாதனம் என்று பெயர். சனாதன சமூகத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அல்லது கடைபிடிக்க வேண்டிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் தொகுப்பு தான் மனுஸ்மிருதி போன்ற ஸ்மிருதிகள். இந்திய அரசியல் சட்டம் வருவதற்கு முன் மனுதர்மப்படி இந்தியாவின் பல்வேறு 'தேசங்களில் ' நிர்வாகம் நடைபெற்றது. ஆனால், மனுதர்மத்திற்கு பதிலாக மக்களின் உரிமைகளை உத்தரவாதப்படுத்தக்கூடிய இந்திய அரசியல் சட்டம் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. முன்பு நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வியல் முறை சனாதன தர்மம். இன்று மக்களின் வாழ்வையும் அரசியலையும் நெறிப்படுத்தும் சட்டம் இந்திய அரசியல் சட்டம்.

இந்நிலையில் இந்திய அரசியல் சட்டம் உத்தரவாதப்படுத்தும் இட ஒதுக்கீட்டைக்கூட நீதிபதிகள் எதிர்க்கிறார்கள். பிறப்பின் அடிப்படையில் ஏற்ற தாழ்வு கற்பித்து பல நூறு ஆண்டுகள் கொடுமைகளை அரங்கேற்றிய வர்ணாசிரம முறை சாதிக் கேடுகளுக்குக் காரணமா என்று நீதிபதி கேள்வி எழுப்புகிறார்.


## திருவள்ளுவர் 2050-2055 அடைவுகள்




**திருவள்ளுவர் 2050**
**ஆண்டுகள்**
**அடைவுகள்**

நூலின்
அடுத்த ஐந்தாண்டுகளுக்கு உரிய
தொடர்ச்சி..

பக்கங்கள் 112
விலை 150
தொடர்புக்கு : 9092948002


நீதிபதிகளின் அறிதலுக்கும், புரிதலுக்கும் எல்லை இருக்கிறது. மற்றவர்களைப் போலவே அவர்களும் அறிந்து கொள்ள வேண்டியவைகள் ஏராளம் இருக்கலாம். தங்களுடைய விருப்பு வெறுப்புகள்தம் சாதி உணர்வு, தம் மத உணர்வு போன்றவை நம்முடைய பணியில் குறுக்கிடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். தம் சாதி மாநாட்டில் ஒரு நீதிபதியாகச் சென்று பங்கேற்கக் கூடிய ஒருவர், கண்டனத்துக்குரிய மனுஸ்மிருதியை ஆதரித்து மாநாட்டில் பேசக்கூடிய ஒருவர் சனாதன தர்மத்தை ஏற்றிப் போற்றிப் பேசுவதில் வியப்பில்லை. ஆனால் அது ஏற்கத்தக்கது அல்ல. சனாதன தர்மம் என்பது முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்; பதிலாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் பேசும் சனநாயகம், சமத்துவம், சமூக நீதி, சமயச்சார்பின்மை, சகோதரத்துவம் ஆகியவை உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தை மேலும் செழுமைப்படுத்த வேண்டும். தனிமனித உரிமைகளைப் போலவே, தேசிய இனங்களின் உரிமைகளும், தேசிய இன இறையாண்மையும் சேர்க்கப்பட்டு, இந்திய அரசியல் சட்டம் முழுமையான ஒன்றாக மாற்றப்பட வேண்டும். இதைத்தான் சட்டங்களை நன்கு கற்றறிந்த, நீதி பரிபாலனத்தில் தோய்ந்த நீதிபதிகள் தம் வரலாற்று பங்களிப்பாகச் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

### சனாதன ஆதரவுக்கு என்ன காரணம்?

மாறாக, பலர் மனுஸ்மிருதியையும், சனாதனத்தையும் இன்றளவும் ஏன் பிடித்துக் கொண்டு தொங்குகிறார்கள்? இன்று இல்லாவிட்டாலும் நாளை பழைய வர்ண - சாதி சனாதனமுறையை உயிர்ப்பித்து விடலாம் என்ற நப்பாசைதான் காரணம். தம் ஆரிய இன மேலாண்மையை, தன் சாதி மேலாண்மையை, தம் சமூக மேலாண்மையை நிரந்தரப்படுத்திவிட வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்குள் இருக்கிறது. சனாதனதர்ம ஆதரவாளர்களை ஆய்வு செய்தால் ஓர் உண்மை தெளிவாகத் தெரிகிறது. பிறப்பால் பார்ப்பனர்களாக இருப்பவர்கள் பெரும்பாலும் சனாதனத்தை, வர்ணாசிரமத்தை ஆதரிக்கிறார்கள். சூத்திரர்களாக, பஞ்சமர்களாக உள்ளவர்கள் சனாதனத்தை எதிர்க்கிறார்கள். சமூக சமத்துவம் நிறுவப்பட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் சனாதனம் மாய்க்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

### தமிழ் மக்கள் கவனத்திற்கு ...

நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வழக்குகள் உதயநிதி ஸ்டாலின், ஆ. ராசா போன்ற தனி நபர்களுக்கு எதிரானவை அல்ல. அவ்வழக்குகள் தமிழ்ச் சமூகத்துக்கு எதிரானவை; தமிழ்ச் சமூகத்தின் சிந்தனை மரபுக்கு எதிரானவை; சனநாயகம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படை கோட்பாடுகளுக்கு எதிரானவை. ஆகவே, கட்சி அடிப்படையில் ஆதரிப்பது அல்லது ஒதுங்கி நிற்பது என்ற போக்கை தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும், அமைப்புகளும், சமூக செயல்பாட்டாளர்களும் கைவிட வேண்டும். பார்ப்பனியத்தையும், பாசிசத்தையும் விரட்டியடிப்பதில் அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து நிற்க வேண்டும். பழைய சனாதன தர்மம் நிலவும் இந்துராஷ்டிரத்தை மீண்டும் உருவாக்கி விட வேண்டும் என்று சனாதனிகள் இரவு பகலாக வேலை செய்கிறார்கள். சமத்துவத்தில் நம்பிக்கை உள்ள அனைவரும் தங்களுக்குள் இருக்கக்கூடிய வேறுபாடுகளை மறந்து களத்திற்கு வர வேண்டும்! சனநாயகமும், சமத்துவமும் உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டும் !

●



**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. கோ. பிச்சைவள்ளிநாயகம், சென்னை | 500 |
| திரு. தென்முகநம்பி | 1000 |
| முனைவர் முத்தமிழ் | 1000 |
| தேவக்கோட்டைத் தோழர்கள் | 5000 |
| திரு. அன்புநிதி | 1000 |


**வெளியீட்டுக் குழு** : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
**தமிழ்நாடு** (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
**(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்)** **மின்னஞ்சல்** : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005

# எளிய மக்களின் படைப்பாளி, மார்க்சிய சிந்தனையாளர் தோழர் இராசேந்திரசோழன்

**காஞ்சிஅமுதன்**
தமிழ் உரிமைக் கூட்டமைப்பு



எழுபதுகளின் தொடக்கத்தில் எழுதத் தொடங்கிய அஸ்வகோஷ் எனும் இளைஞன் தனது வாசிப்பு தேடல்வழி குமுகாய உணர்வு பெற்று மார்க்சியம் எனும் தத்துவம் ஏற்று எழுத்தாளராக, நாடகக் கலைஞனாக, இயக்கத் தலைவராக , தமிழ்த்தேசியம் எனும் கோட்பாட்டை மக்களியக்கமாக மாற்றிட உழைத்து- தனது 79 ஆம் அகவையில் 29- 03- 2024- இல் சென்னையில் மறைந்த தோழர் இராசேந்திர சோழன் அவர்கள் மானிட சமூகத்தின் முன்னத்தி ஏர்களில் ஒருவர்..

சாதி மறுப்பு மணம் செய்துகொண்ட ஆசிரியர்களான இரத்தினசபாபதி- இரமணிபாய் ஆகிய பெற்றோருக்கு 1945- ஆம் ஆண்டு டிசம்பர் 17- ஆம் நாள் ஒன்றுபட்ட தென்னார்க்காடு மாவட்டத்தின் உளுந்தூர்பேட்டையில் பிறந்தார். தனது இளமைக்காலம் தொட்டு முதுமைக் காலம் வரை மயிலம் எனும் சிற்றூரில் வாழ்ந்தார்.

அகவை 17- இல் ஆசிரியப் பணி கிடைத்த நிலையில் ஆண்டுத் தணிக்கையில் வயது குறைவு காரணமாக அப்பணியிலிருந்து நீக்கப்பட்டு, நான்கு ஆண்டு இடைவெளியில் மீண்டும் ஆசிரியப் பயிற்சி படித்து மயிலம் பகுதியில் ஆசிரியராக பணிஏற்றார். தனது கண்முன் நிகழும் எளிய மக்களின் உண்மையான வாழ்க்கை நிகழ்வுகளை, வாழ்க்கைப் போராட்டத்தைக் குறிப்பாக பெண்களின் அக உணர்வுகளை நுட்பமாக வட்டார வழக்கில் தனது படைப்புகளை 1970- களில் எழுத்துகளாக வடித்து செம்மலர், உதயம், கசடதபற, கணையாழி உள்ளிட்ட இதழ்களில் வெளிப்படுத்தினார். எங்கள் தெருவில் இவர் எழுதிய சிறுகதை ஆனந்தவிகடன் இதழில் முதல் பரிசுபெற்றது. எழுத்து, வாசிப்பு என இடையறாது தொடர்ந்த நிலையில் எழுத்தில் மட்டும் நிறைவுறாமல் சமூகத்தில் நிலவும் சாதி, பொருளியல் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு அதை மாற்ற அமைப்பாக மக்களைத் திரட்டும் பணியிலும் ஒருசேர களம் கண்டார்.

1980- களில் ஈழத்தில் நடைபெற்ற தமிழர் இனப்படுகொலை தமிழ்நாட்டில் பெரும் அரசியல் கொந்தளிப்பையும் தமிழ்- தமிழர்- தமிழ்த்தேசியம் எனும் உணர்வும், உரிமையும் பீறிட்டு எழுந்த காலமாக இருந்தது. அந்தக் காலத்தில் இடது சாரி இயக்கமெனும் சிபிஎம் கட்சியில் செயலாற்றிய தோழர்கள் ஈழ இனச்சிக்கலுக்கு மார்க்சிய வழியில் தோழர்கள் இலெனின் ஸ்டாலின் காட்டிய அரசியல் திசையில் ஈழத்தமிழர்களின் தன்னுரிமைக்குக் (பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமைக்கு) கட்சித் தலைமையிடம் குரலெழுப்பினர். கட்சித் தலைமை தோழர்களின் கருத்தை ஏற்க மறுத்ததுடன் ஒன்றுபட்ட இலங்கையில் உழைக்கும் சிங்கள மக்களுடன் இணைந்து வாழவேண்டுமென வலியுறுத்தினர். புரட்சியை இலக்காகக் கொள்ளாமல் தேர்தல் அரசியலில் மாறி மாறி கூட்டு வைக்கும் அரசியல் நிலைப்பாட்டை ஏற்க மறுத்ததுடன் புரட்சிக் கோட்பாட்டை முன்வைத்து சிபிஎம் அமைப்பிலிருந்து வெளியேறிய தோழர் பெ. மணியரசன், கவிஞர் தணிகைச்செல்வன், பேராசிரியர் செள. வேணுகோபால், கி. வெங்கட்ராமன், அ. பத்மநாபன் உள்ளிட்ட தோழர்கள் 1985- ஆம் ஆண்டு எம்.சி.பி.ஐ எனும் அமைப்பை உருவாக்கியபோது அதன் முன்னணி தலைவர்களில் ஒருவராக தோழர் இராசேந்திர சோழன் விளங்கினார்.

1982 ஆம் ஆண்டுமுதல் சிபிஎம் கட்சியின் இளைஞர் அமைப்பான வாலிபர் சங்கத்தில் செயல்பட்டுவந்த நானும் கட்சி மற்றும் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் செயல்பட்டு வந்த மருத்துவர் விழுனாமூர்த்தி, ஆசிரியர் பா. சுந்தரராசன், க.கோதண்டன், பாவலர் பூங்குன்றன், கவிஞர் பாரதிவிசயன், டி.இ. செயராமன், கே. எஸ். கோவிந்தசாமி மூ. மனோகரன் உள்ளிட்ட பல தோழர்களும் இதே காரணங்களுக்காகக் கட்சியிலிருந்து விலகி எம்சிபிஐ அமைப்பில் இணைந்தோம். அதுநாள் தொட்டு தோழர் இராசோ அவர்களுடனான எனது தோழமை வலுப்பெற்று நாளும் வளர்ந்தது.

தோழர் இராசோ சிறுகதை எழுத்தாளர் மட்டுமன்று; அவர் ஒரு சிறந்த மார்க்சிய அறிஞராகவும் விளங்கினார். ஜார்ஜ் பொலிட்சர் எழுதிய மார்க்சிய மெய்ஞானம் எனும் நூலைப்போன்று தமிழ்நாட்டு இளைஞர்- மாணவர்கள் தொழிலாளத் தோழர்கள் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைப் புரிந்து கொண்டு மார்க்சியத்தை ஏற்கும் வகையில் கடவுள் என்பது என்ன? என்ற நூலை எழுதி வெளியிட்டார். அது எங்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.. மார்க்சிய அரசியல் வகுப்புகளில் தோழர் இராசோ அவர்களின் தத்துவ வகுப்புகள் அனைவரையும் ஈர்த்தன.

"மாஸ்கோவில் மழைபொழிந்தால் மதுரையில் குடைபிடிக்கும்" வறட்டுத் தன்மை மிகுந்த அந்தக் காலத்தில் 1988- ஆம் ஆண்டு கூடங்குளத்தில் இரஷ்யா அணு உலை அமைக்க ஒப்பந்தம் தீட்டிய போது "ரஷ்யாவிலிருந்து இலெனினிசம் வரட்டும் அணுவிசம் வேண்டாம்" என்றார் மக்கள் கவிஞர் தணிகைச்செல்வன். அக்காலத்தில் தோழர் இராசோ அணுசக்தி குறித்து நுட்பமான அறிவியல் கருத்துக்களை அணுசக்தி ஆபத்துகளை எளிய மக்களுக்கும் விளங்கும் வகையில் அணுசக்தி மர்மம் தெரிந்ததும் தெரியாததும் எனும் நூலை எழுதி வெளியிட்டார். அப்போது அது அணுசக்தி எதிர்ப்புக் கூட்டியக்கத்திற்கு ஒரு கையேடாக விளங்கியது. .அண்மைக்காலத்தில் அணுசக்திக்கு எதிராக சுப. உதயகுமார் தலைமையில் கூடங்குளத்தில் போராடியவர்களுக்கும் மற்றும் மக்களுக்கும் அந்நூல் அணு சக்திக்கு எதிரான ஓர் போர் ஆயுதமாக விளங்கி வருகிறது.

மொழி உரிமை மீட்புப் போராட்டக்களத்தில் 1986- ஆம் ஆண்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் இந்தித் திணிப்பை எதிர்த்தப் போராட்டம் தொடங்கி தனது வாழ்நாள் இறுதிவரை மொழிகாப்புக் களத்திலே நின்றார். மும்மொழிக்கொள்கை - இருமொழிக் கொள்கைக்கு மாற்றாக ஒரு மொழிக்கொள்கையை தமிழகம் எங்கும் பரப்பிட தமிழ் உரிமைக் கூட்டமைப்புவழி தொடர் இயக்கங்கள் மற்றும் களச்செயல்பாட்டிலே முன்னின்று செயல்பட்டார். அதற்காக பல கட்டுரைகளை தீட்டினார். நூல் பல எழுதினார்.

புலவர் கி. த. பச்சையப்பன், முனைவர் அரணமுறுவல், திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார், ஓவியர் வீர. சந்தானம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களின் துணையோடு தமிழ் உரிமைக் கூட்டமைப்பு வட தமிழ்நாட்டில் தமிழ்வழி கல்விக்காக பத்து நாள்கள் மக்கள் சந்திப்புப் பயணம் மேற்கொண்டதுடன் தமிழ்வழிப்பள்ளிகள் தமிழகம் எங்கும் தொடங்கப்படவும் .தமிழ்வழியில் கற்றவர்களுக்குத் தமிழ்நாட்டு வேலை வாய்ப்பில் 85 விழுக்காட்டு இடங்கள் ஒதுக்க வேண்டும் எனும் முழுக்கத்தை மக்கள் முழக்கமாக்கிடப் பெரிதும் துணை நின்றார்.

மயிலம் பகுதியில் இருந்து உலகத் தரம் வாய்ந்த கருப்பு கற்கள் வெட்டி எடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த போது அவ்வியற்கை வளக் கொள்ளையை எதிர்த்திட தொழிலாளர் இயக்கம் கண்டு அவர்களின் உரிமைக்காக உயிரைப் பணயம் வைத்து போராட்டக் களத்தில் நின்றார்.

மயிலம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பகுதி பிரச்சினைகளைத் தீர்க்க வலுவான இளைஞர் அமைப்புகளைக் கட்டி எழுப்பினார். அமைப்பு வளர்ச்சிக்கு, கூட்டுறவு பால் சங்கம் அமைத்து அதை திறம்பட நடத்த வழிவகுத்தார்.

1990- ஆம் ஆண்டு தமிழ்த்தேசத் தன்னுரிமை மாநாடு நடத்தியதற்காக தோழர் பெ. மணியரசன் கைது செய்யப்பட்டு அமைப்பு நெருக்கடியைச் சந்தித்த நிலையில் 1991 ஆம் ஆண்டு தேர்தல் பரப்புரைக்கு வந்த இராஜீவ்காந்தி தமிழ்நாட்டில் கொல்லப்பட்டு விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டு த.தேபொ.க அமைப்பும் தடைசெய்யப்படலாம் என்ற நிலையில் தனது ஆசிரியர் பணியைத் துறந்து அமைப்பின் முழு நேர ஊழியராக தன்னை இணைத்துக்கொண்டு உறுதியுடன் தனது அரசியல் பயணத்தைத் தொடர்ந்தார்

1992- ஆம் ஆண்டு தடா எதிர்ப்பு, தமிழ்வழிகல்வி, காவிரி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக செங்கிப்பட்டி முதல் சென்னை வரை அவர் தலைமையில் மிதிவண்டிப்பயணம் நடைபெற இருந்த நிலையில் அப் பயணம் அரசால் தடைசெய்யப்பட்டது. தடையை மீறி இருபத்தைந்து தோழர்கள் செங்கிப்பட்டியில் பயணம் தொடங்கியபோது கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டோம். அவர்களில் நானும் ஒருவன் என்பதை நினைவு கூர்கிறேன். சிறையில் நாளும் அரசியல் வகுப்புகள், ஆடல், பாடல் என சிறையை ஒரு பயிற்சிக் கூடமாக மாற்றினார் தோழர் இராசோ. அவ்வழக்கு 12 ஆண்டுகாலம் தஞ்சையில் நடைபெற்றது. 2004- ஆம் ஆண்டு அனைத்து தோழர்களும் விடுதலை செய்யப்பட்டோம். அதன்பின் பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைக்குப் பலமுறை சென்றுள்ளார்.

1992- ஆம் ஆண்டு காஞ்சியை அடுத்த ஐயன்பேட்டையில் த.தே.பொ.க முதல் மாநில மாநாடு நடத்தினோம். அதில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிடுவது குறித்தும்..தமிழ்நாட்டை சுரண்டிக்கொழுக்கும் வடநாட்டு மார்வாடி சேட்டுகளை எதிர்த்து இயக்கம் காண அமைப்பு முடிவெடுக்க பெரிதும் துணையாக நின்றவர் தோழர் இராசோ.

1994- ஆம் ஆண்டு மார்வாடி எதிர்ப்பு பான்பராக் போதை பாக்கு எதிர்ப்பு மாநாடு தமிழக இளைஞர் முன்னணி சார்பில் சிதம்பரத்தில் நடத்தியபோது கடும் அடக்குமுறைகளை அரசு ஏவியதுடன், அம்மாநாட்டைத் தடை செய்தது. தடையை மீறி பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டோம். கைதான இளைஞர்களில் பலர் மயிலம் பகுதி தோழர்கள் என்பது வரலாற்று நிகழ்வாகும். இளைஞர்களைத் திரட்டியதில் தோழர் மயிலம் பாபுவிற்கும், தோழர் இராசோ அவர்களும் பெரும்பங்கு உண்டு என்பது தோழர்கள் அறிந்த ஒன்றாகும்.

1995 ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டை எதிர்த்து தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி நடைபெற்ற போராட்டம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் நடைபெற்றது. அரசின் அடக்குமுறை மற்றும் தாக்குதலை எதிர்த்து தமிழறிஞர்கள் மற்றும் அமைப்புத் தோழர்கள் பலர் கைதாகி திருச்சி சிறையில் அடைக்கப்பட்டோம். அப்போராட்டத்திலும் மயிலம் பகுதி தோழர்கள் திரளாக பங்கேற்கத் துணைநின்றவர் தோழர் இராசோ.

இயல்பில் எழுத்தாளராக தோழர் இராசோ அவர்கள் எப்பொழுதும் எழுத நேரமின்றி பல கதாபாத்திரங்களைத் தனது மண்டைக்குள் ஓடவிட்டு அவர்களால் படும் அவஸ்தையை நாளும் எதிர்கொண்டார் என்பதும் தனது கதை எழுதும் அனுபவங்கள் குறித்து பரிதாப எழுத்தாளர் பண்டிதர் புராணம் எனும் தொகுப்பை வாசிக்க அதை அறியமுடியும். எழுத்துப் பணியோடு மட்டுமின்றி அவர் நாடகத்துறையில் தனிப் பயிற்சிபெற்றவர் இந்திரா காந்தி காலத்தில் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்த்து வட்டம் எனும் நாடகத்தை 21- வது அம்சம் நூல்களை எழுதினார்.. தோழர் நெய்வேலி பாலு உள்ளிட்ட தோழர்களைக்கொண்ட நாடகக்குழு ஒன்றை நடத்திவந்தார். அவரின் ஒப்பனைகளற்ற கதாபாத்திரங்களைக் கொண்ட நாடகங்கள் மக்களைப் பெரிதும் ஈர்த்தன.. தேர்தல் நாடகம் ஒன்றை காஞ்சிபுரம் அடுத்த கோளிவாக்கம் பகுதியில் தங்கி நாடகப் பயற்சி தந்து எங்களை நடிக்க வைத்தார். அந்நாடகத்தை வாலாசாபேட்டை பேருந்து நிலையத்தில் நடத்தியபோது - நாடகத்தின் நிறைவில் பேருந்து நிலையம் எங்கும் மனிதத் தலைகளே நிறைந்து இருந்தது. நாடகம் முடிந்த பின்னும் மக்கள் கூட்டம் களையவே இல்லை.. தமிழ்நாட்டின் மிகச்சிறந்த நாடக ஆளுமையர்களில் ஒருவராக தோழர் இராசோ அவர்கள் விளங்கினார் அதிலும் அவர் தொடர்ந்து உரிய கவனம் செலுத்தாமல் அமைப்புப் பணிகளில் நேரடியாக கவனம் செலுத்தியது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகக் கருதுகிறேன்.

தமிழ்த்தேசியம் எதிர்கொள்ளும் சாதியம்- வர்க்கம் குறித்த சிக்கலை மார்க்சிய வழியில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் பல நூல்களை எழுதினார். மார்க்சியத்திற்கு எதிரான நுண் அரசியல் என்ற போர்வையில் 1990- களில் புனையப்பட்ட பின்

*நவீனத்துவத்தை முறியடிக்க பின் நவீனத்துவம் பித்தும் தெளிவும் என்ற நூல் எழுதினார்.. தமிழர் கண்ணோட்டம் - மண்மொழி இதழ்களில் பல கட்டுரைகளை எழுதினார்*

*இவரது கடவுள் என்பது என்ன ? நூல் அலைகள் அச்சகம் பல பதிப்புகள் வெளியிட்டு எளிய மக்களை அரசியல்படுத்த துணைநிற்கிறது. இவரது சிறுகதைகள் மற்றும் மார்க்சிய மெய்ஞானம் எனும் நூல்களை தமிழினி வசந்தகுமார் தொகுத்து வெளியிட்டுள்ளார். தோழர் இராசோ அவர்களின் பல படைப்புகளை ஆசிரியர் அய்யாசாமி அவர்களின் மங்கை பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தோழர் இராசோ குறித்து சினி தமிழ்மணி செங்கொடி குழுவினர் பல கட்டுரைத் தொகுப்புகளை கொண்டுவந்துள்ளனர். தோழர் பவா செல்லதுரையின் மகன் வம்சி ஆவணப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.*

*இயல்பில் நடுநாட்டு எழுத்தாளராக தோழர் இராசோ தனது எழுத்துப்பணியில் மேலும் பல படைப்புகளை உருவாக்கி இருக்க வேண்டும். நாடகத்துறையில் ஈடுபட்டு தமிழகத்தின் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு துணை நின்றிருக்க வேண்டும். அமைப்பு வழியில் தொடர்ந்து செயல்பட்டு சமூக மாற்றத்திற்கும் பெரிதும் துணைநின்றிருக்க வேண்டும்.*

*2005 ஆம் ஆண்டு த.தேபொ.க அமைப்பிலிருந்து நாங்கள் விலகி தமிழ்த்தேச மார்க்சியக் கட்சி என்ற அமைப்பைத் தொடங்கி நடத்தி வந்த நிலையில் அவரின் இடையறாத மனப்போராட்டம் மற்றும் உடல் நடுக்க நோய் காரணமாக பல ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டார். தனது மகன் நீதிபதி பார்த்திபன், மருமகள் இராசேசுவரி, மகள் பாரதி மணிவண்ணன் மற்றும் தோழர் மாயவன் பராமரிப்பில் சிறப்பாக பார்த்துக் கொண்டனர். ஓரளவு நடமாடியபோது தோழர் பவா சமத்துவனும் தனது புதுயுகம் விடுதியில் வைத்து பார்த்துக்கொண்டார்.*

*39 ஆண்டுகள் அமைப்புவழி பல பொறுப்புகளிலும், முழுநேர ஊழியராகவும் அவருடன் பழகி செயல்பட்ட நாட்களும், காஞ்சிபுரம் அவருக்கு நிறைவு தரும் ஊராக இருந்து தோழர்களுடனும் குடும்பத்துடனும் அவர் பழகிய நாட்களும் என்றும் மறக்கவியலாத பேரனுபவமாகும். இப்படி ஒரு தோழரை இனி காண இயலாது என்பது பெருந்துயராகும்.*

*தனது மூளை எனும் பொருளுக்குள் (மண்டைக்குள்) ஓடிய பல கதாபாத்திரங்களின் குமுறல்கள்- ,பிக்கல் பிராண்டல்கள் மற்றும் சமூக மாற்றத்திற்கான கருத்துகள் தோழர்கள் என எந்நேரமும் ஓயாது சிந்தித்த அவரது மூளை தனது செயல்பாட்டை நிறுத்தி காலத்தோடு கரைந்துவிட்டது. அவர் இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றுவிட்டார்.*

*திண்டிவனம் மயிலம் புதுச்சேரி சாலையில் எளிய மஞ்சம் புல் வேய்ந்த குடிசை வீட்டில் இருந்து தோழர் இராசோவும், அவர் துணைவியர் இராசகுமாரி அவர்களும் ஆற்றிய சமூகப் பங்களிப்பு காலத்தால் அழியாத நினைவுகளாகும். தோழர் இராசேந்திரசோழன் புகழ் ஓங்கி ஒலிக்கட்டும். அவர்கண்ட சமூக மாற்றம் அவர் படைப்புகள்வழி ஓர் நாள் கிட்டும்.. அதற்குக் களம் காண்போம். தோழர் இராசேந்திர சோழனுக்குச் செவ்வணக்கம்!*

# சட்டமே! என் தாய்மொழி பேசு!

**புளியந்தோப்பு மோகன்**
சமூகச் செயற்பாட்டாளர்

சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆங்கிலமே அலுவல் மொழியாகத் தற்போது இருந்து வருகிறது. அதனோடு தமிழ் மொழியினையும் அலுவல் மொழியாகக் கூடுதலாகச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் 2024 பிப்ரவரி 28 முதல் காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தை வழக்குரைஞர்கள், வழக்காடிகள், சட்டக் கல்லூரி மாணவர்கள், தமிழறிஞர்கள் ஆகியோர் தொடங்கினர். ஓர் அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள உரிமைக்காக நாம் நம் உயிரைப் பணையம் வைத்துப் போராட வேண்டிய நிலையிலேயே இந்திய அரசு நம்மை வைத்துள்ளது. அரசமைப்புச் சட்ட உறுப்பு 348 (2)இன்படி உயர் நீதிமன்றங்களில் ஆங்கிலத்தோடு சேர்த்து அந்தந்த மாநில அலுவல் மொழிகள் அல்லது இந்தியை உயர் நீதிமன்றங்களில் அலுவல் மொழியாகப் பயன்படுத்திக் கொள்ள உரிமை வழங்குகிறது. 2006- இல் இந்த அரசமைப்புச் சட்ட உரிமையை நடைமுறைப்படுத்திட அன்றைய தமிழ்நாடு அரசு தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அன்றைய குடியரசுத் தலைவர் ஒப்புதல் வேண்டி அனுப்பியது. இந்தத் தீர்மானம் நிறைவேற்றுமுன் அன்றைய தமிழ்நாடு முதலமைச்சசர் திரு மு. கருணாநிதி அவர்கள் அன்றைய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஏ. பி. ஜா கருத்தறிவதற்காக ஒரு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். அந்தக் கடிதத்துக்கு ஏ. பி. ஜா முழு அமர்வைக் கூட்டி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தில் உயர் நீதிமன்றத்தில் தமிழை அலுவல் மொழியாக்குவதில் மறுப்பு இல்லை எனத் தெரிவித்தார். உயர் நீதிமன்றங்களில் அலுவல் மொழியை முடிவுசெய்யுமுன் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி இசைவு தேவையென 1965இல் ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் தீர்மானித்தது. அரசமைப்புச் சட்ட உரிமைக்கு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் இசைவு பெற வேண்டும் என்பது அரசமைப்புச் சட்டத்துக்கே முரண்பாடானது. தமிழ்நாடு அரசு போன்றே மேற்கு வங்கம் (1977), குசராத் (2012), கர்நாடகம் (2014) உயர் நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளை அலுவல் மொழியாக்கிட தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது. இருப்பினும், நமக்கு மறுக்கப்பட்டது போன்றே, இவர்களுக்கும் அரசமைப்புச் சட்ட உரிமை மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த 18 நாளுக்குள்ளாகவே இராசசுதானிலும் (1950), உத்தரப்பிரதேசத்திலும் (1969), மத்தியப்பிரதேசத்திலும் (1971), பீகாரிலும் (1972) இந்தி நீதிமன்ற அலுவல் மொழியாக நடைமுறைக்கு வந்தது.

“இப்போது காலம் கனிந்து வந்துள்ளது. இப்போது பேசும் போதே மொழியாக்கம் செய்யும் செயற்கை நுண்ணறிவு ஊழியில் நாம் இருக்கிறோம். தற்போது நடைபெற்ற ஜி20 மாநாடே அதற்குச் சான்று. அதில் கலந்துகொண்ட எந்த நாட்டுத் தலைவருக்கும் ஆங்கிலம் தெரியாது எனலாம். ஆனால் அவர்கள் பேசும் மொழியை உடனடியாக மொழியாக்கம் செய்யும் தொழில்நுட்பம் வந்துள்ளது. அதே போல நாடாளுமன்றத்திலும் பெரும்பாலானோர் அவர்கள் தாய்மொழியில்தான் பேசுகிறார்கள். அதை மொழியாக்கம் செய்ய, தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. அங்கெல்லாம் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், நீதிமன்றத்தில் ஏன் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது?

ஒரு சிலர் தலைமை நீதிபதிக்குத் தமிழ் தெரியாது என்ற பதிலைக் கொண்டு வருகிறார்கள். அந்த ஓரிருவருக்காக ஏன் 8 கோடி தமிழர்கள் அவதியுற வேண்டும்? நியமனம் செய்யும் போதே தமிழ் தெரிந்த நீதிபதியை ஒன்றிய அரசு, மாநில அரசு ஊழியர்களுக்கு அந்தந்த மாநில அலுவல் மொழிகளில் தேர்ச்சி பெறுவது பணி நிரந்தரத்துக்கான கட்டாயமாக இருக்கும் தேர்வில் ஏன் அதே நடைமுறையை நீதிபதிகளுக்கும் விதிக்கக் கூடாது. அல்லது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் நடைமுறையைச் செயல்படுத்துவதே அறமாக இருக்கும்.

“இன்றைய சூழலில் ஒவ்வொருவரும் நீதிமன்றத்தை அணுக வேண்டியுள்ளது. ஆனால் நீதிமன்றங்கள் ஒவ்வொருவருக்கும் புரியும் மொழியில் இயங்குகிறதா என்றால் இல்லை. அரசமைப்புச் சட்டம் ஒவ்வொருவரும் அவரவர் வழக்குகளை வழக்குரைஞரின்றித் தாங்களாகவே நடத்தும் உரிமையை




அரசமைப்புச் சட்டம் வழங்கியிருந்தாலும், மக்கள் மொழியிலன்றி வேறு எந்த மொழியில் நீதிமன்றங்கள் இயங்கினாலும், அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள இந்த உரிமை பரந்துபட்ட மக்களைச் சென்றடையாது. ஒருவேளை கண்ணகியைப் பாண்டிய அரசவையில் தமிழல்லாமல் ஆங்கிலத்தில் வழக்காடச் சொல்லியிருந்தால், அவளால் எப்படி நீதியை நிலைநாட்டியிருக்க முடியாதோ, அது போன்ற நிலையே நம் நாட்டு மக்களுக்கும்.

இந்திய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருக்கும் சந்திர சூட், முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி. வி. ரமணா போன்றோரும் கூட, கடந்த காலங்களிலும், அண்மையிலும் அந்தந்த மாநில மொழியையே நீதிமன்ற அலுவல் மொழியாக ஆக்க வேண்டும் என்ற கோரி வருகிறார்கள். அண்மையில் கூட உத்தரப் பிரதேசத்தில் சட்டக் கல்லூரி ஒன்றைத் திறக்கச் சென்ற சந்திர சூட் இந்தியில் சட்டத்தை வழங்க வேண்டும் என்றார். அதற்கு அவர் சொல்லிய காரணம் ஆங்கிலத்தில் வழங்கினால் நகர்ப்புற மேட்டுக்குடி மாணவர்கள் மட்டுமே பயன்பெறுவார்கள், அதுவே இந்தியில் வழங்கினால் கிராமப்புற விளிம்பு நிலை மாணவர்களும் பயன்பெறுவார்கள் என்றார். இதுதான் நம் கருத்தாகவும் இருக்கிறது.

உயர் நீதிமன்றத்தில் தமிழ் என்பது ஏதோ மொழி உணர்வு சார்ந்த கோரிக்கையாக மட்டும் பார்க்கக் கூடாது. ஆண்டாண்டுக் காலமாக வெறும் ஆங்கிலத்தை மட்டும் வைத்துக் கொண்டு சில குறிப்பிட்டப் பிரிவினரின் ஆதிக்கத்தை நிர்முலமாக்கும் ஒரு சமூகநீதிக் கோரிக்கை. ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் தொழிலுரிமை சார்ந்த கோரிக்கை. தமிழில் சட்டம் படித்த சட்டக் கல்லூரி மாணவர்களின் வழக்காடும் உரிமையை வெளிப்படையாகத் தடுக்கிறது. இது அரசமைப்புச் சட்ட உறுப்பு 19 (1) (நி) வழங்கியுள்ள உரிமையுங்கூட.

இந்த அரசமைப்புச் சட்ட உரிமைகளை நடைமுறைப்படுத்திட 24 தமிழர்கள் பட்டினிப் போராட்டம் இருக்க வேண்டிய நிலையில் நாம் இன்று இருக்கிறோம். ஒவ்வொரு மாநிலத்துக்கு என்று இறையாண்மை இருக்கிறது. ஆனால் நம் நாட்டில் நம் உயர்நீதிமன்றத்தில் நம் மொழியில் நீதிமன்றத்தை நடத்துவதற்குக்கூட நாம் உரிமையற்று இருக்கிறோம். இதை உணர்ந்துதான் உயர்நீதிமன்றத்தில் தமிழ் மக்கள் இயக்கம், உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்குரைஞர் செயற்பாட்டுக் குழு 8 நாள் பட்டினிப் போராட்டம் நடத்தி தமிழ்நாடு அரசு கொடுத்த உறுதியை ஏற்று பட்டினிப் போராட்டத்தை ஒத்தி வைத்துள்ளோம். நம் தமிழ் நாட்டில்தான் இந்திய ஒன்றியத்திலேயே முதல் முறையாக மாமன்ற அவையில் ஆங்கிலமல்லாமல் தன் தாய்மொழியில் பதவியேற்றுக் கொண்டு, உரை நிகழ்த்திய வரலாறு உண்டு. அதைச் செய்து காட்டியவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். அவர்தான் கூறுவார் : “எங்கள் நாட்டில் தமிழ் மொழியிலன்றி வேறெந்த அந்நிய மொழியிலும் அரசியலை, நீதி நிர்வாகத்தை எங்கள் நாட்டில் நடத்த விட மாட்டோம்.” அவர் வழியில், உயர் நீதிமன்றத்தில் தமிழ் என்னும் நம் இறையாண்மை சார்ந்த கோரிக்கையை விரைவில் வென்றெடுப்போம்.

தமிழர்களுக்கு
ஆங்கிலம் அறிவன்று! வெறும் ஊடகம்!
தமிழ் வெறும் ஊடகமன்று! அறிவு!



# புலவர் கலியபெருமாளின் நூற்றாண்டு!

**பொழிலன்**
தமிழக மக்கள் முன்னணி

புலவர் கலியபெருமாள் அவர்களுக்கு நூறாண்டுகள் நிறைவேறியிருக்கிறது.. காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.. அது ஓடிக்கொண்டே இருக்கிறது.

புலவர் கலியபெருமாள் மறைவுற்று 17 ஆண்டுகள் ஆகிவிட்டன.. அவர் தமது 83-ஆம் அகவையில் மறைவுற்றிருக்கிறார்.. தமிழ்த் தேசிய அரசியலை ஏற்றுக்கொள்ளுகிற பொழுது அவருக்கு 57 அகவைகள் ஆகியிருந்தன.

தன்னுடைய 44-ஆம் அகவையில் (1968-இல்) தீவிரப் பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபட்டிருந்த புலவர், மூன்று ஆண்டுகள் முழு நேரச் செயற்பாட்டாளராக வெளிப்படையாகவும் தலைமறைவாகவும் இயங்கிவந்த நிலையில், தன்னுடைய 47-ஆம் அகவையில் (1971 ஏப்ரல் 30-இல்) சிறைப்படுத்தப்பட்டார். அவரைச் சிறைப்படுத்துவதற்கு முன்பாகவே இரு மகன்கள் வள்ளுவன், சோழ நம்பியார், புலவரின் தம்பி மாசிலாமணி, துணைவியார் அம்மா வாலாம்பாள் அவர்களுடைய தமக்கை அனந்தநாயகி, குடும்ப உறவினர்கள் இருவர் என ஆறு பேரும் சிறைப்படுத்தப்பட்டனர்.. புலவர் அவர்களின் துணைவியார் வாலாம்பாள் அம்மா அவர்களையும் சிறைப்படுத்திய நிலையில் புலவரின் மகள்கள் ஏதிலியர்களாக அலைந்த நிகழ்வுகள் மிகக் கொடுமையானவை.. ஆறு மாதங்களுக்குப் பிறகு அம்மா வாலாம்பாள் அவர்கள் பிணைப் பொறுப்பில் விடுவிக்கப்பட்டாலும், தன் துணைவர், மகன்கள், அக்கா இவர்களையெல்லாம் தமிழ்நாட்டின் வெவ்வேறு சிறைகளில் நேர்காண, தமிழ்நாட்டின் சிறைகளுக்கெல்லாம் ஓடி ஓடி அலைந்த வாழ்க்கை எண்ணிப் பார்க்க முடியாத, தாங்கிக் கொள்ள முடியாத, எவரும் துணையில்லாத, துணை செய்வதற்கே அஞ்சிக் கொண்டு ஒதுங்கி இருந்த கொடுமையான வாழ்க்கை.. பிற்காலத்தில் வேறு எவரும் அலைந்த அலைவைக் காட்டிலும், துன்பங்களைக் காட்டிலும் அவை அதிகப்படியானவை..

புலவர் அவர்களின் சிறை வாழ்வும் ஈகங்களும் மிக உயர்வானவை என்று மதிப்பிடுகிற அதே சூழலில், அம்மா வாலாம்பாள் அவர்களின் ஈகமும் நெருக்கடி வாழ்க்கையும் மேலும் மதிப்புமிக்கவை..

சிறைக்குள் இருந்தபடியே கட்சிச் செயற்பாடுகளில் கருத்தளவில் ஈடுபட்டிருக்கிறார் புலவர்.. கட்சியின் பல நடைமுறைச் செயல்பாடுகளுக்குக் கருத்துகள் தெரிவித்து மடல்கள் எழுதுவதும் திறனாய்வுகளை எழுதுவதுமாக அவரின் சிறை நடைமுறைகள் இருந்தன..

சிறைக்குள்ளாகவே கடும் போராட்டங்களை முன்னெடுத்ததால் ஏற்பட்ட அடக்குமுறைகள்.. சிறையில் இருந்து தப்பித்து வெளியேறிட வேண்டும் என அன்றைய தீவிரப் பொதுவுடைமைக் கட்சியின் கருத்துக்கு ஏற்ப தப்பிக்கும் முயற்சியில் புலவரும், தோழர் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களும் சிறைக் கதவுகளை உடைத்து மிக உயரமான சிறைச் சுவர்களைத் தாண்டிக் குதித்துத் தப்பித்துச் செல்கையில் பிடிபடவே மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.. சிறைகளுக்குள்ளும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் கொஞ்சநஞ்சமன்று..

பன்னிரண்டரை ஆண்டுக் காலம் இப்படியாகத் தன் குடும்பத்தாருடன் சிறைப்பட்டிருந்த அவல வாழ்க்கை தமிழ்நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஈக வாழ்க்கை..

1981 ஆம் ஆண்டு சனவரி மாதம்.. மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு தமிழுக்கான மாநாடாக நடத்தப்படாமல் வீண் பகட்டும் கேளிக்கைகளும் நிறைந்த மாநாடாக நடந்திட அதைக் கண்டித்தும், மாநாட்டிற்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அழைக்கப்பட்டிருந்து பின்னர் மறுக்கப்பட்ட காரணத்தை விளக்கிக் கேட்டும் அறிக்கை அச்சிட்டுப் பரப்பிய நிலையில், அந்த அறிக்கையை அன்றைய முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் (எம்.ஜி.ஆர்) அவர்களிடம் கொடுக்க, அதற்காக அடிக்கப்பட்டுத் தோழர்கள் ஆற்றலரசு, இளமுருகன் ஆகியோருடன் பொழிலனும் சிறைப்பட்டிருந்த சேலம் சிறையில்தான் முதன்முதலில் புலவர் கலியபெருமாள் அவர்களின் இளைய மகன் சோழநம்பியார் அவர்களையும் தீவிரப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் குருமூர்த்தி அவர்களையும் சந்தித்துப் பேசிப் பழகிட வாய்ப்பு கிடைத்தது..

அதன் பின் சென்னை நடுவண் சிறையில் இருந்த புலவர் கலியபெருமாள் அவர்களைப் பலமுறை சந்தித்ததும், ஐயா அவர்களின் தென்மொழி இதழை அவருக்கு அறிமுகப்படுத்தியதும், தமிழ்நாடு விடுதலை அரசியல் கருத்துரையாடல்களை அவர்களுக்கிடையில் ஏற்படுத்தியதும், புலவர் அவர்களின் தமிழ்த் தேச விடுதலை அரசியல் வருகைக்குப் பெரும் தூண்டலாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது..

1982 ஆம் ஆண்டு 11 மாதக்காலம் பொறுப்பு விடுமுறையில் (பரோலில்) வந்திருந்த புலவர் அவர்களின் மூத்த மகன் வள்ளுவனுக்கும், அவருக்காகவே காத்திருந்த அகிலா அவர்களுக்கும் 22-9-82-இல் அவரின் குடும்பத்தினர் நண்பர்கள் அளவில் பெண்ணாடம் வீட்டிலேயே நடந்த திருமணத்தை, 13-1-1983-இல் திருவல்லிக்கேணியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையேற்று, அன்றைக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவராக இருந்த உமா மகேசுவரன் என்கிற முகுந்தன் முன்னிலையில் வெளிப்படையாக நடத்தினார்.

அந்த ஆண்டின் இறுதியிலேயே புலவரும் விடுப்பில் வந்திடவே அதன் பிறகு படிப்படியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் குடும்பத்திற்கும், புலவர் கலியபெருமாள் குடும்பத்திற்கும் அறிமுகமும் நெருக்கமும் உருவாயிற்று என்பதை விட, பெருஞ்சித்திரனார் அவர்களின் இயக்க அரசியலும் புலவர் அவர்களின் இயக்க அரசியலும் அதிகப்படியாக நெருங்கத் தொடங்கியது..

1981-க்குப் பிறகுதான் தமிழ்த் தேச விடுதலை குறித்துக் கூடுதலாகச் சிந்திக்கிறார் புலவர்... தமிழ் ஈழத்தில் நடந்த அடக்குமுறைகள், சிறைக்குள் பாண்டி பசார் துப்பாக்கிச் சூடு நிகழ்ச்சியில் சிறைப்பட்டிருந்த பிரபாகரன், முகுந்தன் உள்ளிட்டோர் உடனான சந்திப்பு, தமிழீழ விடுதலைப் போராட்டம், அதை ஆதரிக்காத பொதுவுடைமைக் கட்சிகள் - இவற்றின் தாக்கமே புலவர் அவர்களைக் கூடுதலாகத் தமிழ்த் தேச அரசியலின் பக்கம் இழுத்தது.. சிறைக்குள் இருந்தபடியே இந்தியப் பொதுவுடைமைக் கட்சி(ம.இ.லெ) மக்கள் போர் நடுவக்குழு வரை செய்திகளை அனுப்பித் தருக்கமிடுகிறார்..

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்றும், இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார்..

புலவர், தோழர் தமிழரசன் ஆகியோருடன் சிலர் இந்தக் கருத்துக்கு இசைந்து சேர்ந்து இயங்கத் தொடங்குகின்றனர்..

சிறைக்குள் இருந்தபடியே தருக்கங்கள் தொடர்ந்தன.. புலவர், தோழர் தமிழரசன் ஆகியோரின் திறனாய்வுக் கட்டுரைகள் விரிவாக முன்வைக்கப்பட்டன.. ஆனால் அவற்றையெல்லாம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ.) மக்கள் போர்க் குழு ஏற்றுக்கொள்ளவில்லை..

1983 ஆண்டு இறுதியில் நீண்டகாலப் பிணை பொறுப்பில் வெளிவந்திருந்த புலவர் கலியபெருமாளுக்கும் உடன் இருந்த சிறைத் தோழர்களுக்கும் வெளியில் இருந்த காலச் சூழலிலேயே உச்சநெறி மன்றத்தின் வழியாக விடுதலை கிடைக்கிறது..

புலவரின் விடுதலைக்குப் பின்னர் அவருக்குச் சென்னையிலும், பெண்ணாடத்திலும் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடந்தன. தன் ஓட்டு வீட்டைக் கூட மாற்றி அமைத்திடும் நோக்கத்தில் அவர் ஈடுபடவில்லை. எஞ்சியிருந்த தன் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைத்தார். இளைய மகள் கண்ணகியின் சாதி மறுப்புத் திருமணத்தைச் சிறப்பான நிகழ்ச்சியாக நடத்தினார் புலவர். புரட்சிச் செயற்பாட்டாளர்கள் பலரும் அத் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஈழப் போராளியர்களும் வந்து வாழ்த்துரைத்தனர்.

புலவருடைய விடுதலை முயற்சியில் தமிழ்நாட்டில் துணை நின்ற எசு.வி. இராசதுரை அவர்களோடு இணைந்து தமிழ்நாட்டின் அன்றைய இயக்கத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள் அனைவரையும் புலவர் சந்திக்கிறார்..

இறுதியாக, 1984 மே மாதம் 5,6 ஆம் நாள்களில் பெண்ணாடத்தில் தமிழ் ஈழ விடுதலை ஆதரவு மாநாடு, இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாடு நடத்த பெரும் முயற்சி எடுத்து அன்றைக்கு முற்போக்கு இளைஞர் அணியாகச் செயல்பட்டு வந்த இந்தியப் பொதுவுடைமைக் கட்சி மார்க்சிய இலெனினிய மக்கள் போர்க் குழுவின் திருச்சி, தென்னார்க்காடு மாவட்டக் குழுக்களின் பொறுப்பில் அறிவிக்கப்பெற்று மாநாடு நடத்தப்படுகிறது..

தமிழ்நாடு விடுதலை அரசியல் வரலாற்றில் அது ஒரு திருப்புமுனை மாநாடு..

இந்தியத் தேசிய இனங்களின் விடுதலைக் கோரிக்கை தீவிரமடைகிறது என்றும், விடுதலைப் பாசறை கட்டமைக்கப்படுகிறது - என்றும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம்முடைய உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் இதழான தமிழ்நிலத்தில் வெளிப்படையாகவும் விரிவாகவும் அறிக்கை வெளியிட்டு எழுதினார்.. பெண்ணாடம் மாநாட்டிற்கு முன்னின்று ஆதரவாகச் செயல்பட்டார்..

தமிழீழ விடுதலை ஆதரவு மாநாட்டிற்கு வழக்கறிஞர் ஏ. எம். இப்ராகிம் தலைமை தாங்க, இந்தியாவில் தேசிய இனங்களின் விடுதலை மாநாட்டிற்குப் புலவர் கலியபெருமாள் தலைமை தாங்க, மாநாட்டின் விளக்கப் பொதுக் கூட்டத்திற்குத் தோழர் தர்மலிங்கம் தலைமை தாங்க, திருவாளர்கள் வே. ஆனைமுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார், கே. என். இராமச்சந்திரன், எசு. என். நாகராசன், எசு. வி. இராசதுரை, வெங்காலூர் குணா, தட்சிணாமூர்த்தி, வேலு, சீவகன், சீனிவாசன், தமிழ்ச்செல்வன், பொன்பரப்பி இராசேந்திரன் போன்றோர் பங்கேற்க மாநாடு சிறப்பாக நடந்தது..

இதில் தோழர் குணாவுக்கு இம் முழக்கங்களில் உடன்பாடு இல்லாமல் போகவே, அதற்கு மாறான முழக்கங்களை உள்ளடக்கிய கோட்பாட்டை விளக்கி ஒரு கட்டுரையை முன்வைக்க முனைந்தார். அதுவே பின்னர் அவரின் 'தமிழியப் பொதுவுடைமை' - எனும் நூலாக வெளிவந்தது.

மாநாட்டிற்குப் பிறகு மக்கள் போர்க்குழு, தோழர் தமிழரசனையும், புலவர் கலியபெருமாளையும் மற்றும் அந்த மாவட்டங்களின் தோழர்கள் பலரையும் கட்சியிலிருந்து வெளியேற்றியது.

அவர்கள் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டபின் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா.இலெ.) - எனும் பெயரில் கட்சி உருவாக்கப்பட்டது. அவ் உருவாக்க அமைப்புக் குழுவில் தோழர்கள் தமிழரசன், புலவர் கலியபெருமாள், தருமலிங்கம், தட்சிணாமூர்த்தி, சுந்தரம், வேலு, சீவகன், தமிழ்ச்செல்வன், இராசேந்திரன், செகநாதன் - உள்ளிட்ட தோழர்கள் முதன்மைத் தோழர்களாக இருந்தனர்.

த.பொ.க. (மா.இலெ.) வெளியிட்ட அரசியல் நகல் அறிக்கையே, தமிழக வரலாற்றில் செயல்திட்டத்திற்கான கட்சியின் முதல் அறிக்கையாக வெளியாக்கப்பட்டது. (அதற்கெல்லாம் முன்பு எசு. என் நாகராசன், குணா ஆகியோர் அரசியல் அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.)

அதுவே தமிழகத்தில் முதன்முதலில் தமிழக விடுதலைக்காக முன்னெழுந்த தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா.இலெ.)யின் கொள்கை அறிக்கையாக விளக்கப்படுத்தியது.

மேலும், அக்கட்சி 'தமிழக விவசாயிகள் சங்கம்' - எனும் அமைப்பின்கீழ் 1984-ஆம் ஆண்டு அக்தோபர் மாதத்தில் சாதி ஒழிப்புக் கருத்தரங்கம் ஒன்றைத் தென்னார்க்காடு மாவட்டம் 'மீன்சுருட்டி'யில் ஏற்பாடு செய்திருந்தது.

அக், கருத்தரங்கு புலவர் கலியபெருமாள் தலைமையில் நடந்தது. பாவலரேறு பெருஞ்சித்திரனார், கே.என். இராமச்சந்திரன், ஆர்.கே. சுவாமிநாதன், எசு.வி. இராசதுரை, பொன் நாகப்பன், பெருமாள், வீரன், தட்சிணாமூர்த்தி, வேலு, குணசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அக் கருத்தரங்கில் 'சாதி ஒழிப்பே, தமிழ்த்தேச விடுதலைக்கும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தை வீழ்த்தவும் உடனடித் தேவையானது' - எனும் தலைப்பில் தோழர் தமிழரசனால் கட்டுரை ஒன்று முன்வைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

தொடக்கக் காலத்தில் பொதுவுடைமைக் கட்சிகள் சாதி ஒழிப்புப் பற்றி அக்கறையும் கவனமும் செலுத்தினாலும், அதை ஓர் அரசியல் கொள்கையாக்கிச் சாதி ஒழிப்புக்கான திட்டத்தை மேற்கொள்ளவில்லை. அந்த வகையில் இதுவே பொதுவுடைமைக் கட்சி வரலாற்றில் முதல் அறிக்கையாக வெளிவந்தது.

இந்த வகையில் கோட்பாட்டை முன்வைத்து இயங்கிய த.பொ.க. (மா.இலெ.) முன்னணிகளைக் கட்டுகிற முயற்சியையும் பேரளவில் முன்னெடுத்தது.

முதல் முயற்சியாக 'ஒடுக்கப்படுவோர் உரிமை மீட்புக் கூட்டமைப்பு' எனும் கூட்டமைப்பு கட்டப்பட்டது.

- மக்களாட்சிக்கு எதிரான அனைத்து அடக்குமுறைச் சட்டங்கள் கருப்புச் சட்டங்களை உடனே திரும்பப் பெறு!
- தேசிய இனங்களின் தன்னுரிமையை உறுதிப்படுத்து!
- பத்தாண்டுகளுக்குமேல் தமிழகச் சிறையில் வாடும் அனைத்து அரசியல் மற்றும் ஆயுள் கைதிகளை விடுதலை செய்!"

- எனும் முழக்கங்களின் அடிப்படையில் அக் கூட்டமைப்பு கட்டமைக்கப்பட்டது.

அதன் தொடக்கக் கூட்டம் 15-10-84-இல் சென்னையில் உ.த.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. 1. மக்கள் உரிமைக் கழகம், 2. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், 3. மக்கள் குடியுரிமைக் கழகம், 4. மக்கள் பண்பாட்டு மையம், 5. சோசலிஸ்ட் தொழிலாளர் சங்கம், 6. மக்கள் சனநாயக உரிமைக் கழகம், 7. மக்கள் நல சனசங்கம், 8. அறிவியக்கப் பேரவை, 9. மக்கள் கலை இலக்கியக் கழகம், 10. முற்போக்கு இளைஞர் அணி, 11. பெரியார் சமஉரிமைக் கழகம், 12. தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் விடுதலை இயக்கம், 13. பகுத்தறிவு சமதரும இயக்கம், 14. தமிழ்நாடு உழைப்பாளர் பொதுநலக் கட்சி, 15. தமிழர் முன்னேற்றக் கழகம். 16. பாரதீய மக்கள் நல உரிமைக் கழகம் - ஆகிய பதினாறு இயக்கங்கள் சேர்ந்து இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது.

அக் கூட்டமைப்பின் வழியாக மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 11-11-84 - இல் சென்னையில் பெரும் மாநாடு ஒன்றும் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின் தலைவர்களாகப் புலவர் கலியபெருமாளும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் இருந்தனர்.

அந்தக் கூட்டமைப்பு மட்டுமல்லாமல் 1984-இல் தொடர்ந்த தருக்க அரசியல் ஆய்வில் **'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி'** - என்னும் முன்னணி உருவாக்கப்பட்டது. புலவர் கலியபெருமாளே அம் முன்னணியைக் கட்டுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

- அனைத்து வல்லரசுகளின் கொள்ளைகளைக் குழிதோண்டிப் புதைக்கவும், அரசு - தரகு முதலாளியத்தின் மற்றும் அதிகார வகுப் பின் கொட்டங்களை ஒழிக்கவும், சாதிய - நிலக்கிழமை அடிமைத் தனத்திற்கு முடிவு கட்டவும், உண்மையான மக்கள் குடியாட்சியை அமைத்திடவும், தமிழக மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும்,
- இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களின் புரட்சிவழி விடுதலைக்குச் செயல்வடிவமும் ஆதரவும் இக் கூட்டணி நல்கிடும்.
- உலகில் போராடும் அனைத்து மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கும், தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி பக்கத் துணையாக இருக்கும்."

- ஆகிய வரையறைகளை அம் முன்னணி வகுத்துக் கொண்டது.

1. தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா.இலெ.) 2. தமிழக மாநிலக் குழு, இ.பொ.க. (மா.இலெ) மைய சீரமைப்புக் குழு, 3. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், 4. பெரியார் சம உரிமைக் கழகம், 5. அறிவியக்கப் பேரவை - ஆகிய ஐந்து கட்சிகளும், இயக்கங்களும் அந்த முன்னணியில் பங்கேற்றிருந்தன.

அந்த முன்னணி முயற்சிக்காகக் கூட்டப்பட்ட கூட்டங்களில் தமிழக விடுதலை தொடர்பான கோட்பாட்டு நோக்கமுடையோர் பெரும்பாலும் கலந்துகொண்டனர். மேற்குறிப்பிட்ட ஐந்து கட்சிகளின் தோழர்கள் மட்டுமல்லாமல் அதற்கான ஆதரவாளர்கள் என்கிற அடிப்படையில் தோழர் எசு.வி.இராசதுரை, அறிஞர் குணா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். ஆயினும் இறுதியாய்ச் சில தடங்கல்களால் அம் முன்னணி அடுத்தக் கட்டத்திற்கு நகராமல் நின்றது.

இதற்கிடையில் காவிரிச் சிக்கல் தீர்க்கப்படாமல் இருந்தது. இந்தியா தன் ஆளுமைச் சூழ்ச்சியால் தமிழீழ விடுதலைக்கு இரண்டகம் விளைவித்தது. இவற்றைக் கண்டித்துத் தமிழக மக்கள் கொதிப்புற்றிருந்தனர்.

அந்தச் சூழலில் திருவையாற்றில் தியாகராசர் ஆராதனை விழா எனப் பார்ப்பனர்கள் கூத்தடித்ததும், அதற்கு இந்தியத் தலைமை அமைச்சர் இராசீவ்காந்தி வந்ததைக் கண்டித்தும் 1986-இல் குடமுருட்டிப் பாலத்தில் தமிழ்நாடு விடுதலைப்படை - எனும் பெயரில் குண்டு வெடிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

திருச்சி திருவரங்கம் கோயில் விழா எனக் கூத்தாட்டம் நடந்தபோது, அரியலூர் மருதையாற்றுப் பாலத்தில் 1986-இல் குண்டுவெடிப்பு நடைபெற்றது. அத்தகைய நிகழ்வுகளில் புலவருக்கு முழு உடன்பாடு இல்லை. இப்போதைக்கு மக்கள்திரள் செயற்பாடுகளிலேயே கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்திவந்தார்.

வலுவான மக்கள் திரள் இயக்கங்கள் செயல்படாததாலும், மக்கள் திரள் போராட்டங்கள் பெரிய அளவில் முன்னெடுக்கப்படாததாலும், மக்களைத் தமிழக விடுதலைக்கெனப் பேரளவில் அணிதிரட்டுகிற முயற்சியை முன்னணி கட்டிப் பெருமளவில் செய்யாமல் போனதாலும் அச்செயல்கள் மக்களிடையே பெரும் வீச்சைக் கொடுக்கவில்லை. மேலும் மருதையாற்றுப் பாலம் குண்டுவெடிப்பு நிகழ்வால் தொடர்ந்த அரியலூர் தொடர்வண்டி நிலைய அதிகாரிகளின் பொறுப்பின்மையால் ஏற்பட்ட உயிரிழப்புகள் தோழர் தமிழரசனுக்கே பெரும் வருத்தத்தைக் கொடுத்தது. அந்நிகழ்வுகளை மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதற்கு முன்பாகத் தமிழக விடுதலையில் உழவுச் சிக்கலே முதன்மைச் சிக்கல் எனும் முரண்பாட்டில் தோழர் சுந்தரம் வெளியேறி இருந்தார். பொன்பரப்பி வங்கியில் தொகை எடுக்கும் முயற்சிக்கு முன்னர் உட்கோட்டை வங்கியில் தொகை எடுக்கும் முயற்சி நடைபெற்றது. அம்முயற்சியை உட்கோட்டையில் செய்ய வேண்டாம் எனத் தோழர் இராசேந்திரன் மறுத்திருந்தார். அதைமீறி அங்கு முயற்சி நடைபெற்றதான நடைமுறைச் சிக்கல்களால் தோழர் இராசேந்திரனும் வெளியேறியிருந்தார்.

தகடூர் மாவட்டம் (தருமபுரி) நாட்றாம் பள்ளியில் காவல்துறை தூண்டலில் உள்ளூர் அரசியல் கட்சியினரின் பின்புலத்தில் அரம்பர்களால் ஆகத்து மாதம் 1985-இல் தோழர் வேலு கொலை செய்யப்பட்டிருந்தார்.

விடுதலைப்படை செயல்பாடுகளில் உடன்பாடு இல்லாததால் புலவர் கலியபெருமாள், சீவகன், தமிழ்ச்செல்வன், அன்பு, தட்சிணாமூர்த்தி ஆகியோர் தங்கள் செயல்பாடுகளைக் குறைத்துக்கொண்டு ஒதுங்கியிருந்தனர். அமைப்புக் குழுத் தோழர்களிடையே இடது தீவிரப் போக்கு நிலவுவதாக அவர்கள் திறனாய்வை முன்வைத்திருந்தனர்.

இவ்வகையிலான திறனாய்வு, தன் திறனாய்வுகளையெல்லாம் எஞ்சியிருந்த கட்சித் தோழர்கள் பெரிய அளவில் செய்து கொள்ளவில்லை.

தொடர்ந்து காவிரி நீர் உரிமைக்குப் போராட வேண்டி பொன்பரப்பி வங்கியில் தொகை எடுக்க முயற்சித்தபோது 1987- செப். 1-ஆம் நாள் தோழர்கள் தமிழரசன், தருமலிங்கம், செகந்நாதன், அன்பழகன், பழனிவேலு ஆகியோர் காவல்துறை குண்டர்களால் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டனர். பொன்பரப்பி நிகழ்விற்குப் பின்னர் ஏறத்தாழ கட்சியின் செயல்பாடுகள் முடங்கின. பொன்பரப்பி நிகழ்வும், தோழர் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களின் இழப்பும் புலவரைப் பெரிதும் வருத்தியது.

இறுதியாகத் தோழர் தமிழரசன் உள்ளிட்ட தலைமைத் தோழர்கள் மறைவுக்குப்பின், அமைப்புக்குழு அளவிலான தோழர்கள் வேறு எவரும் இல்லை எனும் நிலை உருவாயிற்று.

எனினும் எஞ்சியிருந்த ஆதரவுத் தோழர்களாய் இருந்த பொழிலன், சுகுமாரன், குணத்தொகை, தமிழ்முகிலன் உள்ளிட்ட ஆதரவுத் தோழர்கள் பலரும் கூடித் தொடர்ந்து புலவர் கலியபெருமாள் தலைமையில் புதிதாய் இணைந்து கட்சியைக்

கட்டுகிற முயற்சிகளைச் செய்தனர்.

தோழர்கள் இலெனின், இளங்கோவன் - ஆகியோரும் அம்முயற்சியில் இணைந்திருந்தனர். தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை- யின் நடுவத் தோழர் பாலன் த.பொ.க-வை ஒருங்கிணைத்துக் கட்ட பெருமளவில் துணையிருந்தார். அதற்கான முயற்சிகளில் பெண்ணாடத்திற்கு அடிக்கடி பொழிலன், சுகுமாரன், குணத்தொகை உள்ளிட்டோர் போய்வர இருந்தனர். புலவர் வீட்டில் தங்கியிருக்கும் சூழலில் அம்மா வாலாம்பாள் அனைவரையும் எச்சரிப்பார்.

வேண்டாம்பா போதும்.. வீணாகச் சுட்டுத் தள்ளிவிடுவானுங்க.. நீங்களெல்லாம் அமைதியாக இயங்குங்கள்.. - என்பார். நாங்களும் சரி..சரி.. என்ற அளவில் செயல்பட்டுக் கொண்டிருந்தோம்..

த.பொ. கட்சிக்காக உருவாக்கப்பட்ட அறிக்கையையே அடிப்படையாக வைத்து இயக்கம் தொடர்ந்து செயல்படலாம் என்றார் புலவர். 'அடிமைத் தமிழகத்தின் விடுதலைக்குரல்' - எனும் ஓர் இதழ், தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவையின் பெயரில் கொண்டுவரப்பட்டது. அவை வெகுமக்கள் இயக்கமாகச் செயல்படலாம் எனப் பேசப்பட்டது.

ஏற்கனவே தோழர் தமிழரசன் இருந்தபோதே தமிழ்நாடு மக்கள் பேரவை, தமிழ்நாடு கல்வித் தொழிலாளர் பேரவை, தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை, தமிழ்நாடு தொழிலாளர் பேரவை, தமிழ்நாடு உழவர் பேரவை - போன்ற அமைப்புகள் தோழர் தனராசு அவர்களின் நெறிகாட்டலில் மக்கள் திரள் அமைப்புகளாய்ச் செயல்பட்டன. அவற்றின் பெயரால் துண்டறிக்கைகள், வெளியீடுகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

தோழர் தமிழரசன் உள்ளிட்ட தோழர்களின் மறைவை நாளிதழ்கள், இதழ்கள் மிக அழுத்தமாய் எழுதியிருந்தன. 'சாலை மூடப்பட்டுவிட்டது' என்பதாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டது. சமூக விரோதியாகச் சீரழிந்தார் - என ம.க.இ.க. தன்னுடைய புதிய சனநாயகம் இதழில் எழுதியிருந்தது.

அவ்வகை எழுத்துகளுக்கு விடை கொடுக்க வேண்டுமான கருத்திலேயே 'தமிழ்நாடு விடுதலைப்படை' எனும் பெயரில் குண்டு வெடிப்புகள் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டன.

சென்னை - கத்திப்பாராவிலுள்ள நேரு சிலையிலும், கொடைக்கானல் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையத்திலும், பின்னர் உதகை புதலியல் (பொட்டானிக்கல்) பூங்காவிலும் 1988-ஆம் ஆண்டில் குண்டு வெடிப்பு நிகழ்வுகள் நடந்தன. (உதகை குண்டுவெடிப்புக்குப் புலவரின் கருத்துத் தூண்டலும் இருந்தது.) பெரும் ஏதம் வரக்கூடாது எனும் முடிவில் அரசுக்கு எச்சரிக்கை விடுவதாகவே அந் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையக் குண்டு வெடிப்பில் தவறுதலாகக் கையாண்டதில் தோழர் மாறன் இறந்து போனார். தோழர் இளங்கோவனுக்குக் கடும் காயங்கள் ஏற்பட்டன.

இலங்கைக்குள் நுழைந்த இந்தியப் படையின் கொடூரமான தாக்குதல்களைக் கண்டித்தும், இந்திய அரசின் பொய்ப் பரப்பல்களைக் கண்டித்தும், தமிழக விடுதலையை வலியுறுத்தியும் நடைபெற்ற அந் நிகழ்ச்சிகளால் பல இளைஞர்களும் சிறைப்பட நேர்ந்தது. அந்த நிகழ்வுகளுக்காகப் புலவர் தேடப்பட்டு வழக்கில் சேர்க்கப்படவே தலைமறைவாக இருந்தார். பின்னர், இறுதியில் விடுதலையானார்.

தோழர்கள் பொழிலன், இளங்கோவன், தமிழ் முகிலன், அறிவழகன், குணத்தொகை, தெய்வமணி, ஈகவரசன் - உள்ளிட்டோர் தண்டனை பெற்று மேல்முறையீட்டில் முகிலன், அறிவழகன் ஆகியோர் விடுதலை பெற்றனர்.

உதகை குண்டுவெடிப்பு வழக்கில் தோழர்கள் பொழிலன், முகிலன், பாண்டியராசன், நாராயணன், சுப்பிமணியன் ஆகியோர்க்கு ஏழாண்டுத் தண்டனை கொடுக்கப்பட்டு மேல்முறையீட்டில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் மருதையாற்றுப் பால குண்டுவெடிப்பில் சிறைப்பட்டிருந்த தோழர்கள் தென்தமிழன், கருணாகரன், பெரியசாமி ஆகியோர்க்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டுப் பின்னர் பெரியசாமி விடுதலையடையவே மற்ற இருவருக்கும் வாழ்நாள் தண்டனையாகக் குறைந்தது. இடையில் சிறை விடுப்பில் வந்திருந்த தோழர் தென்தமிழன் ஆறு ஆண்டுகள் தலைமறைவாக இருந்து வெகுமக்கள் அணிகளைக் கட்டி எழுப்பினார். தமிழ்த்தேச மக்கள் விடுதலை இயக்கம் - எனும் பெயரில் இயக்கத்தை உருவாக்கித் தோழர்கள் பலரையும் இயக்கப்படுத்தினார். இக்காலத்தில் த.பொ.க.(மா.இலெ.)வின் செயல்பாடுகளில் மீண்டும் தேக்கம் ஏற்பட்டன.

1990-களுக்குப் பின்னர் புலவர் பல்வேறு தளங்களில் செயல்படத் தொடங்கினார். விவசாய விளைபொருள் உரிமைக் குழு - என வேளாண் நலன்களில் அக்கறை கொண்டியங்கினார். ஐயா நெடுமாறன் அவர்களுடன் இணைந்து அவர் இயக்கத்திலும் செயல்பட்டார். தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவில் செயற்படலானார். தமிழ்த் தேசக் கருத்து கொண்டிருந்த செயல் தளங்களில் ஆதரவாக இருந்தார். அவரின் சில செயல்பாடுகள் சில வகையில் திறனாயப் பெற்றன. இருப்பினும் செயல்களை அவர் நிறுத்திக்கொள்ளவில்லை.

2016-ஆம் ஆண்டில் அவரின் உடல்நிலை ஒத்துழைக்க மறுத்தபோது தன்னுடைய வரலாற்றுச் சுருக்கத்தை எழுதி வெளியிட வேண்டும் எனும் அக்கறையோடு அவர் சொல்லச் சொல்ல தோழர் வேடியப்பனை எழுத வைத்தார். நூல் எழுதி அச்சாக்கம் பெறுவதில் பெருமளவில் காலத் தாழ்த்தம் ஆன போது, அடிக்கடி பெண்ணாடத்திற்கு என்னை அழைத்து விரைந்து முடித்து என் வாழ்நாளுக்குள் வெளியிட ஆவன செய்ய வலியுறுத்தும்படிச் சொல்வார்.

அதன்பிறகு அந்த நூலை அச்சிட்டு வெளியீட்டு விழா நடத்தும் பணியில் தோழர் வள்ளுவன், சோழ நம்பியாருக்கும், அண்ணன் பூங்குன்றன் அவர்களுக்கும் அமைப்பாக நானும் தோழர்களும் முழுத் துணையிருந்து செய்தோம். இறுதியாக நூல் வெளியீட்டு நிகழ்ச்சி 2006-ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ஆம் நாள் சென்னை தியாகராயர் நகர் பசும்பொன் திருமண மண்டபத்தில் நடத்தப்பட்டது.

புலவர் மிகவும் மகிழ்ச்சியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அதன்பிறகு 6 மாதங்களில் 2007 மே 16-ஆம் நாள் மாலை புலவர் இயற்கை எய்தினார். அவர் மறைவுற்று இரண்டு நாள் கழித்து மே 18 அன்று காலை பெண்ணாடத்திலிருந்து தோழர் நிலவன் தலைமையில் த.ஓ.வி.இ. மிகப் பெரும் வீரவணக்கப் பேரணியை நடத்திப் பேரெழுச்சியை அடையாளப்படுத்தியது.

அவரின் உடல் பெண்ணாடம் அருகில் உள்ள சௌந்திரசோழபுரம் எனும் சிற்றூரில் உள்ள தென்னஞ்சோலையில் அடக்கம் செய்யப் பெற்றது. வீரம் விளைந்த மண் என்பதோடு, புரட்சிப் போரில் உயிர்நீத்த தோழர்கள் கணேசன், காணியப்பன், சர்ச்சில் ஆகியோரும் விதைக்கப் பெற்ற நிலம் அது..

புலவர் அவர்கள் மறைவுக்கு, 46 ஆண்டுகளுக்கு முன்பு விதைக்கப்பெற்ற அந்த செந்நிலத்தில்தான் புலவரும் வித்தாகப் புதைக்கப்பட்டார். அந்த நிலத்தைத் தோழர் வள்ளுவனுக்கும், நம்பியாருக்கும் பாதி பாதியாகப் பிரித்துப் புலவர் எழுதித் தந்திருந்த நிலையில் அதன் நடுப்பகுதியில் புலவருக்கு நினைவிடம் அமைப்பதாகக் குடும்பத்தினரும் தோழர்களும் பேசினர்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவிடம் தமிழ்க்களம் எனும் பெயரில் அழைக்கப்படுவதுபோல் புலவரின் நினைவிடத்தைச் 'செங்களம்' என அழைக்கலாம் என நாங்கள் முன்மொழிந்ததைத் தோழர் வள்ளுவனும், நம்பியாரும் ஏற்றுக் கொண்டனர்.


2016 புலவர் அவர்கள் மறைவுற்ற அதே ஆண்டின் சூலை 1-ஆம் நாள் அந்த இடத்தில் தற்காலிகமாகக் காரை ஓட்டுக் கூரை வேயப்பெற்று அதற்குச் செங்களம் - எனக் கல்வெட்டு திறக்கப்பெற்றது. செங்களத்தில் முதன்முதல் கல்வெட்டுகளைத் தோழர் தமிழரசன் அவர்களின் தாயார் பதூசம்மாள் அவர்களும், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த. பச்சையப்பன் அவர்களும் திறந்துவைத்தனர்.

பேரா. செயராமன், தமிழ்த் தேசிய மார்க்சியக் கட்சித் தோழர் இராசேந்திர சோழனும், தமிழ்ச் சான்றோர் பேரவைத் தோழர் வியனரசும், அ.சி. சின்னப்பாத் தமிழர், டி.எசு.எசு. மணி, பேரா. சரசுவதி, புலவர் குமர. தன்னொளியன் உள்ளிட்டோருடன் த.ஓ.வி.இ. சார்பில் நாங்கள் எல்லாமும் கலந்து கொண்டோம். அன்று முதல் செங்களம் தமிழ்ப் பெருநிலத்தின் அரசியல் ஆர்வலர்களுக்குச் செயற்களமாகவும் உணரப் பெற்றது. காலம் ஓடிக் கொண்டிருக்கிறது.

ஓடிக் கொண்டிருக்கிற காலத்தை அதிகார வகுப்பு எப்போதும் தனக்கானதாக மாற்றிக் கொண்டிருக்கவே செய்கிறது. புரட்சியாளர்கள் காலத்தை மக்களுக்குரியதாக மாற்ற பெரும் முயற்சி எடுக்கின்றனர். மக்களின் விடுதலை வாழ்க்கைக்கு, உரிமை வாழ்க்கைக்குப் புலவரின் செங்களம் தமிழ்நாட்டையே செந்தமிழ் நிலமாகவும், பொதுமைத் தமிழ்த் தேசம் படைக்கும் செந்தளமாகவும் மாற்றட்டும்...

புலவர் புகழ் ஓங்கட்டும்.. .புரட்சியாளர்கள் புகழ் ஓங்கி ஒலிக்கட்டும்...


## புலவர் கு. கலியபெருமாள் நூற்றாண்டு நினைவலைகள்




புலவர் கு. கலியபெருமாள் அவர்களின் நூற்றாண்டையொட்டித் தமிழக மக்கள் முன்னணியால் தொகுக்கப்பட்டுள்ள சிறு நூல்.

பக்கங்கள் : 80

விலை : உரு.60

தொடர்புக்கு :

8608068002

# பாசிசத்தை ஒழிப்பது சோசலிசமே!

● தங்க குமரவேல்
தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்

இதுவரை இல்லாத அளவுக்கு உலக நாடுகள் பலவற்றில் வலதுசாரி மற்றும் பாசிசக் கொள்கைகளைக் கொண்ட அரசுகள் அமைகின்றன. வரம்பற்ற வணிக சுதந்திரத்தைக் கொண்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் கைப்பாவைகளாக அந்த அரசுகள் செயல்படுகின்றன.

1991-இல் உலகமயமாக்கல் என்னும் வணிகக் கொள்கை பன்னாட்டு நிதியம், உலக வங்கி போன்ற நிறுவனங்கள் வாயிலாகச் செயல்படத் தொடங்கியது. தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்னும் மூன்று கொள்கையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்ட வரம்பற்ற வர்த்தகம் முதலாளித்துவத்தின் இலாப வெறியை மேலும் மேலும் கூட்டியது.

மூன்றாம் உலக நாடுகள் மீது இந்தக் கார்ப்பரேட் நிறுவனங்களும் வட அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, சப்பான், செர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட வல்லாதிக்க நாடுகளும் தங்கள் வணிகச் சந்தையை நிறுவி விரிவுபடுத்தி வலிய வந்து கடன் கொடுத்துத் தங்கள் வலைக்குள் வீழ்த்தின. காட் ஒப்பந்தம் அல்லது டங்கல் திட்டம் என்னும் பெயரில் மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களையும் மனித வளத்தையும் எல்லையின்றிச் சுரண்ட இந்த உலகமயமாக்கல் வழிவகுத்தது. இந்த நாசகாரக் கொள்கை அதன் கோரப் பற்களை மறைக்க கோட்டும் சூட்டும் மாட்டி உதட்டுச் சாயம் பூசி நவீனமான- நளினமான சொற்களால் மூன்றாம் உலக நாடுகளின் அரசுகளை மடக்கியும் அடக்கியும் இந்தக் கட்டுத்தறியில் மாட்டிவிட்டது.

முதலாளித்துவத்தின் முற்றிய வடிவம் ஏகாதிபத்தியம் எனப் பொதுவுடைமை ஆசான்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ், இலெனின் ஆகியோர் அன்றே கூறினர். 21-ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியம் என்பது வலதுசாரிகளுடன் கைகோர்க்கும் ஒரு புதிய உத்தியாகக் கொண்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும். இதில் புதுமை என்னவென்றால் பழைய ஏகாதிபத்தியத்தில் சில வல்லரசு நாடுகள் ஏகபோக வணிக ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும். ஆனால் இந்தப் புதிய ஏகாதிபத்தியத்தில் அந்த வல்லரசுகளையே கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆதிக்கம் செய்கின்றன. நாட்டை யார் ஆளவேண்டும் என்பதை கார்ப்பரேட் நிறுவனங்களே தீர்மானிக்கின்றன. அதற்குக் கைம்மாறாக அந்த நிறுவனங்களால் அரியணை ஏறும் ஆட்சியாளர்கள் அந்தக் கார்ப்பரேட்டுகளுக்கு விசுவாசமான பண்ணை அடிமைகளாகத் திகழ்கின்றனர்.

முதலாளித்துவம் என்பது ஒரு சுதந்திர வளர்ச்சி ஆகும். அது பாசிசம் போன்ற பிற்போக்கு இன, மொழி, நிற, பால் மற்றும் புவியியல் அடிப்படையிலான உயர்வு நவிற்சிகள் எதையும் ஏற்பதில்லை என்பதையே நாம் கண்டுள்ளோம். அதற்கு மாறாக பிற்போக்குக் கொள்கைகளான வலதுசாரியம், பாசிசம் ஆகியவற்றுடன் கைகோர்த்து அந்தக் கொள்கைகள் சார்ந்த குழுக்களையும் அவற்றின் சாதி, மத, இன, மொழி, நிற அடிப்படையிலான வெறுப்புணர்வையும் அதனால் ஏற்படுத்தப்படும் வன்முறைகளையும் கலவரங்களையும் நிதி தந்து ஊக்குவிக்கின்றன. இதுதான் 21-ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியமாகும்.

இந்த நிலையில் முதலாளித்துவ முழக்கமான சனநாயகம் என்பது வளர்ந்துவரும் அனைத்து நாடுகள் மட்டுமல்லாது வல்லரசு நாடுகளிலும் கேள்விக்குறியாகத் தொடங்கியுள்ளது.

21-ஆம் நூற்றாண்டின் ஏகாதிபத்தியத்தின் இந்திய முகமாக கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஆர்.எஸ்.எஸ். என்னும் வலதுசாரி ஃபாசிச அமைப்பால் இயக்கப்படும் பாஜக கட்சியின் இந்திய ஒன்றிய அரசு திகழ்கிறது. ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் செர்மனி பாசிஸ்ட் அடல்ஃப் ஹிட்லர் கொண்ட கொள்கையையும் ஹிட்லரின் உடல் மொழியையும் பின்பற்றுவதை உற்றுநோக்கினால் இந்தியாவில் நடைபெறுவது கார்ப்பரேட் பாசிச ஆட்சி என்பது தெளிவாகத் தெரியும். அனைத்து இந்திய மக்களின் நலன்களைவிட அதானி, அம்பானி நலனே இந்த பாசிச பாஜக அரசுக்கு முக்கியமாகும். குறைந்தபட்ச சனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைப்பதற்காக ஒரே நாடு ஒரே தேர்தல் மற்றும் வாக்கு இயந்திரப் பயன்பாடு இவற்றை விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டு இருக்கிறது பாஜக அரசு. இப்படிப்பட்ட சூழலில் நாடாளுமன்ற சனநாயகத்தை நம்பி பாசிசத்தை வீழ்த்த முடியும் என்பது நீர்மேல் எழுத்தாகும்.

இரசிய நாடாளுமன்றமான டூமாவில் பங்கேற்பதன் மூலம் ஜார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை வீழ்த்த முடியும் என ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும்பாலான தோழர்கள் கூறியபோது, அது இயலாத காரியம் என்று மாமேதை இலெனின் திட்டவட்டமாக மறுத்தார். அதையும் மீறி இரசிய நாடாளுமன்ற டூமாவுக்குச் சென்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் மாமேதை இலெனின் கூறியபடியே எதுவுமே செய்ய முடியாமல் தோல்வியைத் தழுவினர். ஜார் மன்னரின் கொடுங்கோன்மை ஆட்சியை வீழ்த்த சோசலிசப் புரட்சி ஒன்றே தீர்வு என்னும் உறுதியான நிலைப்பாட்டிற்கு வந்தனர். இந்த நிகழ்வை 'இடதுசாரிகளின் இளம்பருவக் கோளாறு' என மாமேதை இலெனின் வருணித்தார்.

இந்த அடிப்படையைக்கூட அனுபவித்துப் பார்த்தும் உணராத இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளான சிபிஐ, சிபிஎம், சிபிஐ-எம்எல் உள்ளிட்ட தேர்தல் கம்யூனிஸ்ட் கட்சிகள் இன்னமும் இந்த இத்துப்போன இந்திய நாடாளுமன்றத்தை பாசிசத்தை வீழ்த்தும் கருவியாக எண்ணிக்கொண்டிருப்பதுதான் வெட்கக்கேடானது. டுமா என்பதைத் திருப்பிப் போட்டால் மாடு என வரும். இந்தியாவிலும் நாடாளுமன்றம் கார்ப்பரேட் காவிக் கும்பலால் மாடாளுமன்றமாக மாற்றப்பட்டுள்ளது. மனிதர்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக அரசு மாட்டு மூத்திரம், மாட்டுச்சாணி, மாட்டுக்கறி இவற்றை வைத்து அரசியல் செய்து தன்னுடைய அரசியல் சாணக்கியத் தனத்தை (சாணிநக்கிய) நிரூபிக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழிவழித் தேசங்கள் உள்ளன. அவை மாநிலங்கள் எனப்படுகின்றன. அவை தங்களது உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ளவும் மொழிகளைக் காத்துக்கொள்ளவும் இனவுணர்வு என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. மொழிவழித் தேசிய இன உணர்வு பேசும் இயக்கங்கள் இரு வகையாக உள்ளன. ஒன்று இடதுசாரி தன்மையிலான சோசலிசத் தேசத்தைக் கட்டியமைக்க விரும்பும் மொழிவழித் தேசிய இயக்கங்கள். மற்றொரு வகை பழைய மரபுகளை விடாப்பிடியாகப் பிடித்துத் தொங்கிக்கொண்டும், பழைய அரசர்களைப் புகழ்ந்தும், பெண்களுக்கு மட்டும் கட்டுப்பாடுகள் விதித்தும், பண்பாடு காத்தும் மிகப் பிற்போக்கான சாதி ரீதியிலான நிலவுடைமை உற்பத்தி முறையை ஆதரித்தும் வலதுசாரி பாசிசத்திற்கு இட்டுச்செல்லும் மொழிவழித் தேசிய இயக்கங்கள். இவற்றில் இரண்டாம் வகையிலான இனவெறி இயக்கங்கள் மற்றும் அமைப்புகளை எதிர்ப்புரட்சிச் சக்திகளாக வளர்த்தெடுக்க ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட சங் பரிவாரங்களும் பா.ஜ.க.வும் பின்னிருந்து இயக்கியும் நிதி உதவி தந்தும் வளர்த்து வருகின்றன. அவர்கள் சங் பரிவாரங்கள் போலவே பழமையைப் போற்றுவதையும் மூடத்தனத்தை வளர்ப்பதையும் பிற்போக்குப் பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பதும் கம்யூனிஸ்டுகளையும், பெரியாரிஸ்டுகளையும் எதிர்ப்பதையும் இந்தியாவின் சாபக்கேடான சாதிக் கட்டமைப்பை குடிகள் என்று கூறி ஏற்றும் ஆதரித்தும் செயல்படுவதைத் தங்கள் கொள்கையாகக் கொண்டுள்ளன.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ. மணியரசன் உள்ளிட்ட சில அமைப்பினர்கள் இதற்குத் தகுந்த சான்றுகளாவர். இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு மாநிலங்களில் இயங்கிவரும் சாதிச் சங்கங்களுக்கு ஆர்.எஸ்.எஸ்., பாஜக உள்ளிட்ட சங்கப்பரிவாரங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து நன்கொடை பெற்று அவற்றை நிதியாக வழங்கி சாதி வளர்ப்புப் பணியைச் செவ்வனே செய்கின்றன. பெரும்பான்மை ஒடுக்கும் சாதியினருக்கும் சிறுபான்மை பட்டியல் வகுப்பு மற்றும் பழங்குடி வகுப்பு மக்களுக்கும் இடையே திட்டமிட்ட கலவரங்களைத் தூண்டியும் மத சிறுபான்மையினரான கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் மீதான வெறுப்புணர்வுப் பிரச்சாரத்தையும் கட்டமைத்து சாதி, மதக் கலவரங்களை இந்தியாவெங்கும் உருவாக்கி கார்ப்பரேட் சுரண்டலுக்கு எதிரான மக்கள் புரட்சியை வளரவிடாமல் தடுப்பதில் இந்த வலதுசாரி ஃபாசிசக் கும்பல் தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளது. காஷ்மீரும் மணிப்பூரும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இதுவே அபாயகரமான நிலைமையாகும். இந்தியாவில் பட்டியல் வகுப்பாகவும், பழங்குடி வகுப்பாகவும் உள்ள மக்கள் கூட்டமே பாட்டாளி வர்க்கமாகவும் உள்ளது. எனவே அவர்கள் இயல்பாகவே தங்கள்மீதான சாதி உள்ளிட்ட அனைத்துவித சுரண்டல்களுக்கும் எதிரான போர்க்குணம் கொண்டவர்களாக உள்ளனர். அவர்கள் தங்கள் விடுதலை வேட்கையால் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கங்களில் அணிதிரளத் தொடங்கினர். இந்த அணி திரட்சியானது ஆளும் வர்க்கத்தை அசைத்துப் பார்க்கத் தொடங்கியது. அதனால் ஆளும் வர்க்கம் அவர்களின் அணிதிரட்சியை தடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1990-களில் ஏற்பட்ட உலகமயமாக்கல் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையோடு புரட்சிகர மனப்பான்மையை மழுங்கடித்துத் திசைதிருப்பி தொண்டு நிறுவன அரசியலும் இந்தியாவிற்குள் நுழைந்தன. புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கங்களில் இயங்கிக் கொண்டிருந்த பட்டியல் வகுப்பு அறிவுசார் வர்க்கத்தைத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக அணுகி சொகுசு வாழ்க்கைக்கான பொருளாதாரத்தைக் கொடுத்து கம்யூனிஸ்ட்டுகள் தலித் மக்களை தங்கள் இயக்கங்களுக்குப் பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றன என்று பரப்புரை செய்து புரட்சிகர மக்களைப் புத்தரைத் தேடி அலையும் பித்தர்களாக மாற்றி அம்பேத்கரின் பெயரால் தலித் இயக்கங்கள் என்னும் பல்வேறு சிறு குழுக்களை உருவாக்கிச் சிதைத்து சின்னாபின்னமாக ஆக்கினர். தலித் அரசியல் என்னும் முட்டுச்சந்தை உருவாக்கி அவர்களைத் தேங்கி நிற்கும் குட்டைகளாக மாற்றினர். புதுச்சேரியிலிருந்து இயங்கிய நிறப்பிரிகை என்னும் சிற்றிதழை நடத்திய குழுவினரான அ. மார்க்ஸ், ராஜ்கௌதமன், ரவிக்குமார் மற்றும் கோடாங்கி சிவகாமி உள்ளிட்டோர் பின்நவீனத்துவம் என்னும் சீரழிவுக் கோட்பாட்டை தலித் மக்களுக்கு பரிந்துரைத்து 'அமைப்பே ஒரு வன்முறை' என சிதைப்புவாதம் பேசி உலகமயமாக்கலையும் தொண்டு நிறுவனங்களையும் ஆதரித்து புரட்சிகரப் பாதையிலிருந்து விலகி சுகபோக வாழ்க்கைக்கு அடிமையான ஒரு கூட்டத்தை உருவாக்கிவிட்டனர். அவர்கள் பல்வேறு தலித் அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டு பெரியாருக்கு எதிராக அம்பேத்கரை நிறுத்துவதும், கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக அம்பேத்கரை நிறுத்துவதும், பௌத்தம் தழுவுவது தலித் விடுதலை என்றும் போகாத ஊருக்கு வழிகாட்டுவதுமான புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு சங்கப்பரிவாரங்களுக்கும் பாசிச சக்திகளுக்கும் தங்களை அறியமலேயே சாமரம் வீசிக்கொண்டுள்ளனர்.

வாக்கு இயந்திரம் என்னும் மோசடியைப் பயன்படுத்தி தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்கிறது பாஜக. நாடாளுமன்ற சனநாயகத்தை நம்பி குறைந்தபட்ச உரிமைகளோடு வாழ்ந்துகொண்டிருக்கும் மக்கள் கூட்டத்திற்கு அதையும் கிடைக்கவிடாமல் செய்து சர்வாதிகார ஆட்சியைக் கொண்டுவர பாஜக முயல்கிறது. 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக வென்றால் அதுவே இந்தியத் துணைக்கண்டத்தின் கடைசி நாடாளுமன்றத் தேர்தலாக இருக்கும். வலுவான எதிர்க்கூட்டணி களத்தில் நிற்பதன் வாயிலாக பாஜகவை வீழ்த்தி இந்துப் பாசிசப் போக்கை இடைநிறுத்தலாம். ஆனால் இந்த நாடாளுமன்ற போலி சனநாயகத்தில் நீண்ட காலம் அதைத் தக்கவைக்க முடியாது. ஏனென்றால் இந்தியா உள்ளிட்ட பல்வேறு மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் எதுவாயினும் அவை கார்ப்பரேட் நிறுவனங்களின் கைப்பாவையாகச் செயல்படும் வலதுசாரி அரசுகளே ஆகும்.

கார்ப்பரேட் நிறுவனங்களை எதிர்க்கும் துணிவு கார்ப்பரேட்டுகளுக்கு மட்டுமே உண்டு. கம்யூனிஸ்டுகளை வீழ்த்தும் பலம் கம்யூனிஸ்டுகளுக்கே உண்டு. ஒரு இந்தியப் புரட்சியின் வாயிலாக இப்போது நிலவுகிற அரசுக் கட்டமைப்பு வேரோடும் வேரடி மண்ணோடும் கிள்ளி எறியப்படும்போதுதான் உண்மையாகவே பாசிசம் வீழ்த்தப்படும். மார்க்சிய, இ0லெனினிய, மாவோவிய கொள்கைகளைக் கொண்ட புரட்சிகரக் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இணைந்து ஒரு வலுவான இந்திய ஒன்றிய புரட்சிகரக் கட்சியைக் கட்டுவதன் மூலமே இதைச் சாதிக்க முடியும். இந்த இலக்கை மனதில் கொண்டு தற்போது நடைபெறவுள்ள 2024-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வாக்கு அரசியலில் நம்பிக்கை உடையவர்கள் பாஜக என்னும் பிரேக் பிடிக்காத லாரியின் தாறுமாறான ஓட்டத்தை இடைநிறுத்த எதிரணிக்கு வாக்களித்து முட்டுக்கட்டைகளைப் போடலாம். ஆனால் அந்த முட்டுக்கட்டைகளும் போகப்போக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு முட்டுக்கொடுக்கும் கட்டைகள் தான் என்பதை மறந்துவிடக் கூடாது. எனவே பாசிசத்தை வீழ்த்தும் கருவி நாடாளுமன்றத் தேர்தல் முறை அல்ல. இப்போதும் எப்போதும் ஃபாசிசத்தை வீழ்த்தும் கருவி சோசலிசமே!

# ஐயா பூசைத்துரைக்கு வீரவணக்கம்!

● வழக்கறிஞர் பூரணிமா பன்னீர்

இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கம்



சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை வட்டம், விசயபுரம், கடம்பாகுடி கிராமத்தில் வசித்து வந்தவர், தோழர் பூசைத்துரை அவர்கள். இவர் சுப்பையா-காளியம்மாள் இணையரின் மூத்த மகன் ஆவார். மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்தவர். விவசாய வேலைகளைச் செய்து முடித்துவிட்டு பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டிய சூழல் அவருக்கு இருந்தது. இளம் அகவை முதலே கடினமாக உழைத்தவர். உழைக்காமல் வாழ்வதை இழிவாகக் கருதினார். விலங்கு நிலையில் இருந்தவனை மாந்த நிலைக்கு மாற்றியது, வளர்த்தது உழைப்பு தானே!

இவரின் தாயார் காளியம்மாள் மக்களை நேசிப்பவராகச் சனநாயகப் பண்புள்ளவராக உழைப்பின் உருவாய், அன்பின் அரணாய்த் திகழ்ந்தார். கடும் வறுமையிலும் தனது பசியை அடக்கிப் பிறரின் பசியைப் போக்கிய தாய் ஆவார். முரட்டுத்தனப் பண்பைக் கொண்ட போக்கினராக இவரின் தந்தை இருப்பினும், தனது பிள்ளைகளைக் கல்வி பயில வைத்ததோடு, நல்ல மனிதர்களாக வளர்த்தெடுப்பதில் பெருமுயற்சி எடுத்தவர்.

தனது இளமைக்காலம் முதலே தோழர் பூசைத்துரை முற்போக்குச் சிந்தனைகளாலும், நாத்திகச் சிந்தனைகளாலும், ஈர்க்கப்பட்டுப் பள்ளியின் சத்துணவு அமைப்பாளராகச் சேர்ந்து பணிபுரிந்தார்.

திராவிட இயக்கங்களில் சேர்ந்து பணியாற்றத் தொடங்கினார். பகுத்தறிவாளர் கழகத்தைச் சிவகங்கை, தஞ்சை மாவட்டப் பகுதிகளில் கட்டியமைக்க பணிபுரிந்தார். மறைமலைமடிகள், பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரின் காலத்தில் தனித்தமிழ் இயக்கம் உருவானபோது தனது பெயரைத் தமிழ்மாறன் எனவும், தனது தம்பி இராமசாமி பெயரைப் பெருவழுதி எனவும் மாற்றிக் கொண்டார்.

தோழரின் குடும்பம் பெரியாருடன் நெருக்கமான உறவு கொண்ருந்தனர். தோழரின் தம்பி இராமசாமி (எ) பெருவழுதி பெரியாருடன் இருந்து அவரை பராமரித்து அவருடனே வாழ்ந்து இயக்கப் பணியாற்றியும் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வறுமையான குடும்பச் சூழலில் வாழ்ந்த போதும், திராவிட இயக்கங்களின் கூட்டங்களுக்கு நெடுந்தூரம் (50 மைல் கூட) மிதிவண்டியிலேயே சளைக்காமல் பயணம் செய்து சென்று வருவார். அவ்வாறு செல்வதைத் துயரமாக ஒருபோதும் அவர் எண்ணியதில்லை. திராவிட அமைப்புகளில் செயல்பட்டுக் கொண்டிருந்தபோது 1970 களின் இறுதியில், 1980களின் தொடக்கத்தில், அங்கு நக்சல்பாரி இயக்கம் தோன்றிச் செயல்பாட்டுக்கு வந்தபோது நக்சல்பாரி இயக்கத் தோழர்களுடன் அறிமுகமாகி அவர்களின் புரட்சிகர சிந்தனையில், கருத்தில், செயல்முறையில் ஈர்ப்பு ஏற்பட்டு அவர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

நாத்திக இயக்கங்களில், சீர்திருத்த இயக்கங்களில் அடுத்தக்கட்ட சமூக பாய்ச்சலுக்கான, அடிப்படை மாற்றத்திற்கான திட்டங்கள், செயல்முறைகள் அவற்றிடம் இல்லாததைக் கண்டார். எனவே, நக்சல்பாரி அமைப்பின் திட்டங்களையும், கொள்கைகளையும், சிந்தனைளையும் பகிரங்கமாக மேடை ஏறி மக்களிடத்தில் பிரச்சாரம் செய்தார். இதனால், இவரைச் சத்துணவு அமைப்பாளர் பதவியிலிருந்து அரசு நீக்கியது.

தனது பணி பறிபோன நிலையிலும், தனது குடும்பம் வறுமையில் வாடிய போதிலும் கூட அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தான் கொண்ட கொள்கையில் உறுதியுடன் இருந்தார், தொடர்ந்து பணியாற்றினார். விசயபுரம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 30- க்கும் மேற்பட்ட கிராமங்களில் முற்போக்கு இளைஞர் அணி,. முற்போக்கு மாணவர் சங்கம் போன்ற அமைப்புகளைக் கட்டமைத்ததோடு, உள்ளூர் ஆதிக்கச் சக்திகளை எதிர்த்து அங்குள்ள மக்களின் நடுவில் இருந்து மக்கள் கலைக் குழுவை கட்டியதில் பெரும் பங்காற்றியவார்.

அக்காலக்கட்டத்தில் புரட்சிகர அமைப்பு கட்டிட பெரும்பாலும் கிராமப் பகுதிகளுக்கு இரவு நேரங்களில் தான் தோழர்கள் செல்வார்கள். அப்படி கிராமங்களுக்குத் தோழர்களுடன் இரவு உணவின்றி பலமுறை சளைக்காமல் சென்று பிரச்சாரம் செய்து வந்தார். பின்தங்கிய, கிராமச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவராக இல்லாத நிலையிலும் கூட தீண்டாமைக்கு எதிராகவும், சாதிக் கொடுமைக்கு எதிராகவும், பெண் அடிமைத்தனத்திற்கும் எதிராகவும் போராடி வந்தார்.

அவர் வசித்த கிராமப் பகுதிகளில் நிலவி வந்த தனிக்குவளை முறை மற்றும் அங்கு நிலவி வந்த நாடு, சேர்க்கை போன்ற கூட்டமைப்பின் செயல்பாடுகள், தவறுகள், கொடுமைகள், போன்றவற்றை வெளிப்படையாக எதிர்த்ததோடு அதனைப் புரட்சிகர இயக்கத் தோழர்களுடன் இணைந்து தட்டிக்கேட்டதிலும் பெரும்பங்காற்றினார், தலைமைப் பணியாற்றினார்.

மேலும், அப்பொழுது அங்குக் குற்றங்களுக்கு விதிக்கப்படும் அபராத தொகையைக் குறைப்பதற்காக தண்டம் எடுக்கும் முறையை அங்குள்ள ஆதிக்கச் சக்திகள் நிறுவி வந்தனர். அபராதத் தொகை செலுத்த இயலாத ஏழை, எளிய மக்கள் அவர்களின் அபராதத் தொகையைக் குறைப்பதற்காகக் கீழே விழுந்து எழுந்து கும்பிட வேண்டிய முறை இருந்தது. எவ்வளவு ரூபாய் அபராதம் விதிக்கப்படுகிறதோ அத்துணை முறையும் அவர்கள் கீழே விழுந்து எழுந்து கும்பிட வேண்டும். இப்படிப்பட்ட கொடூரமுறை அங்கு நிலவி வந்தது. இந்தக் கொடூரத்தைப் புரட்சிகர இயக்கத் தோழர்களுடன் இணைந்து நேரடியாக ஆதிக்கச் சக்திகளுடன் மோதி, போராடி இம்முறையை அழித்தொழித்ததில் தோழர் பூசைத்துரை அவர்களின் பங்கு பெரும்பங்காகும்.

மேலும், அங்குள்ள ஆதிக்கச் சக்திகள் மக்களின் விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய கண்மாயை இரண்டாகத் தடுத்து, எளிய மக்களின் விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் செல்லுகின்ற மடையை அடைத்துத் தண்ணீர் செல்லாதவாறு தடுத்து நிறுத்தினர். இப்படிப்பட்ட, கொடுமைகளையெல்லாம் தோழர் பூசைத்துரை அவர்கள் சிறுவத்தி, விசயபுரம் பகுதி தோழர்களான மணி, இராமசாமி, ஆறுமுகம், போஸ் ஆகிய தோழர்களுடன், பொறியாளர்கள் தோழர் கேசவன் மற்றும் தோழர் இராஜாராம், அவரின் மனைவி தோழர் கமலா, மகள் தோழர் செங்கொடி ஆகியோருடன் கிராமப் பொதுமக்களையும், பெண்களையும் அணிதிரட்டிக் கண்மாயின் அடைப்பை வெட்டி, உடைத்தெறிந்து தண்ணீர் போக வழி செய்தனர். இதில் பெரும்பங்காற்றியவர் தோழர் பூசைத்துரை அவர்கள்.

அறிதலுக்கும், அறியாமைக்கும் இடையிலான போராட்டத்தின் மூலமே அறிவின் வளர்ச்சி நடைபெறுகிறது. அதிக அறிதலைக் கொண்டவர்கள் புதிதாகத் தோன்றிய அறியாத புதிய சூழல்கள் தோன்றும் போதெல்லாம் அதன் சாரத்தைக் கண்டறிந்து, புரிந்து ஒழுங்கப்படுத்துவதில் முன்ணனியாகத் திகழ்ந்தார். எனவே, மக்கள் தங்கள் பிரச்சனைகளுக்கு இவரிடம் ஆலோசனைக் கேட்பதில் அதிக ஆர்வம் காட்டுவர்.

தோழர் பூசைத்துரையை ஒரு தகவல் களஞ்சியம் என்றே சொல்லலாம். புத்தகம் வாசிப்பதில் அதிக நாட்டம் கொண்ட அவர் சங்க இலக்கியங்கள், கழக இலக்கியங்கள், வரலாறு, அரசியல், தத்துவம் போன்று ஏராளமான நூல்களை வாசித்து அதில் புலமை கொண்டவராக இருந்தார். புரட்சிகர நக்சல்பாரி அமைப்புத் தோழர்களுடன் இணைந்து செயல்பட்ட காலகட்டத்தில் அத்தோழர்களையும், அமைப்பையும் இரகசியமாகப், பாதுகாப்பதில் சிறப்புடன் செயல்பட்டவர் தோழர் பூசைத்துரை அவர்கள்.

அந்தப் பகுதியில் கட்டப்பஞ்சாயத்திற்கு எதிராகவும், சாதி ஆதிக்கத்திற்கு எதிராகவும், கிராமப்புற எதேச்சதிகாரத்திற்கு எதிராகவும், கிராமப்புற ஒடுக்கப்பட்ட விவசாயிகளைத் திரட்டி ஒரு பெரிய ஆர்ப்பாட்டம், கிளர்ச்சியும் இரண்டு பொறியாளர்களுடன் தோழர்கள் சிறுவத்தி மணி, விசயபுரம் ராமசாமி, ஆறுமுகம், தோழர் பூசைத்துரை ஆகியோரின் பங்கும் பெரும்பங்காக இருந்தது.

அறிதல் இன்றி, சரியான தகவலின்றி ஏற்படும் தவறுகளைக்கூட பின்பு, தவறென்று தெரியவந்தால் வெளிப்படையாகத் தான் செய்தது தவறென்று ஒப்புக் கொண்டு தவறுகளை மகிழ்ச்சியுடன் மாற்றிக் கொள்ளும் தயக்கமற்ற சிறந்த பண்பாளர் ஆவார்.

மனிதனின் தனிப்பட்ட நலன், மனிதகுலத்தின் நலனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும் என்பது மார்க்சிய மெய்யியல் என்று அறிவதற்கு முன்னரே, அவர் அதைத் தன் வாழ்க்கையில் கடைபிடித்து அதன்படி வாழ்ந்தவர்; மற்றவர்களும் வாழ வழி காட்டியவர்; வற்புறுத்தியவர்.

ஒருவரின் சொல்லும், செயலும், செயல்வடிவமும்தான் மக்களிடத்தில் அவரைப் பற்றிய மதிப்பீடாக மாறுகிறது .அப்படித் தன் சொல்லாலும், செயலாலும், செயல் வடிவத்தாலும் மக்களிடத்திலும் சிறந்த, உயர்ந்த மதிப்பைப் பெற்றிருந்தார் தோழர் பூசைத்துரை அவர்கள்,

தோழர் பூசைத்துரை அவர்கள் தன் வாழ்நாள் முழுவதும்

- இனங்களுக்குத் தேவை சுதந்திர அரசு
- இனங்களின் கட்டுப்பாட்டில் மத்திய அரசு
- மக்களவைக் கலைக்கப்பட வேண்டும்
- மாநிலங்களவையில் இருந்தே மந்திரிசபை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்
- அனைத்து விவசாய விளைபொருட்களுக்கும் அரசே நில வாடகையுடன் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்
- அனைத்து விவசாய விளை பொருட்களையும் அரசே கொள்முதல் செய்ய வேண்டும்
- அந்நிய உள்நாட்டு ஏகபோக முதலாளிகளின் பிடியிலிருந்து விவசாயத்தை மீட்டெடுக்க வேண்டும்
- நவீன பெருவீத இயற்கை வேளாண்மைக் கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்கி விவசாய வருமானத்தைப் பல மடங்கு அதிகரிக்கப் போராடுவோம்.

என்ற முழக்கங்களைச் சாதிப்பதையே தன் வாழ்நாள் இலட்சியமாக, உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார் தோழர் பூசைத்துரை அவர்கள்.

சாதி சமத்தவத்திற்கு மட்டும் போராடுவது என்கிற கட்சிகளின், சாதி சங்கங்களின் நிலைப்பாட்டை வெறுத்தார். சாதி, சாதியாய் வாழ்வதற்கும் , சாதிக்குள் திருமண முறை (அகமண முறை) தொடர்வதற்கும் அடித்தளமாய் இருப்பது சிறுவீத உற்பத்தியே ஆகும். எனவே, இதை மாற்றி மாநிலங்கள் சுதேசி தொழில் மயமாக்கப்பட்டால் விவசாயம் அனைத்தும் விவசாயிகளின் பெரும் கூட்டுறவு பண்ணைகள் ஆக்கப்பட்டால் சாதி சாதியான குடியிருப்புகளும்(கிராமங்கள்), அதற்குள் குலங்கள் வாழும் முறை தொடர முடியாது. அதனால், அகமண முறை ஒழிந்து சாதி சனியன், சாபம் என்பதை ஆழமாக உணர்ந்து சாதி முறையோடு இங்குள்ள உற்பத்தி முறையிலும் அடிப்படை மாற்றம் கொள்ள பாடுபட்டார். இப்படியெல்லாம் தனது வாழ்வை ஒரு சமூக மாற்றத்திற்காக, அடுத்தக்கட்ட பாய்ச்சலுக்காக அர்ப்பணித்த தோழர் பூசைத்துரை அவர்கள் கடந்த பிப்ரவரி 26 அன்று தான் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்.

தான் வாழும் போதும் மட்டுமல்ல வாழ்க்கைக்குப் பின்னும்கூட எப்படி இருக்க வேண்டும் என்று வழிகாட்டும் விதமாகத் தனது இறப்புக்குப் பின்னர் தனது உடலை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் உடல்தானம் செய்ய வேண்டும் என்ற தன் விருப்பத்தைத் தனது குடும்பத்தினரிடம் தெரிவித்தார்.

அதன்படியே சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவருடைய உடலை உடற்கொடையாக வழங்கினர்.

(குறிப்பு: தோழர் பூசைத்துரை அவர்களின் வாழ்வில் இருந்து நாம் கற்றுக் கொள்ள ஏராளமான விடயங்களை விட்டுச் கொண்டுள்ளார். தோழரின் வாழ்வு குறித்த விரிவான விளக்க தொகுப்பு நூல் விரைவில் வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்)